

# செங்காந்தள் - சங்க இலக்கியங்களில் தாவரங்கள்

முனைவர் ஆ. தனலெட்சுமி

புத்தகக்குறிப்பு

9 788199 792890



# செங்காந்தள் - சங்க இலக்கியங்களில் தாவரங்கள்

## Title Verso

**Title of the Book** : **Chenkaantal - Sanga Ilakiyangalil Tavarangal**

**புத்தகத்தலைப்பு** : **செங்காந்தள் - சங்க இலக்கியங்களில் தாவரங்கள்**

**Editor** : **Dr. A. Dhanalakshmi**

**பதிப்பாசிரியர்** : **முனைவர் ஆ. தனலெட்சுமி**

**First Edition** : March 2026

**Pages** : 107

**Price** : 350

**ISBN Number** : 978-81-997928-9-0

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar - 626001,
Tamil Nadu, India.

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar - 626001,
Tamil Nadu, India.

**பதிப்புரிமை / Copyright © 2026 கட்டுரையாளர்களுக்கு /Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது. தேனைப் பருக

வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# செங்காந்தள் புத்தகப் பகுதி

## Editorial Board / ஆசிரியர் குழு


**முனைவர் முனைவர் த. மகேஸ்வரி,**
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:** https://pandianeducationaltrust.com/

**முனைவர் ஆ. ஆனந்தி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே. வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://sites.google.com/vvvcollege.org/ananthi/e-content

**முனைவர் ஜெ. பா. சாம் செல்வகுமார்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா. ம. ச. ச. வெ. நா. கல்லூரி,
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://www.nmssvnc.edu.in/department/11/tamil#faculty

**முனைவர் அ. ராஜலட்சுமி,**
உதவிப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,
கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://kongunaducollege.ac.in/users/arajalakshmi

**முனைவர் பெ. சுபா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சிந்திக் கல்லூரி, சென்னை,
தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://www.sindhicollege.in/faculty_tamil.php

**முனைவர் த. சமுத்திர ராஜ்,**
தமிழ் உதவிப்பேராசிரியர்,
அறிஞர் அண்ணா கல்லூரி, போலுப்பள்ளி,
கிருஷ்ணகிரி, தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://www.aackrishnagiri.in/faculties/tamil.php

**முனைவர் அ. அக்ஸிலியா மேரி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://www.auxiliumcollege.edu.in/Home/DepartmentContent?sDepartmentId=1#gallery-33

**முனைவர் மு. இராஜலெட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:**
https://caussanelcollege.com/Department.aspx?DEPTID=DE0001

**முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட் ராணி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சூசைபுரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.

**இணையதள முகவரி:** https://stalphonsa.edu.in/public/faculty-list

**திருமதி பா. பத்ரகாளி,**
உதவிப்பேராசிரியர், மொழித்துறை,
ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குனியமுத்தூர், கோயமுத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**இணையதள முகவரி:** https://skasc.ac.in/discipline/arts-humanities/faculty-directory/

## ஆசிரியர் குழு பணி விவரம்

இந்த சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

## Editorial Work Flow Details

This Editorial committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

# மதிப்புரை

**மனிதர்களின்றி மரங்களால் வாழ முடியும்**
**மரங்களின்றி மனிதர்களால் வாழ முடியாது**

தமிழர்கள் இயற்கையின் தன்மையை நன்கு உணர்ந்து இருந்தனர். ஐவகையாக நிலங்களைப் பிரித்து அதற்குரிய வளத்தின் தன்மைக்கேற்ப தாவரங்களைப் பயிரிட்டு வளர்த்ததுடன், மரங்களையும், செடி, கொடிகளையும் பாதுகாக்கும் பண்புடன் திகழ்ந்தனர். அவற்றை உறவுமுறைகளாகவும், தெய்வ நிலையில் உயர்த்தியும் போற்றி வந்தனர். இன்று நாம் அதை மறந்து விட்டு வாழ்வதால் வாழ்வாதாரம் நலிந்து போனதுடன், பல நோய்களுக்கும் ஆட்பட்டுவிட்டோம். பண்டைய தமிழரின் மாண்பினை நினைவூட்டும் சிறு முயற்சியாக **“செங்காந்தள் - சங்க இலக்கியங்களில் தாவரங்கள்”** எனும் தலைப்பில் இப்புத்தகப் பகுதிஅமைகிறது.

**“நற்றிணையில் காணலாகும் தாவர வகைகள்”** எனும் தலைப்பில் **முனைவர் மு.உஷா** அவர்கள், நற்றிணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தாவர வகைகளை வரிசைப்படுத்தி, அவைகள் மானிட வாழ்வியலில் பெறும் இடத்தினை நிரல்படுத்தியுள்ளார். நற்றிணையில் இடம் பெறும் பூக்களின் சிறப்புகளையும், அவை பெண்களால் சூடப்படும் அழகியலையும், பூக்கள் பூத்துக் குலுங்கும் குளிர்மைக் காட்சிகளையும் படம் பிடித்துக் காட்டியமை அருமை. பூக்களின் பெயர்களைப் பட்டியலிட்டு ஒவ்வொரு பூவும் இலக்கியப் பாடல்களில் கையாளப்படும் உவமை நயத்தினைக் காட்சியாகக் கண் முன்னே நிறுத்தியதுடன், மாமரம், ஆலமரம், மூங்கில், சந்தனமரம், புன்னைமரம் மற்றும் வேங்கைமரம் என நம்

சந்ததிகள் மறந்து போன மர வகைகளை நமக்கு நற்றிணை வாயிலாக நினைவூட்டியமை நலம் பயக்கும்.

**முனைவர் சு. சுந்தரன்** அவர்கள், **“தமிழர் மரபில் தாவரங்கள்”** எனும் தலைப்பின் கீழ் தாவரங்கள் மரபு வழி போற்றப்பட்ட விதத்தினை அழகுற தெளிவுப்படுத்தி இருக்கின்றார். திணைக் கோட்பாட்டின் அடிப்படையில் தொல்காப்பியர் நிலப்பாகுபாடு செய்த, அதற்குரிய தாவரங்களை வகைப்படுத்தி பிரித்துக் காட்டிய நுணுக்கத்தையும், அகத்திணைக் குறியீடுகளையும் விளக்கி காட்டியுள்ளார். அன்றாட வாழ்வில் தாவரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களைப் பயன் படுத்துவதையும், தாவரப் பொருட்களின்றி நம்மால் இயங்க முடியாத நிலையையும் சுட்டிக் காட்டியுள்ளார். தாவரப் பொருட்கள் அடிப்படைத் தேவைகளைக் கடந்து, நம் சடங்குகளிலும், நம்பிக்கைகளிலும் முதலிடம் பெற்றுத் திகழ்வதை முன்னிறுத்தியுள்ளார். பல வகையான மரங்கள் இலக்கியங்களில் பெற்றுள்ள இடத்தினையும், அந்தந்த மரங்களின் இயல்புகளையும் எடுத்தியம்பி, ‘‘மரங்கள் நம் உறவுகள்’’ என நிலைநாட்டியள்ளார்.

**“சங்க இலக்கியத்தில் தாவர வளம்”** எனும் தலைப்பில் **முனைவர் அ. ரஞ்சனி** அவர்கள், மானிட வாழ்வில் தாவரங்கள் பெறும் பங்கினை விவரித்துள்ளார். தமிழர் தாவரங்கள் குறித்து ஆழமானப் புலமைப் பெற்றிருந்தனர். தாவரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மண்ணை பூமி தாயாக வழிபாடு செய்தமை, வேளாண் தொழிலில் பயன்படுத்திய தொழிற் நுட்பத் திறன்கள் ஆகியவற்றை வரையறை செய்தமை நம்மால் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். நிலங்களை ஐந்தாகப் பகுத்து ஒவ்வொரு நிலத்திலும் வளரும் செடி, கொடி, மரங்களை வரிசைப்படுத்தியதோடு, அவைகளின்

பயன்பாட்டினை விளக்கி கூறியமை மிகவும் பயனுள்ளதாக அமைந்தள்ளது. தாவரங்களிலிருந்தே உணவு, உடை மற்றும் இருப்பிடம் என அடிப்படை வசதிகளும், நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கான மருந்துகளும் நமக்கு கிடைக்கின்றன என்பதை உணர்த்தி, தாவரங்கள் நம் பண்பாட்டின் அடையாளம் என்பதையும் பதிவு செய்தமைப் போற்றுதலுக்குரியதாகும்.

**முனைவர் து. விஜயராணி** அவர்கள், **"தாவரங்களைப் பாதுகாக்கம் தமிழர் பண்பாடு"** எனும் தலைப்பின் கீழ் பழந்தமிழர் இயற்கையை நேசித்தமையையும் பேணியமையையும் பண்பாடோடு தொடர்புப்படுத்தி எடுத்துக்காட்ட முனைந்துள்ளார். தாவரங்கள் மனித வாழ்வின் அங்கமாக அமையாமல் ஆணிவேராக அமைந்தமையை மையப்படுத்தி, நிலப்பகுப்பு மற்றும் தாவர வாழ்வியல் ஆதாரங்களை பாதுகாப்பதற்குப் பண்பாடே மூல ஊற்றாக விளங்குவதை வழிமொழிந்துள்ளார். நீர்நிலைகளில் வளரும் மலர்களின் மருத்துவப் பண்புகளைப் பெண்களின் மென்மைக்கும், குளிர்ப் பார்வைக்கும் ஒப்பிட்டுப் காட்டி, பெண்களை மேன்மைப்படுத்தி இருக்கின்றார். மரங்களில் ஆண்மரம், பெண்மரம் என்ற பகுப்புகள் இருந்தமையைக் கண்டுணர்ந்த திறனையும் கூறி, பலவகை மரங்களின் தன்மைகளை இலக்கியச் சான்றுகளுடன் இயம்பியமைச் சிந்தித்தற்குரியதாகும்.

**நன்றி.**

**முனைவர் ஆ. தனலெட்சுமி ,**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி.**

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | நற்றிணையில் காணலாகும் தாவர வகைகள்<br>முனைவர் மு. உஷா | 1-27 |
| 2. | தமிழர் மரபில் தாவரங்கள்<br>முனைவர் சு. சுந்தரன் | 28-50 |
| 3. | சங்க இலக்கியத்தில் தாவர வளம்<br>முனைவர் அ. ரஞ்சனி | 51-81 |
| 4. | தாவரங்களைப் பாதுகாக்கும் தமிழர் பண்பாடு<br>முனைவர் து. விஜயராணி | 82-107 |

# Plant Varieties found in *Natrinai*

**Dr. M. Usha,** Assistant Professor of Tamil,
Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0007-3420-9338**

## Abstract

*The Tamils from very ancient times lived a life in harmony with nature. They worshipped nature as divine. The thoughts, words, actions, beliefs, and ways of life of the people of that era were all in consonance with nature and flourished in unity with it. They found joy in the sun, the moon, trees, plants, creepers, and flowers, and in turn shared that joy with others. It may be said that this elevated phase, when people deeply loved nature, corresponds to the Sangam period, which dates back roughly two thousand years. During the Sangam age, numerous literary works were composed by poets. Sangam literature is not merely a repository of poetic richness or emotional expression; it also serves as a mirror of society. In particular, Natrinai, one of the Akam (interior) genres, documents the subtleties of everyday life, the relationship with nature, and the complexities of human emotions. Through these, it indirectly reveals the scientific, technological, and medical knowledge of that society. The natural beauty portrayed in Natrinai not only provides pleasure but also supports life, embodies purity, and sustains existence. Recognising this, people derived practical benefits from trees, plants, creepers, and flowers. Although no direct medical treatises from the Sangam period have been*

 **ISBN: 978-81-997928-9-0**

*preserved, the scattered references found in these poems help us understand how people of that time approached diseases and injuries, the treatments they employed, and the hygienic practices they followed. This study seeks to examine in detail how this literary work illuminates the medical knowledge of the Sangam age.*

**Keywords:** Moval, Punnai, Banana, Nettle, Paganrai, Konnai, Bichi, Mango, Neem, Jackfruit.

## References

[1] Ilampuranar. *Tolkappiyam Thelivurai*. Manivasagar Pathippagam, Chennai, 1999.
[2] Avvai Duraisamy Nattar. *Purananooru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.
[3] Avvai Duraisamy Nattar. *Agananooru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.
[4] Narayanavelu Pillai, M. *Pathinen Kilkanakku Noolgal*. Narmadha Pathippagam, 2023.
[5] Puliyur Kesigan. *Thirukkural (Urai)*. Poompuhar Pathippagam, Chennai, 2009.
[6] Avvai S. Duraisamy. *Natrinai*. Gowra Pathippagam, Chennai, 2006.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# நற்றிணையில் காணலாகும் தாவர வகைகள்

**முனைவர் மு. உஷா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-3420-9338**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். இயற்கையைத் தெய்வமாக வணங்கினர். அக்கால மக்களின் எண்ணம் - சொல் - செயல் - நம்பிக்கை – வாழ்வியல் நெறிகள் யாவுமே இயற்கையுடன் பொருந்திப் பொலிந்தவையாகவே இருந்துள்ளது. சூரியன், சந்திரன், மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள் ஆகியவற்றை நோக்கித் தாமும் மகிழ்ந்து மற்றையோரையும் மகிழ்வித்திருக்கின்றனர். மக்கள் இயற்கையை நேசித்த உயர்வான காலம் இற்றைக்குச் சற்றேறத்தாழ இரண்டாயிரமாண்டிற்கு முற்பட்ட காலமான சங்க காலம் எனலாம். அந்த சங்க காலத்தில் இலக்கியங்கள் பல புலவர்களால் இயற்றப்பட்டன. சங்க இலக்கியம் என்பது வெறும் கவித்துவ வளம் அல்லது உணர்ச்சிப் பெருக்கின் களஞ்சியம் மட்டுமல்ல; அது சமூகத்தின் ஒரு கண்ணாடியாகவும் விளங்குகிறது. குறிப்பாக, 'நற்றிணை' போன்ற அகத்திணைப் பாங்குகள், அன்றாட வாழ்வின் நுணுக்கங்களையும், இயற்கையுடனான உறவையும், மனித உணர்வுகளின் சிக்கல்களையும் ஆவணப் படுத்துவதன் மூலம், அச்சமூகத்தின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ அறிவை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றன. நற்றிணையில் காட்டப்படும்*

 **ISBN: 978-81-997928-9-0**

*இயற்கை எழிலானது மக்களுக்கு இன்பந்தருவது, வாழ்விற்கு துணை நிற்பது, தூயது, வாழ்வளிப்பது என்பதையுணர்ந்து மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள் ஆகியவற்றால் பயனும் அடைந்தனர். சங்க காலத்திலிருந்து நேரடியான மருத்துவ நூல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும், இக்கவிதைகளில் சிதறிக் காணப்படும் குறிப்புகள், அக்கால மக்கள் நோய்களையும் காயங்களையும் எவ்வாறு அணுகினார்கள், அவர்கள் கையாண்ட சிகிச்சை முறைகள், மற்றும் அவர்கள் கடைப்பிடித்த சுகாதாரப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாம் புரிந்துகொள்ள உதவுகின்றன. இந்த இலக்கியப் படைப்பு, சங்க காலத்தின் மருத்துவ அறிவை எவ்வாறு ஒளிரச் செய்கிறது என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** மௌவல், புன்னை, வாழை, நெய்தல், பகன்றை, கொன்றை, பிச்சி, மா, வேம்பு, பலா.

## முன்னுரை

சங்க இலக்கியம் பழந்தமிழரின் வாழ்வியல், பண்பாடு மற்றும் இயற்கை மீதான ஆழ்ந்த புரிதலை வெளிப்படுத்துகின்றது. அவை ஒரு பின்னணியாக இல்லாமல், கதையின் மையமாகவும், குறியீடாகவும், அன்றாட வாழ்வின் இன்றிமையாத அங்கமாகவும் திகழ்கின்றது. உலகத்தில் ஆற்றல் மிகு இயற்கைக் கூறுகளும் அவற்றின் இயக்கமும் வாழும் உயினங்களும் மனிதர்களால் போற்றுதலுக்கு உரியதாக இருக்கின்ற பொழுது நம் முன்னோர்கள் சீரான, செம்மையான, வளமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். இயற்கையின் இயக்கமும் உயிரினங்கள் இனிதே வாழத் துணை

 ISBN: 978-81-997928-9-0

செய்வதோடு மக்களுக்கு வழிகாட்டி வழி நடத்தும் வகையில் வழங்கும் அறிவரைகள் அளவிடற்கரியவனாக இருந்தன. இங்ஙனம் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த நம் சங்ககால புலவர்கள் தங்களது பாடல்களில் மரங்கள், செடிகள், பூக்கள் குறித்த செய்திகளை பதிவு செய்திருக்கின்றனர். இக்கட்டுரையில் எட்டுத்தொகை நூலான நற்றிணையில் காணலாகும் தாவரங்கள் குறித்த செய்திகளைக் காணலாம்.

**நற்றிணை**

எட்டுத்தொகை நூல்களில் ‘நல்’ என்ற அடைமொழி பெற்ற நூல் நற்றிணையாகும். அக்கால சமூகத்தின் பல்வேறு பல்வேறுஅம்சங்களைப் பற்றிய தகவல்களை இந்நூல் அளிக்கின்றது. மன்னர்களின் ஆட்சி, கொடைத்தன்மை, நம்பிக்கைகள், இசைக்கலை, தனிமனித ஒழுக்கம், குடும்பம், சமூகம் ஆகியவற்றை அழகாக எடுத்தியம்புகின்றது. இயற்கைக் குறித்த செய்திகளையும் சுட்டுகின்றது. நற்றிணையில் பலவகையான தாவர வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை சங்ககால மக்களின் அன்றாட வாழ்க்கை, மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழலை வெளிப்படுத்துவதோடு மௌவல், புன்னை, வாழை, நெய்தல், பகன்றை, கொன்றை, பிச்சி, மா, வேம்பு, பலா போன்ற பலவகையான தாவரங்களையும் குறிப்பிடுகின்றன. இதிலிருந்து நம் சங்ககால மக்கள் தாவரங்களை தங்கள் வாழ்க்கையோடு இணைத்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.

**பூக்கள்**

மழைநீர் பெய்த பின், அந்தநீரின் பயன்பெறும் நிலங்களின் அமைப்பின் படியே நிலங்கள் பாகுபடுத்தப்

 ISBN: 978-81-997928-9-0

பட்டிருந்தது. இருப்பினும் அந்நிலங்களின் பெயர்கள் பூக்களின் பெயர்களாக, அதுவும் அந்தந்த நிலங்களில் பூத்துக்குலுங்கும் பூக்களின் பெயர்களாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இதிலிருந்து தமிழர்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே பூக்களுக்கு இன்றியமையாத இடம் அளித்திருந்தனர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

அழகிய பூக்களும், இனிய கனிகளும் வித்தாகி வீழ்ந்து மறுபடியும் செடியாகி மீண்டும் மறு தலைமுறைப் பூவாய்ப் பூத்துக் குலுங்கும் நிலைக்குக் காரணமாக அமைவது பூக்கள்தான். ஒவ்வொரு தாவரமும் இனவிருத்தி செய்வதற்கு அடிப்படைக் காரணமாக அமைவதும் பூக்கள்தான். எனவே தான் தமிழர்கள் தங்கள் நிலங்களுக்கு அங்கு விளைந்த பூக்களின் பெயர்களை வைத்து சிறப்பித்தார்கள்.

தொல்காப்பியத்தில் தமிழர் பண்பாட்டின் சிறப்புகளையும் இயற்கையின் தன்மைகளையும் தொல்காப்பியர், “இயற்கைப் பொருளை இற்றெனக் கிளர்த்தல்” (தொல். அகத்., நூ. 964) வேண்டும் என்கின்றார். அதாவது ஓர் இயற்கைப் பொருளின் பெயரினை அதனது தன்மை, பண்பு, நிறம் ஆகிய குணங்களை அடிப்படையாகக் கொண்டே பெயரிட்டுச் சொல்ல வேண்டும் என்கின்றார். சான்றாக வெண்மை நிறங்கொண்ட தாமரையை வெண்தாமரை என்றும் செந்நிறமான தாமரையைச் செந்தாமரை என்றும் நம் மக்கள் அழைக்கின்றனர். மரம், செடி, கொடி பூத்துக் குலுங்கி தம் இனவிருத்தி செய்தது போலவே மனித வாழ்விலும் இனவிருத்திக்குக் காரணமாக அமைந்த நிகழ்வினைப் ‘பூப்படைதல்’ என்ற சொல்லால்

 ISBN: 978-81-997928-9-0

குறிப்பிடுவதிலிருந்து தமிழரின் நுண்ணறிவை நம்மால் அறிய முடிகின்றது.

**நற்றிணையில் பூக்கள்**

தலைவன் பிரிவால் துயருற்ற தலைவியைக் கண்ட நற்றாய் தன் மகள் முருகனால் அயருற்றாள் என எண்ணுகின்றாள். இது முருகனால் அல்ல. தலைவனால் உண்டானது என்று கூறி சூரர மகளிர் சூடிய பூக்களையும் முருகன் சூடிய மலரினையும் தோழி கூறுவதாக நற்றிணைப் பாடல் அமைகின்றது. இதனை,

**"பறியாக் குவளை மரரொடுகாந்தட்**
**குருதிஒண் பூ உருகெழக் கட்டி,**
**கார் நறுங் கடம்பின் கண்ணிசூடி"**

**(நற்றிணை–34, 2-4)**

எனும் பாடல் எடுத்தியம்புகின்றது. தலைவன் தலைவியை ஊடலுக்குப் பிறகு சந்திக்கும் போது, அவளுடைய கூந்தல் வண்டுகள் மொய்க்கும் முண்டகப்பூ சூடிய ஐம்பால் கூந்தலாக இருக்கின்றது என்று கூறுகின்றான். முண்டகம் என்பது கழிமுள்ளியாகும். கழிமுள்ளி என்பது கழுதைப்பிடி அல்லது கழுதை முள்ளி என்றும் அழைக்கப்படும் பூவகைத் தாவரமாகும். இது கடலோரப் பகுதிகள், உப்பங்கழிகள் மற்றும் மணல் மேடுகளில் வளரும். இதனை சங்ககால மக்கள் பூவாகவும் நோயைக் குணப்படுத்தும் மூலிகையாகவும் பயன்படுத்தினர். நெய்தல் நிலத் தாவரமாகவும் விளங்கியது. இதனை,

**"அணிமலர் முண்டகத்து ஆய் பூங்கோதை**
**மணிமருள் முண்டகத்து ஆய்**
**பூங்கோதை" (நற்றிணை–245, 2-3)**

எனும் பாடல் கூறுகின்றது. முண்டகப் பூவினை மற்றொரு பாடல்,

 **ISBN: 978-81-997928-9-0**

**“என் நோக்கினளே அன்னம் நாளை**
**மணிப்பூ முண்டகம் கொய்யேன்**
**ஆயின்”(நற்றிணை–191, 8-9)**

எனும் வரிகளால் எடுத்தியம்புகின்றது. இச்செறிப்பில் உள்ள தலைவி, நாளைக் கழிக்கரையிலுள்ள நீலமணி போன்ற மலா்க் கொய்யாவிட்டால் தன் அழகு இருக்காது என்று தோழியிடம் கூறுகின்றாள்.

**நெய்தல்**

சங்ககால இலக்கியத்தில் பெண்களின் கண்களை நெய்தல் பூக்களோடு ஒப்பிட்டு கூறினார்கள். இதனை நெய்தல் நிலப் பாடல் கூறுகின்றது. ஒளியுள்ள நெற்றியையுடைய மகளிர் சிறந்த உப்பங்கழியினில் பறித்த நறுமணம் கமழும் நெய்தல் மலர்கள், பெண்களின் கண்களைப் போல அழகுள்ளன என மருதனிளநாகனார் கூறுகின்றார். இதனை,

**“ஒள்நுதல் மகளிர் ஓங்கு கழிக்குற்ற**
**கண்நேர் ஒப்பின கமழ்நறு நெய்தல்”**
**(நற்றிணை–283, 1-2)**

எனும் பாடல் தெரிவிக்கின்றது. நற்றிணைப் பாடல் போலவே திருக்குறளில் திருவள்ளுவரும் பெண்களின் மென்மைத் தன்மைக்கு எடுத்தக்காட்டாக அனிச்ச மலரினைக் கூறுகின்றார்.

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து” (திருக்குறள்-90)**

விருந்தினர்கள் அனிச்சமலரோடு ஒப்பிடப்பட்டு நம் முகத்தில் வேறுபாடு கண்டு அவர்கள் வாடி விடக்கூடாது என்றும் மிகமிக மென்மையான பெண்களுக்கு அனிச்சம் மலரும் அன்னத்தின் இறகுகளும் கூட நெருஞ்சிமுள் போல துன்பம் தருவதாக இருக்கும்

 **ISBN: 978-81-997928-9-0**





என்றும் கூறுகின்றார். அரசன் குடிமக்களிடம் இருந்து வரிவசூலிக்கும் போது பூக்களிடம் இருந்து தேனை வண்டுகள் எடுக்கும் போது அந்தப் பூவிற்கு எவ்விதமான துன்பமும் ஏற்படாதவாறு எடுக்குமோ அதுபோல் வரிவசூலிக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

**பகன்றைப்பூ**

சங்க இலக்கியத்தில் பகன்றைப்பூ என்பது ஒரு கொடியின் வெண்ணிற மலரினைக் குறிக்கின்றது. முன்பனி காலத்தில் மாலை நேரங்களில் பூத்திருக்கின்றது. நற்றிணையில் இப்பூக்குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. தலைவன் அற்சிரக் காலத்தில் தலைவியை பிரிந்து, பின்பு இளவேனிற் காலத்தில் மீண்டும் வருகின்றான். இதனைத் தோழி தலைவியிடம் பகன்றைமலர் கூறுகின்றாள். கோங்கம் என்பதும் ஒரு மலராகும். இப்பூ தங்கநிறத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

இதனை,

**“பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும்**
**கடும் பனி அற்சிறம்,நடுங்க, காண்தகக்**
**கை வல் வினைவன் தையுபு சொரிந்த**
**கோங்கம் குவி முகை கவிழ” (நற்றிணை, 86, 3–7)**

எனும் பாடல் எடுத்தியம்புகின்றது.

பூக்கள் தமிழரது அகவாழ்வு மட்டுமின்றி புறவாழ்விலும் இன்றியமையாத இடம் வகித்தது. நொச்சி, வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய அனைத்தும் பூக்களின் பெயராகும். போர்க்களத்தில் அடையாள பூக்களாகவும் இருந்துள்ளன. நொச்சிப் பூவினை ஒருவன் சூடிவந்தால் மாற்றான் நம்மீது படையெடுத்து வந்துள்ளான் என்பதை அறிந்துக்

 **ISBN: 978-81-997928-9-0**

கொள்ளுதல் வேண்டும். இறுதியில் வாகைப்பூ சூடிவந்தால் வெற்றிப் பெற்றவனாக அறியப்படுவான். இதிலிருந்து அடையாளப் பூக்களே போர்ச் செயல்களை அறிவுறுத்தும் தன்மையவனாகவும் அடையாளங்மாகவும் அமைந்தன என்பதை அறிய முடிகின்றது.

**கொன்றை மலர்**

கொன்றைமலர் இலக்கியங்களில் பல காட்சிகளிலும், அழகியல் உவமைகளிலும் இடம் பெற்றுள்ளது. இது பெரும்பாலும் கார்காலத்தில் பூக்கக்கூடியது. மஞ்சள் நிறத்தில் சரம் சரமாகப் பூத்து, காட்டின் அழகை மெருகூட்டும். தலைவியின் கூந்தலில் சூடப்படும் பொன்னான பொருளைப் போல கொன்றைப்பூவும் அழகாக உவமைப் படுத்தப் படுகின்றது. கார்க்காலத்தில் கொன்றைமலர் மலரும்காலத்தில் வருவேன் என்று கூறிய தலைவன், தலைவியை பிரிந்து செல்லுகின்றான். மழை பெய்து கொன்றைப் பூக்கள் பூத்து காடுகளை அழகு செய்தன. இதனைக் கண்டதலைவி அவர் கார்காலத்தை அறியவில்லை என்று தலைவி புலம்புகின்றாள். இதனை,

**"இழை அனிமகளிரின் விழைதகப் பூத்த**
**நீடுசுரி இரைசுடர் விக் கொன்றைக்**
**காடுகவின் பூத்தஆயினும்,நன்றும்"**

**(நற்றிணை-302)**

எனும் பாடல் கூறுகின்றது. அகநானூறு பாடலும் கொன்றைப் பூவினைப் பற்றி கூறுகின்றது. அகநானூறு கொன்றைப் பூவினை "கொன்றைப் பொன்னேர் புதுமலர்" என்று கூறுகின்றது.

**"வண்டுபடத் ததைத்த கொடியினர்**
**இடையிடுபு பொன்செய்**

 **ISBN: 978-81-997928-9-0**

**புனையிழை கட்டிய மகளிர்**
**கதுப்பிற் தோன்றும் புதுப்பூங்கொன்றை"**
**(குறுந்தொகை, 21, 1–4)**

என்ற குறுந்தொகைப் பாடலும் கொன்றை மலரின் அழகை பெண்களின் கூந்தலோடு ஒப்பிடுகின்றது.

**பிச்சிப்பூ**

பிச்சிப்பூ என்பது ஒருவகை மல்லிகை வகையைச் சேர்ந்ததாகும். தமிழிலக்கியங்களில் தளவம், பித்திகம், செம்முல்லை என்றும் அழைக்கப்படுகின்றது. இப்பூவினை மகளிர் மாலைகளாகத் தொடுத்து, சந்தனம் அரைத்த மார்பின் மேல் பதியும்படி அணிந்து கொள்வர் என்பதை,

**"மாரிப் பித்திகத்துஈர் இதழ் அலரி**
**நறுங் காழ் ஆரமொடு மிடைந்தமார்பில்"**
**(நற்றிணை, 314)**

நற்றிணைப் பாடல் எடுத்தியம்புகின்றது.

சங்ககால மக்கள் தங்கள் அரண்மனைகளிலும், மாடங்களிலும் முல்லை, மல்லிகை, செண்பகம் முதலிய மலர்க்கொடிகளையும் மரங்களையும் வைத்திருந்தனர். தமிழர்கள் பெண்களின் கற்பின் தூய்மையை 'முல்லைசான்றமெல்லியல்' என்று சிறப்பிக்கும் மாண்பினையும் நம்மால் காணமுடிகின்றது.

**மரங்கள்**

தொல்காப்பியர் அகத்திணை இயலில் கருப் பொருட்களைப் பற்றிக் கூறும்போது, **"தெய்வம் உணாவேமாமரம் புள் பறை" (தொல்,அகத் - 964)** எனவும், மரபியலில் தாவரங்கள் ஓரறிவு உடையது என்பதை, **"புல்லும் மரனும் ஓர் அறிவினவே" (தொல்,மரபி - 28)** என்றும் கூறுகின்றார்.

 ISBN: 978-81-997928-9-0

**ஆலமரம்**

அமைச்சரை ஆலமரத்தின் விழுதுகள் போல மன்னன் தாங்க வேண்டும் எனவும், அரசன் தன் கீழ் உள்ளோரை நோக்கிச் சொல்லிய வினையை முடிக்காமல் மறுத்தால், ஆலமரம் எனச் சொல்ல மற்றவன் பூலாமரம் எனச் சொல்வதற்கு ஒப்பாகும். ஆலமரத்தில் வேர்களைச் செல் அறித்துத் தின்றாலும் மரம் விழாமல் விழுதுதாங்கிக் கொள்ளும் எனவும் ஆலமரம் நிழலைத் தருகின்றது எனவும் ஆலம் விதை சிறியதானாலும் பெரிய மரத்தைத் தருகின்றது எனவும் ஆலம் விதை சிறிய மீன் இடும் முட்டையை விடச் சிறியதானாலும் பெறும் படையுடன் பாசறை அமைத்து ஓய்வெடுக்கும் அளவிற்கு நிழலைத் தருகின்றது எனவும் கூறப்படுகின்றது. இதனை,

**“ஆலம் வீழ் போலும் அமைச்சனும்,வேலின்”**

**(திரிகடுகம்- 33)**

**“வேலின்வாய் ஆயினும், வீழ்வார், மறுத்துறைப்பின்**
**ஆல் என்னின் பூல் என்னுமாறு”**

**(பழமொழி –31)**

***“சிதிலை தினப்பட்ட ஆரமரத்தை”***

**(நாலடி, 20)**

**“உறக்கும் துணையதுஓர் ஆலம் வித்துஈண்டி”**

**(நாலடி,4,அறன் வலியுறுத்தல்-8)**

**“தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை”**

**(வெற்றிவேற்கை- 17)**

என்றபாடல் அடிகளால் ஆலமரத்தி;ன் குறிப்புகளைக் காணமுடிகின்றது.

தலைவியை, தலைவன் உடன்போக்கில் அழைத்துச் செல்கின்ற போது வானம் பொய்த்து விட்டது. வானத்திலிருந்து விழும் நுண்ணியத் துளிகள்

 **ISBN: 978-81-997928-9-0**

மாறிவிட்டன. ஆகவே, இருவரும் காற்றுள்ள அழகிய காட்டில் ஆலமரத்தின் நிழலிலே தங்கி, தளர்ச்சி நீக்கிசெல்வோம் என்று கூறுகின்றான். இதனை கீழ்வரும்,

**"வருமழை சுரந்த வால்நிற விசும்பி;ன்**
**நுண் துளி மாறிய உலவை அம்காட்டு**
**ஆல நீழல் அசைவு நீக்கி"(நற்றிணை- 76)**

**மாமரம்**

நன்கு காய்த்த மாமரம் கல்லடியால் துன்பப்படும், மாமரம் தென்றல் வீசினால் தளிர்விடும், புயல் வீசினால் அலைப்புறும். வெற்றி பெறும் காலம் ஒருவருக்கு வாய்த்தால் மந்திரக்கோலால் மாமரத்திலிருந்து மாங்காயை விழ வைக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனை,

**"கல்மேல் இலங்குமலை நாட மாக்காய்த்துத்**
**தன்மேல் குணில் கொள்ளுமாறு"(பழமொழி- 129)**
**"திருத்தும் தளிர்காட்டித் தென்றல் வரத்தேமே**
**வருந்தும் கழல்கால் வர" (நன்னெறி - 19)**
**"மாங்காய் விழஎறிந்த மாத்திரைக் கோல் ஒக்குமே" (நல்வழி - 4)**

என்றபாடல் அடிகளால் மாமரத்தினைப் பற்றி அறியமுடிகின்றது.

பொருள்வயின் பிரிந்த தான் திரும்புவதாகச் சொன்ன பருவம் வந்ததை உணர்ந்த தலைவன் , தலைவி தன்னை நினைத்து வருந்துவாள் எனத் தன் நெஞ்சிற்கு உரைத்ததை,

**"இணர் துதைமாஅத்தபுணர்குயில் விளித்தோறும்**
**நம்வயின் நினையும் நெஞ்சமோடு"( நற்றி., 157)**

எனும் நற்றிணைப் பாடல் கூறுகின்றது.

 **ISBN: 978-81-997928-9-0**

இளவேனில் காலத்தில் பூங்கொத்துகள் நெருங்கிய மாமரத்தில் நெருங்கியிருக்கும் குயில்கள் கூவுந்தோறும் என் தலைவிக்கு என் நினைவு வருமே என்று தலைவன் வருந்துவதை இப்பாடல் கூறுகின்றது. மற்றொரு பாடலில் மாமரச் சோலைத் தோறும் தங்கியிருக்கும் பூப்போன்ற கண்களையுடைய கரிய குயில்கள் வாழ்க்கை என்பது, சூதாடு கருவி மாறி விழுவது போல நிலையில்லாதது. அதனால், காதலியை விட்டுப் பிரியாதீர் என்று சொல்வதாக செய்தி இடம்பெறுகின்றது. டிஇதனை,

**“அலங்குசினை பொதுளிய நறுவடி மா அத்துப்**
**பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்,**
**கவறுபெயர்த் தன்னநில்லா வாழ்க்கை இட்டு”**
**(நற்றிணை, 243)**

எனும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

**வேப்பமரம்**

சங்க காலத்தில் வேம்பு என்பது பாண்டிய மன்னர்களின் குடிப்பூவாக இருந்தது. மேலும், மருத்துவம் மற்றும் கட்டுமான குறியீட்டு ரீதியான பயன்பாடுகளைக் கொண்டிருந்தது. போர் காயங்களுக்கு சிகிச்சையளிக்க வேப்ப இலைகளை பயன்படுத்தினர். புல்லிய காம்புகளும், சிறிய இலைகளை உடையதுமான வேப்பமரத்தின் பெரிய கிளைகளை யானைகள் முறித்தது என்ற செய்தியை நற்றிணை நமக்கு தருகின்றது.

**“… நெஞ்சே! புன் கால்**
**சுறியிலை வேம்பின் பெரிய கொன்று”**
**(நற்றிணை, 103)**

எனும் பாடல் வரிகள் வேப்ப மரத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

 ISBN: 978-81-997928-9-0

அக்காலத்தில் கொற்றவையை நினைத்து வேப்பமரத்தை வழிபாடு செய்யும் முறை இருந்துள்ளது. மழவர்கள் தெய்வம் வாழும் பருத்த அடிப்பாகம் கொண்ட வேப்பமரத்திற்கு கொழுத்த ஒரு மாட்டை வெட்டி பலி தந்து அதன் இரத்தத்தை தெளித்து வழிபட்டனர் என்று அகநானூற்றுப் பாடலும் கூறுகின்றது.

**"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்**
**கொழுப்பு ஆ எறிந்து, குருதி தூஉய்"**

**(அகநானூறு, 309)**

எனும் இப்பாடல்களால் வேப்பமரம் தமிழர்களிடம் வணங்கும் ஒருதெய்வ நிலையில் இருந்துள்ளது என்பதை நம்மால் உணர முடிகின்றது.

கீழ்க்குணம் உடைய நண்பரைப் பெருக்கிக் கொள்ளுதல் வீட்டில் உள்ள பலாமரத்தை வெட்டி விட்டு எட்டி மரத்தை நடுவதற்கு நிகராகும். பலாமரம் பூக்காமல் காய்க்கக் கூடியது. அது போல அறிஞர்களுக்கு பிறர் உரைக்காமலே உணர்வுத் தோன்றும். பலாமரம் பிஞ்சுகள் விடுவதையும் அவை பழமாவதையும் ஏற்றுக் கொள்ளும். அதுபோல, நல்ல குணங்களால் சிறந்த பெரியோர் தம்மிடம் வரும் எளியோரை ஏற்றுக்கொள்வர். இதனை,

**"தீம்சொல் மழலையாய் தேன்ஆர்**
**பலாக்குறைத்துக் காஞ்சிறை நட்டு விடல்"**

**(பழமொழி, 371)**

**"பூவாது காய்க்கும் மரம்உள நன்றுஅறிவார்"**

**(சிறுபஞ்சமூலம், 20)**

**" வன்காய் பலபல காய்ப்பினும், இல்லையே,**
**தன்காய் பொறுக்கலாக் கொம்பு?"**

**(நாலடி, 21, சுற்றம்தழால் -31)**

 ISBN: 978-81-997928-9-0

ஆகிய பாடல்கள் அடிகள் பலாமரங்கள் பற்றிக் கூறுகின்றன.

நெடிய மலைப் பகுதியில் முடம்பட்டு முதிர்ந்து விளங்கும் பலாமரத்தினது குடம் போன்ற பெரும் பழத்தினை, கற்கள் நிரம்பிய குறிஞ்சிக்கு உரியவரான குறவர்களின் அன்பான இளமகள், கருமையான விரல் கொண்ட மந்திக்கு கொடுப்பாள் என்று நற்றிணைப் பாடல் கூறுகின்றது.

**"முடமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்**
**கல்கெழு குறவர் காதல் மடமகள்**
**கருவிரல் மந்திக்கு வருவிருந்து அயரும்"**
**(நற்றிணை, 353)**

மேலும், மற்றொரு பாடல்,

**"முன்றிற் பலவின் படுசுளை மரீஇப்**
**புன்தலைமந்தி தூர்ப்ப." (நற்றிணை, 373, 1-2)**

புலாமரத்தினைப் பற்றிக் கூறுகின்றது.

இல்லத்தின் முன்னேயுள்ளபராமரத்தில் உள்ள பழத்தின் சுளைகளைத் தின்றகுரங்குகள் அதன் கொட்டைகளைவீசிஎறியும் எனமேற்சொன்னவரிகள் எடுத்தியம்புகின்றன.

**வாழைமரம்**

வாழைமரம் ஒருமுறை தான் குலை ஈனும். அதுபோல அறிஞர்கள் தவறு செய்தவனை ஒருமுறை மன்னிப்பர். வாழைமரத்திற்கு அதன் குலையே எமன். வாழைதான் அழியும் நேரத்தில் குலைவிடும். அது போலத் தீயவர் தான் அழியும் நேரத்தில் தீயசெயல்களைச் செய்வர். வாழை தம்மை வளர்த்தவருக்கு ஒரே ஒரு குலையை ஈன்று விட்டு மடிந்து விடும். எனவே, தீயவருக்கு உவமையாயிற்று. இதனை,

 **ISBN: 978-81-997928-9-0**

**"யாழின் வண்டுஆர்க்கும் புனல்ஊர ஈனுமோ**
**வாழை இருகால் குலை?" (பழமொழி, 221)**
**"மெல்இலை வாழைக்குத் தான்ஈன்ற**
**காய்கூற்றமே" (நான்மணிக்கடிகை,82)**
**"ஆங்கமுகு போல்வா ரதம ரவர்களே**
**தேங்கதலியும் போல்வார் தேர்ந்து"**
**(வாக்குண்டாம், 27)**
**"நண்டு சிப்பி வேய்கதலி, நாசம்உறும்**
**காலத்தில்" (நல்வழி,36)**

என்ற பாடல் வரிகள் வாழைமரத்தினைப் பற்றிக் கூறுகின்றன.

நற்றிணையிலும் வாழைமரங்கள் குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. பெருமலையில் நெடுமையாக நீர் விழும் அருவியின் ஒலிமிக்க இடத்தில் அடிமரத்தையுடைய வாழைமரங்கள் நிறைய வளர்ந்துள்ளன. அதன் கொழுத்த அழகிய கனிகளைக் குரங்குகள் பறித்துத் தின்றது என தோழி கூறுகின்றாள். இதனை,

**"நெடுநீர் அருவியகடும் பாட்டுஆங்கண்,**
**பிணிமுதல் அரையபெருங்கடல் வாழைக்**
**கொழுமுதல் ஆய் கனிமந்தி கவரும்"**
**(நற்றிணை, 251)**

எனும் வரிகள் எடுத்தியம்புகின்றது.

மேலும், மற்றொரு பாடலில், வாழை இலையில் கொழுத்த மடலில் உள்ள அகன்ற இலையிலே, நீர்த்துளி கலந்து தங்கியிருக்கும் பெரிய மலைநாட்டின் தலைவனுடைய நட்பு நமக்கு துன்பம் தரும் என்று தலைவி தோழியிடம் கூறுகின்றாள். இதனை,

**"ஆழல்,வாழி! –தோழி! –வாழைக்**

 ISBN: 978-81-997928-9-0

**கொழுமலை நாடன் கேண்மை நமக்கே**
**விழுமமாக அறியுநர் இன்று" (நற்றிணை, 309)**

எனும் வரிகள் கூறுகின்றது.

வாழையின் மெல்லிய தாற்றின் நுனியிலே தொங்கும் பூவினை, அசையச் செய்கின்ற அளவிற்கு நெற்பயிர் ஓங்கி வளர்ந்திருக்கும் நாட்டிற்கு தலைவனே என்று பரத்தை தலைவனைக் கூறுகின்றாள் என மற்றொரு பாடல் கூறுகின்றது. இதனை,

**"வாழைமென்தோடுவார்புறுபுஊக்கும்**
**நெல் விளைகழனி நேர் கண் செறுவின்"**
**(நற்றிணை, 400)**

எனும் வரிகள் எடுத்தியம்புகின்றது.

மேலும், தலைவியின் உடல் மெலிவதற்கும், அவளது சோகத்திற்கும் வாழைமரத்தின் மெல்லிய தளிர் போன்ற மடல் உவமையாகப் கூறப்படுகின்றது. மழையால் நனைந்த வாழை இலையின் அழகு தலைவியின் அழகு இழந்த நிலைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

**புன்னை மரம்**

நற்றிணையில் புன்னைமரம், நெய்தல் நிலத்தின் அடையாளமாக இடம்பெறுகின்றது. தலைவியின் தங்கையைப் போல் உள்ளது. அரசர்கள் தங்கள் காவல் மரமாக புன்னையை வளர்த்து வந்துள்ளனர். சங்ககாலத்தில் மகளிர் குவித்து விளையாடிய மலர்களின் பட்டியலில் புன்னை மரங்கள் இடம் பெற்றிருந்தது. நற்றிணையில் இம்மரங்கள் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறாமீன் குவியலைக் காய வைத்திருக்கின்றதாலே எழுகின்ற புலால் நாற்றம்


ISBN: 978-81-997928-9-0

புன்னைப் புதுமலரது நறுந்நாற்றத்தாலே அகன்று போனது போல, என்று தலைவன் புன்னைமரத்தினை கூறுகின்றான். இதனை,

> **“சுற்றியபிணரசூழ் கழி இறவின்**
> **கணம் கொள் குப்பைஉணங்குதிறன் நோக்கி,**
> **பன்னைஅம் கொழுநிழல் முன் உய்த்துப் பரப்பும்”**
> **(நற்றிணை, 101)**

எனும் நற்றிணைப் பாடல் கூறுகின்றது.

தலைவி தோழிமாரோடு விளையாடும் போது வெண்மையான மணலில் புதைந்து மறந்து விட்ட புன்னை மரவிதை வெளியே வந்தது. அதற்கு தேன் கலந்த இனிய பாலை ஊற்றி தலைவி வளர்த்து வந்தாள். அது வளர்ந்து மரமாகியது. அப்போது, நற்றாய் தலைவிடம் இப்புன்னைமரம் உனது தங்கை என்று கூறினாள். இதனால், தலைவனுடன் தலைவி புன்னை மரத்தடியில் அளவளாவலை தவிர்ப்பாள் என மற்றொரு நற்றிணைப் பாடல் கூறுகின்றது. இதனை,

> **“விளையாடுஆயமொடுவெண் மணல் அழுத்தி,**
> **மறந்தனம் துறந்தகாழ் முளை அகைய,**
> **நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்த்தது,**
> **நும்மினும் சிறந்தது, நுவ்வைஆகும் என்று,**
> **அன்னை கூறினள், புன்னையது நலனே”**
> **(நற்றிணை, 172, 1-5)**

எனும் பாடல் எடுத்தியம்புகின்றது.

சங்க காலத்தில் குறுக்கைப் பறந்தலை என்னுமிடத்தே அன்னி என்பானும் அவனை விட சிறந்த திதியன் என்பானும் போரிட்டனர். அப்போரிலே திதியனின் காவல் மரமாய் இருந்த புன்னைமரம் வெட்டப்பட்டு வீழ்ந்து துன்பத்தை அடைந்தது என,

 **ISBN: 978-81-997928-9-0**

**“அன்னியும் பெரியன், அவனினும் விழுமிய**
**இரு பெரு வேந்தர்,பொரு களத்து ஒழித்த**
**புன்னை விழுமம் போல” (நற்றிணை, 189)**

இப்பாடல் வரிகள் புன்னைப்பற்றிக் கூறுகின்றது.

மற்றொரு நற்றிணைப் பாடல் புன்னை மரத்தின் உறுப்புகளை உவமையாகக் கூறுகின்றது. இரும்பு, நீலம், வெள்ளி, பொன் நான்கும் புன்னை மரத்தின் கிளை, இலை, பூங்கொத்து, மகரந்தம் இவற்றிற்கு உவமையாக வந்துள்ளன. இதனை கீழ்வரும்,

**“இரும்பின் அன்னகருங் கோட்டுப் புன்னை**
**நீலத்து அன்ன பாசிலை அகம்தொறும்,**
**வெள்ளி அன்னவிளங்கு இணர் நாப்பண்**
**பொன்னின் அன்னநறுந் தாதுஉதிர”**
**(நற்றிணை, 249)**

என்று கூறுகின்றது.

**சந்தன மரம்**

சங்க இலக்கியங்களில் சந்தனம் ஆரம், சாந்தம், சாந்து போன்ற பல பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நறுமணத்திற்காகவும், உடல் சூட்டைக் குறைக்கவும், மருத்துவத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. நற்றிணையில் சந்தனமரம் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. தலைவி குளிர்ந்த தாமரையின் தாதுக்களை ஊதி உயர்ந்த மலையிருக்கின்ற சந்தன மரத்தில் வண்டு சேர்த்த தித்திக்கும் தேன் போல உயர்ந்தது என் தலைவனின் காதல் என்று கூறுவதிலிருந்து சந்தன மரத்தின் மேன்மையை நம்மால் உணரமுடிகின்றது. இதனை,

**“தாமரைத் தண் தாதுஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்ததீம் தேன் போல,**

 **ISBN: 978-81-997928-9-0**

**புரையமன்ற, புரையோர் கேண்மை”**

**(நற்றிணை, 1)**

எனும் பாடல் கூறுகின்றது.

பெரியக் காட்டில் சிறிய இலைகளையுடைய சந்தன மரம் வெப்பத்தால் வாடுகின்ற பொழுது தலைவன் பொருள் தேடப்பிரிகின்றான் என்று தலைவி கூறுவதை,

**“தண் நறுஞ் சிலம்பில் துஞ்சும்**
**சிறியிலைச் சந்தினவாடு பெருங் காட்டே”**

**(நற்றிணை, 7)**

எனும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

தலைவன் பிரிவை எண்ணிய தலைவி, மலையில் வாழும் குறவர்கள் சந்தனமரத்தின் அருமைத் தெரியாமல் அதனை வெட்டி வீழ்த்துவர். அந்தச் சந்தனமரத்தைப் போல தாமும், தன் அறிவும், உள்ளமும் தலைவனிடம் சென்று வாடிக் கொண்டிருக்கின்றது எனத் தலைவி கூறுவதை,

**“மரல் நார் உடுக்கைமலைஉறை குறவர்**
**அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்**
**மரம் வறிதாகச் சோர்ந்துஉக்காங்கு,என்**
**அறிவும் உள்ளமும் அவர் வறின் சென்றென”**

**(நற்றிணை, 64)**

இப்பாடல் வரிகள் எடுத்தியும்கின்றன. குறுந்தொகையில் சந்தனம் குறித்த செய்திகள் உள்ளன. தலைவன், தலைவியின் அழகை வர்ணிக்கும் பொழுது கோடைக்காலத்தில் குளிர்ச்சியாக இருப்பாள் என்று கூறுகின்றான். நிலைபெற்ற உயிர்களால் முழுதும் அறியமுடியாத நெருங்குவதற்கரிய பொதியமலையில், தெய்வங்களையுடைய பக்கத்தில் வளர்ந்த சந்தனத்தைப்

 **ISBN: 978-81-997928-9-0**

போல,வேனிற் காலத்தில் தலைவி குளிர்ச்சியை உடையவள் என்பதை,

**“மன் உயிர் அறியாத் துன்அரும் பொதியில்**
**குருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப,**
**வேனிலானே தண்ணியள்,” (குறுந்தொகை, 376)**

எனும் வரிகள் வாயிலாகஅறியமுடிகின்றது.

**மூங்கில்**

சங்ககாலத்தில் புல் வேய்ந்த குடிசைகளை மூங்கில் கழிகளைக் கொண்டு அமைத்தனர். மூங்கிலைக் கொண்டு குழல் போன்ற இசைக்கருவிகளைச் செய்தனர். மூங்கில் பூத்து. காய்த்து, கனியாகி, விதையுண்டாகும். இந்த விதைகளையே மூங்கிலரிசி என்று அழைத்தனர். இதை உணவாகவும் உண்டார்கள்.

நற்றிணையில் தோழிக் கூற்றில் அமைந்தப் பாடலில் மூங்கில் பற்றிய செய்தி வருகின்றது. வெண்மையான மூங்கிலின் நெல்லை உண்ட, வரிகளையுடைய நெற்றியையுடைய யானைகள் குளிர்ந்த மலையில் தூங்கும் என்று தோழிக் கூறுவதை,

**“வெண்நெல் அருந்தியவரிநுதல் யானை**
**தண் நறுஞ் சிலம்பில் துஞ்சும்” (நற்றிணை, 7)**

எனும் வரிகள் கூறுகின்றன.

உயர்ந்த மலைத்தொடரில் ஆடும் தண்டுயர்ந்த பசிய கணுக்களையுடைய மூங்கில் வானில் ஓடும் மேகத்தைக் கிழிக்கும் நாட்டிற்கு உரிமையுடையவன் தலைவன் எனத் தோழிக் கூறுகின்றாள். இதனை,

**“ஆடு கழைநிவந்தபைங் கண் மூங்கில்**
**ஓடு மழை கிழிக்கும் சென்னி,**
**கோடு உயர் பிறங்கல், மலîகிழவோனே!”**
**(நற்றிணை, 28)**

 ISBN: 978-81-997928-9-0

எனும் பாடல் எடுத்தியம்புகின்றது. மற்றொருபாடலில், மூங்கிலை வைத்து விளையாடும் செய்தி இடம் பெறுகின்றது. புல்லாங்குழல் ஒருபக்கத்தில் ஒலிக்க,மற்றொரு பக்கத்தில் பல இசைக்கருவிகள் இசைக்க, முறுக்கான புரியால் ஆன வலிமையான கயிற்றில், கழையேறி விளையாட்டுகள் நடத்தி விளையாடினார்கள் எனத் தலைவன், பாங்கனிடம் கூறுகின்றான். இதனை,

**“கழைபாடு இரங்க,பல் இயம் கறங்க,**
**ஆடு மகள் நடந்தகொடும் புரிநோன் கயிற்று”**
**(நற்றிணை, 95)**

எனும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன.

மூங்கில்கள் பல இடங்களில் வர்ணனைகளுக்காவும், பாலைநிலத்தின் வெப்பத்தைத் தணிக்கவும், தலைவியின் தோள்களைப் புகழ்ந்து உரைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மூங்கில் மரங்களின் மீதுவீசும் காற்றில் எழும் ஓசைகளை, யானையின் பிளிறலோடு ஒப்பிட்டனர்.

திருக்குறளும் மூங்கிலைப் பற்றிக் கூறுகிறது. வேய்த்தோள் என்று கூறி, மூங்கில் போன்ற மெல்லிய தோள்கள் கொண்டப் பெண்களைப் பற்றிப் பேசுகின்றது. மூங்கில் மரம் திருக்குறளில் காம்பு, பணை,வேய் ஆகியசொற்களால் குறிப்பிடப்படுகின்றது.

**“கண்ணிறைந்த காரிகைக்காம்புஏர்**
**தோள்பேதைக்குப்**
**பெண்நிறைந்த நீர்மை பெரிது” (திருக், 1272)**
**“பணைநீங்கிப்பைந்தொடி சோரும் துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள்” (திருக், 1234)**
**“முறிமேனி முத்தம் முறுவல் வெளிநாற்றம்**

 **ISBN: 978-81-997928-9-0**

**வேல் உன்கண் வேய்த்தோ ளவட்கு" (திருக், 1113)**

இக்குறட்பாக்கள் காமத்துப்பாலில் உள்ளன. இதில் மூங்கில் மரமானது பெண்களின் தோள்களுக்கு எடுத்துக்காட்டாக கூறப்படுகின்றது.

**நாவல் மரம்**

சங்க இலக்கியங்களில் நாவல் மரம் பற்றிய குறிப்புகள் உள்ளன. கடலோரப் பகுதிகளில் இந்தமரம் வளர்ந்ததாக புலவர்கள் கூறுகின்றார்கள். பெரும்பாணாற்றுப்படை நூலில் 'நாவலில் பெயர் பெற்ற அழகினை உலகமெல்லாம் கேடின்றாக விளங்கும்படி' என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றார். நற்றிணையில் நாவல் குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. நீண்ட மணல் பரந்த கரையிலே புல்லிய காம்புகளையுடைய நாவலின் கரியகனி, களி பொதிந்த மேற்புறத்தில் உதிர்ந்து கிடந்தது. அதைத் தும்பி வண்டுகள் தம் இனம் எனக் கருதி மொய்த்தன. பல கால்களையுடைய நண்டுகள் அதனைப் நாவல் பழம் எனக் கருதி எடுத்துச் சென்றது என்பதை,

**"பொங்குதிரைபொருதவார் மணல் அடைகரைப்**
**புன் கால் நாவல் பொதிப் புற இருங் கனி**
**கிளைசெத்துமொய்த்ததும்பி,பழம் செத்துப்**
**பல் கால் அலவன் கொண்டகோட்கு அசாந்து"**
**(நற்றிணை, 35)**

எனும் பாடல் கூறுகின்றது. நற்றிணைப் போலவே அகநானூற்றிலும் நாவல் பற்றிய செய்தி வருகின்றது. துறையில் விழுந்தநாவல் பழத்தினை எடுத்துச் சென்ற நண்டு, தன் பெண் நண்டிற்கு கொடுக்கின்றது. இதனை,

**"அகல் இலைநாவல் உண்துறைஉதிர்த்த**
**கனிகவின் சிதையவாங்கிக் கொண்டு,**

 ISBN: 978-81-997928-9-0

**தன் தாழை வேர் அளை,வீழ் துணைக்கு**
**இடூமஉம் (அகநானூறு, 380)**

எனும் அகநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகின்றது.

**ஓமை மரம்**

வறண்ட பாலை நிலத்தி;ல் இந்தமரம் வளரும் என்று சொல்லப்படுகின்றது. பாங்கர் என்றும் இம்மரம் அழைக்கப்படுகின்றது. நற்றிணையில் ஒமைமரங்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. களிறு அழித்ததால் ஓமைமரம் முடமானது என்ற செய்தி,

**“கயந்தலைகமழும் மடப் பிடிஉயங்கு பசி**
**களைஇயர்**
**பெருங் களிறுதொலைத்த முடத் தாள் ஓமை”**
**(நற்றிணை, 137)**

எனும் வரிகளால் அறியப்படுகின்றது. மற்றொரு பாடலில் ஓமைமரம் நிரம்பியிருக்கும் காட்டு வழியில் காளை ஒருவனோடு நேற்று நடந்து சென்றதன் மகளை நினைத்து செவிலித்தாய் வருந்துகின்றாள். இதனை,

**“ஒமைநீடியகான் இடை அத்தம்,**
**முன்நாள் உம்பர்க் கழிந்தஎன் மகள்**
**கண்பட, நீர் ஆழ்ந்தன்றே” (நற்றிணை, 198)**

எனும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. காய்ந்திருக்கும் ஓமைமரத்தில் ஒடுங்கி இருந்துக் கொண்டு சில்லுவண்டுகள் ஒலிக்கும் என்று நற்றிணையின் மற்றொரு பாடல் கூறுகின்றது. இதனை கீழ்வரும்,

**“உலவைஊமை ஒல்குநிலைநடுங்கி**
**சிள்வீடுகறங்ககும் சேய் நாட்டுஅத்தம்”**
**(நற்றிணை, 252)**

பாடல்வரி கூறுகின்றது.


**ISBN: 978-81-997928-9-0**

## முடிவுரை

மனித வாழ்வில் தாவரங்கள் இன்றியமையாத ஒன்றாகும். இதனை உணர்ந்த சங்க கால மக்கள் தாவரங்களை தங்கள் வாழ்க்கையோடு ஒன்றாகி விட்டனர். மக்களின் வாழ்விலும், சுற்றுப்பற சூழலிலும் தாவரங்கள் முக்கிய இடம் பெற்றன என்பதை மேற்சொன்ன நற்றிணைப் பாடல்கள் வாயிலாக உணர முடிகின்றது. அக்காலப் புலவர்கள் தாவர அறிவு, சூழலியல் விழிப்புணர்வு பெற்றிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. இலக்கியங்கள் என்பது வாழ்க்கையிலிருந்து பிறக்கின்றது என்றும் வாழ்க்கை இயற்கையிலிருந்து பிறக்கின்றது என்றும் இயற்கைத்தான் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது என்று கார்லைல் குறிப்பிடுகின்றார். ஆகவே, அக இலக்கியமான நற்றிணை நமக்கு தாவரங்கள் மூலம் பக்தி, காதல், அறம், கலை, பண்பாடு ஆகியவற்றை உணர்த்துகின்றது. எனவே, சங்க கால மக்களின் வாழ்வில் தாவரங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன என சொன்ன நம்மால் இன்று மாசு நிறைந்த உலகில் அந்த தாவரங்களை வளர்க்கவும்.காக்கவும் முடியும். அரசோடு சேர்ந்து நாமும் சமூக ஆர்வலராய் தாவரங்களை வளர்ப்போம்.

## குறிப்புகள்

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

[2] ஔவை துரைசாமி நாட்டார். *புறநானூறு*. கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

[3] ஔவை துரைசாமி நாட்டார். *அகநானூறு*. கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

 ISBN: 978-81-997928-9-0

[4] எம்.நாராயண வேலுபிள்ளை. *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்*. நர்மதா பதிப்பகம், 2023.
[5] புலியூர்கேசிகன். *திருக்குறள் (உரை)*. பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2009.
[6] ஔவை சு. துரைசாமி. *நற்றிணை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN: 978-81-997928-9-0

# Plants in Tamil Culture

**Dr. S. Sundaran,** Assistant Professor of Tamil,
Gobi Arts and Science College, Gobi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0000-1008-2757**

## Abstract

*In the Sangam literature, plants were not merely figurative or mythological objects, but were an important part of the internal and external life of the Tamils. They gave life to the landscape, became subtle expressions of human emotions, served the needs of everyday life, and were central to rituals and beliefs.The plant knowledge of the Sangam poets shows their ecological awareness and a way of life in harmony with nature. It is amazing that plants belonging to each land have been identified and their characteristics, symbionts and uses have been accurately recorded. Through Sangam literature, we are able to understand the uniqueness of the Tamil people, their deep relationship with nature and the rich world of plants. This makes us realise the need to respect nature and its elements even in today's time.*

**Keywords:** Mountains, Forests, Waterfalls, Rivers, Nature.

## References

[1] Ilampuranar. *Tolkappiyam Thelivurai*. Manivasagar Pathippagam, Chennai, 1999.

[2] Avvai Duraisamy Nattar. *Purananuru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.
[3] Avvai Duraisamy Nattar. *Akananuru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.
[4] Manickam, A. U. *Kurunthogai*. Varthamanan Pathippagam, Chennai, 1999.
[5] *Paripadal*. Saradha Pathippagam, Chennai, 2021.
[6] *Kalithogai*. Gowra Pathippagam, Chennai, 2021.
[7] Avvai S. Duraisamy. *Ainkurunuru*. Gowra Pathippagam, Chennai, 2006.
[8] Avvai S. Duraisamy. *Natrinai*. Gowra Pathippagam, Chennai, 2006.
[9] Avvai S. Duraisamy. *Kurunthogai*. Gowra Pathippagam, Chennai, 2006.
[10] Puliyur Kesigan. *Thirukkural (Urai)*. Poompuhar Pathippagam, Chennai, 2009.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 **ISBN: 978-81-997928-9-0**

# தமிழர் மரபில் தாவரங்கள்

**முனைவர் சு. சுந்தரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோபி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0000-1008-2757**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில், தாவரங்கள் வெறும் உருவக அல்லது புராணப் பொருள்களாக மட்டும் இருக்கவில்லை; மாறாக, அவை தமிழர்களின் அக மற்றும் புற வாழ்வின் ஓர் முக்கிய அங்கமாகத் திகழ்ந்தன. அவை நிலப்பரப்புக்கு உயிரூட்டின, மனித உணர்வுகளின் நுட்பமான வெளிப்பாடுகளாக விளங்கின, அன்றாட வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்தன, மேலும் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு மையமாகத் திகழ்ந்தன. சங்கக் கவிஞர்களின் தாவர அறிவானது, அவர்களின் சூழலியல் விழிப்புணர்வையும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையையும் காட்டுகிறது. ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் உரிய தாவரங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் பண்புகள், கூட்டுயிரிகள் மற்றும் பயன்கள் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது வியக்கத்தக்கதாகும். சங்க இலக்கியத்தின் வழியே, தமிழ் மக்களின் தனித்துவத்தையும், இயற்கையுடனான அவர்களின் ஆழ்ந்த உறவையும், வளமான தாவர உலகத்தையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இது, இக்காலத்திலும் கூட இயற்கையையும் அதன் கூறுகளையும் மதிக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** மலை, காடு, அருவி, ஆறு, இயற்கை.

 **ISBN: 978-81-997928-9-0**

**முன்னுரை**

தமிழ் மரபும் பண்பாடும் நாகரிகமும் இன்றுவரை செழித்திருகக் காரணம் அவர்களது இயற்கையோடு இயைந்த வாழ்வியலேயாம். மலை, காடு, அருவி, ஆறு, இயற்கை வாழ்விகள், என அனைத்து இயற்கையின் கூறுகளையும் தனது வாழ்க்கைமுறைமையில் ஏற்றிச் செழித்திருந்தார்கள் .நிலமும் பொழுதுமே தமிழரின் முதற்பொருளாக இருந்தது. நிலத்தினை ஐவகைப் படுத்தியும் பொழுதினை சிறுபொழுதாகவும் பெரும்பொழுதாகவும் பன்னிரு வகைப்படுத்தியும் ஒரு செம்மாந்த பண்பாட்டினை உருவாக்கித் தந்தார்கள். பழந்தமிழரின் வழக்காறுகளில் ஒன்றியிருந்த இயற்கையில் கூறுகளில் ஒன்றாக மரங்களை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இலக்கியங்களில் எந்தச்சூழலில் மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன அவை தலைவனுக்கும் தலைவிக்குமான அன்பினை வெளிப்படுத்தும் களங்களா யாங்கனம் அமைகின்றன?

தமிழரின் பண்பாடோடும் வழிபாட்டோடும் இரண்டறக்கலந்துள்ள பாண்மையை இவ்வாய்வு முன்னெடுக்கிறது. மேலும், மரங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. இலக்கியங்களில் மரங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் குறியீடாகவும், படிமங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. பாட்டிலும் தொகையில் இருநூற்றுப்பத்திற்கும் மேற்பட்ட மரங்கள், செடி, கொடிகளின் பெயர்கள் உள்ளன. ஒவ்வொரு நிலத்திற்குமுரிய மரங்கள், தாவர வகைகள், விலங்குகள், பறவைகள், நீர்நிலைகள் என்று அனைத்தையும் வகைமைக்குட்படுத்தியிருப்பது இயற்கையின் மீதான

 **ISBN: 978-81-997928-9-0**

அவர்களின் ஆழ்ந்த அறிவினை வெளிப்படுத்துகிறது. இவ்வாய்வு சங்க இலக்கியங்களில் தாவரங்கள் எவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், அவை நிலப்பகுப்பு, அகத்திணைகள், புறத்திணைகள், வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகள், உணவு, மருத்துவம், போன்ற பல்வகை நிலைகளில் ஆற்றியிருக்கின்ற பங்களிப்பினையும் இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

**சங்க இலக்கியம்**

தமிழர் தம் வரலாற்றெழுதியலுக்கு பெருந்துணை புரிவன பாட்டும் தொகையும் என்று அழைக்கப்படும் சங்க இலக்கியங்களேயாகும். அக்காலச் சூழலில் வாழ்ந்த புலவர்கள் அவ்விலக்கியங்களில் இயற்கையைப் பாடுபொருளுக்குப் பின்புலமாக மட்டுமல்லாமல் அதை மாந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் கையாண்டிருக்கிறார்கள். தமிழ் இலக்கியங்களில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பண்பாட்டு மானடவியல் சார்ந்த ஆய்வுகள் சங்க இலக்கியத்தில் கடந்த முப்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கையையும் மனிதவாழ்வையும் இரண்டறக்கலந்த சூழலைப் பறைசாற்றும் இவ்விலக்கியங்கள் தமிழ்ச்சமூகத்தின் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்கின்றன.

**திணைக்கோட்பாடு**

திணை என்ற சொல்லிற்கான விளக்கமாக இடம், ஒழுக்கம், குடி, குளம், பூமி, பொருள் என்று தமிழ்மொழி அகராதி பொருள் தருகின்றது. திணை என்றால் பாகுபாடு என்றும் பொருள் கொள்ளலாம். முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் முப்பெரும்

 **ISBN: 978-81-997928-9-0**

கோட்பாட்டினை உருவாக்கியிருந்தனர். ஐந்திணைக் கோட்பாட்டினைப் பற்றிய சூத்திரம் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அதில் கருப்பொருள் குறித்த சூத்திரம் இவ்வாறு இயம்புகிறது.

**தெய்வம் உணவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப.**

நிலத்திற்குரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, யாழ் முதலியவற்றோடு பிறவும் கருப்பொருள் என்று *தொல்காப்பியம்* சுட்டுகிறது. அவற்றுள் மரங்களையும் தாவரங்களையும் அணுகி ஆய்வதே இவ்வாய்வின் மைய நோக்கமாகும்.

**சங்க இலக்கியத்தின் நிலப்பகுப்பும் தாவரங்களும்**

சங்க இலக்கியத்தின் தனித்துவமான அம்சம், நிலப்பகுப்பு அடிப்படையிலான அகத்திணைப் பிரிவுகளாகும். ஒவ்வொரு நிலப்பகுதியிலும், அங்குள்ள மக்களின் வாழ்வியல், உணர்வுநிலைகள், தெய்வங்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவை தனித்தன்மையுடன் குறிப்பிடப்பட்டுள்ளன. இது, தாவரங்களுக்கும் மக்களின் வாழ்வுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

**குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்)**

மலையும் மலைச்சாரலும் காதலின் களவாகிய புணர்தல் நிலமாக குறிஞ்சி வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு குறிஞ்சிப் பூ முதன்மையான தாவரமாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் மலர்அரிய. காதலைக் குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. குறிஞ்சி என்ற


**ISBN: 978-81-997928-9-0**

சொல் சங்க இலக்கியத்தில் 19 இடங்களில் ஆளப்பெற்றிருக்கிறது.

**முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்)**

காடும் காடுசார்ந்த இடமும் கற்பொழுக்கத்தின் பிரிதல், காத்திருத்தல் நிலமாக முல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. முல்லைப் பூ, கார்காலத்தில் பூத்து, தலைவன் திரும்பி வரும் அறிகுறியாகவும், தலைவியின் பொறுமையின் அடையாளமாகவும் விளங்குகிறது. காயா, கொன்றை, பிடவம், தளவம், செங்காந்தள், பூசணி, அவரை போன்ற தாவரங்கள் இங்கு காணப்படும்.

**மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்)**

வயலும் வயல்சார்ந்த இடமும் ஊடலாகிய புணர்ச்சி நிலமாக மருதம் வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு தாமரை, குவளை, ஆம்பல், மருது, செங்கழுநீர், நெல், கரும்பு, வாழை போன்ற தாவரங்கள் முதன்மை பெறுகின்றன. இங்குள்ள பூக்கள், தலைவன்-தலைவி ஊடலின் வெவ்வேறு நிலைகளை உருவகப்படுத்தப் பயன்பட்டன. நெல், கரும்பு போன்ற வேளாண் பயிர்கள் மருத நில மக்களின் செழிப்பான வாழ்வாதாரத்தைக் காட்டுகின்றன.

**நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்)**

கடலும் கடல்சார்ந்த இடமும், தலைவன் பிரிந்து சென்றதால் ஏற்படும் இரங்கல், வருத்தம் நிலமாக நெய்தல் வரையறுக்கப்பட்டுள்ளது. தாழை, கண்டல், புன்னை, ஞாழல், அத்தியல், சங்கு, அலர் போன்றவை இங்கு காணப்படும் தாவரங்கள். புன்னை மரம், தலைவியின் வருத்தத்திற்கு சாட்சியாகவும், கடலோர வாழ்வின் அடையாளமாகவும் விளங்குகிறது.

 **ISBN: 978-81-997928-9-0**





**பாலை (மணலும் மணல் சார்ந்த இடமும்/வறண்ட நிலம்)**

வறண்டுபோன நிலம் பிரிதல் நிலமாக பாலை வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு பாலை, ஓமை, இலுப்பை, கள்ளி, எருக்கலை, வெங்காயம் போன்ற வறண்ட நிலத் தாவரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்தத் தாவரங்கள் தலைவன் பிரிந்து சென்ற தலைவியின் துயரத்தையும், காட்டின் கடுமையையும், பயணத்தின் இடர்களையும் உணர்த்தப் பயன்படுகின்றன.

**தாவரங்களின் குறியீட்டுத் தன்மை**

சங்க இலக்கியத்தில் தாவரங்கள் வெறும் இயற்கை வருணனைகளாக நிற்காமல், ஆழமான குறியீட்டுப் பொருளைக் கொண்டுள்ளன.

**அகத்திணைக் குறியீடுகள்**

ஒவ்வொரு திணைக்கும் உரிய பூக்கள், அத்திணைக்குரிய உரிப்பொருட்களை (காதல், கற்பு, ஊடல், பிரிதல், இரங்கல்) உணர்த்தும் குறியீடுகளாகப் பயன்பட்டன. குறிஞ்சிப் பூ புணர்ச்சியையும், முல்லைப் பூ காத்திருத்தலையும், மருதப் பூ ஊடலையும், நெய்தல் பூ வருத்தத்தையும், பாலைப் பூ பிரிதலையும் உணர்த்தின.

**உணர்ச்சி வெளிப்பாடுகள்**

செங்காந்தள் மலர், தலைவியின் மலர் போன்ற விரல்களுக்கும், வேங்கை மலர், தலைவியின் மேனிக்கும் உவமையாகப் பயன்படுத்தப்பட்டன. தாமரை மலர் தூய்மை, அழகு, செழிப்பு ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்பட்டது.

**சமூகக் குறியீடுகள்**

வேங்கை மரம், களவு வெளிப்பட்டுத் திருமணம் முடித்ததற்கான அடையாளமாகப் பயன்பட்டது. களிறு,

 **ISBN: 978-81-997928-9-0**

வேங்கை மரத்தைச் சந்தன மரமென நினைத்துத் தேய்த்ததாகக் கூறப்படுவது, காதலின் மயக்கத்தை உணர்த்துகிறது.

**அன்றாட வாழ்வில் தாவரங்கள்**

சங்கத் தமிழரின் அன்றாட வாழ்வில் தாவரங்கள் இன்றியமையாத இடத்தைப் பிடித்திருந்தன.

**உணவுப் பொருள்கள்**

நெல், கரும்பு, வாழை, பலா, மா, அவரை, துவரை போன்ற வேளாண் பயிர்கள் மக்களின் முக்கிய உணவாகச் செயல்பட்டன. பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம் ஆகியவை உணவாகவும், விருந்தாகவும் பரிமாறப்பட்டன.

**மருத்துவப் பொருள்கள்**

வேம்பு, ஆலம், அரசு போன்ற மரங்கள் மருத்துவ குணங்களுக்காக அறியப்பட்டன. சங்கப் பாடல்களில் குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சை முறைகள் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், தாவரங்களின் மருத்துவப் பயன்கள் பற்றிய அறிவு அவர்களிடம் இருந்ததை பல குறிப்புகள் உணர்த்துகின்றன.

**அழகு மற்றும் அணிகலன்கள்**

பெண்கள் தழையாடை அணிந்தனர். பூக்களைக் கொண்டு மாலைகள் செய்து அணிந்தனர். கூந்தலில் மலர்கள் சூடினர். ஆண்கள் வீரத்தின் அடையாளமாக நறுமணப் பூக்களைத் தலையில் சூடினர்.

**இருப்பிடம் மற்றும் கருவிகள்**

மூங்கில், தென்னை, பனை போன்ற மரங்கள் வீடுகள் கட்டவும், கருவிகள் செய்யவும் பயன்படுத்தப்பட்டன. பனை ஓலைகள் எழுதவும், கூரை வேயவும் பயன்பட்டன.


**ISBN: 978-81-997928-9-0**

**சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள்**

பல மரங்கள், தெய்வங்களின் உறைவிடமாகக் கருதப்பட்டன. உதாரணமாக, முருகனுக்குரிய மரம் கடம்பு. கொற்றவைக்கு உரியது வேங்கை. ஒவ்வொரு போருக்கும், அதற்குரிய பூவை சூடிச் சென்றது புறத்திணை மரபுகளில் ஒன்று (எ.கா: வெட்சிப் போர், கரந்தைப் போர்). வேங்கை, அகில், சந்தனம், காந்தள், தென்னை, பலா, மூங்கில் போன்ற தாவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக, வேங்கை மரம் களவொழுக்கம் வெளிப்படும் இடமாகவும், திருமணம் நடைபெறும் இடமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**சந்தன மரம்**

சாந்தம், சாந்து, சந்து, ஆரம் என்ற பல பெயர்களில் சங்க இலக்கியங்களில் சந்தன மரம் கையாளப்பெற்றுள்ளது. வளமை என்ற ஒற்றைப் பொருண்மையில் சந்தன மரத்தின் பண்பினைக் குறியீடாகச் சங்க இலக்கியங்கள் பல இடங்களில் பதிவு செய்கிறன. சங்க கால மக்களின் நேரிய பண்பிற்கும் செம்மாந்த பண்பாட்டிற்கும் காரணமாக இருந்தவற்றுள் இயற்கையையும் சுட்டலாம்.சந்தன மரம் தன் அருகில் வளரும் பிறவகை மரங்களின் வேர்களில் இருந்து தனக்கான சத்தினை உறிஞ்சிக்கொள்ளும் என்ற அறிவியலை அறிந்து, அதற்கேற்றார் போல் பிற பயர்களை ஊடுபயிர்களா வளர்த்தனர் என்ற செய்தி வியப்பளிக்கிறது.

குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளாக விளங்கும் சந்தன மரம் அந்த நிலத்தில் இருக்கும் தேனீக்கள் தேனை சேகரித்து வைப்பதற்கு சந்தன மரத்தை அதிகம் பயன்படுத்தும் என்கிறது நற்றிணைப் பாடல்

 **ISBN: 978-81-997928-9-0**

**தாமரை தண்தாது ஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,**
**புரைய மன்றோர் புரையோர் கேண்மை**

**(நற்றிணை, பா. 1)**

என்ற பாடலில் தலைவி, தலைவனோடு கொண்ட நட்பு உயர்ந்தது என்பதைக் கூறி, தேனீயைச் சுட்டி அது உயர்ந்த சந்தனமரத்தில் தனது மகரந்தங்களை ஊதும் தன்மை கொண்டது என்று புலவர் கபிலர் கூறுகின்றார். மேலும் சந்தனமரத்தின் உயர்ச்சியைச் சுட்டி அதோடு தலைவனும் உயர்ந்த பண்புலநலன்களை உடையவன் என்று சுட்டப்பெறும் பொருளை மையப்படுத்திப் பார்க்க வேண்டும்.

எந்த வகை மரமாயினும் அதன், மேற்பட்டையை உரிக்கக் கூடாது என்று தாவரவியல் வல்லுநர்கள், தெரிவிக்கின்றனர். அவ்வாறு செய்தால் அந்த மரம் பட்டுப்போகும். இவ்வறிவியல் உண்மையை பழந்தமிழர் அறிந்திருந்தனர் என்பதை நற்றிணைப் பாடல் ஒன்று சுட்டுகிறது.

**மரல்நார் உடுக்கை மலை குறை குறவர்**
**அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்**
**வறனுற்று ஆர முருக்கி, பையென**

**(நற்றிணை– 64)**

மரல் நாரினாலே பின்னிய ஆடையை உடைய மலைவாழ் குறவர்கள் சிறிய இலையை உடைய சந்தன மரத்தின் மேற்பட்டையை அறியாமல் அறுத்தனர். அதனால் அந்த மரம் வற்றத் தொடங்கியது என்று இப்பாடல் கூறுகிறது. தாவர்களைப் பற்றியி அறிவினை புலவர்கள் நன்கறிந்திருந்தனர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

உணர்வோடு சந்தனம்


**ISBN: 978-81-997928-9-0**

நீரை முகந்து செல்லும் கருமையான மேகங்கள் மேற்குப்புற மலையில் மழையைப் பெய்ததால், சிறிய கிளைகளில் பூங்கொத்துக்களை உடைய குளிர்ச்சி பொருந்திய சந்தன மரம் தழைத்தது என்பதை

**''கொண்டல் மாமழை குடக்கு ஏர்பு குழைந்த**
**சிற்கோல், இணர பெருண்தண் சாந்தம்**
` **வகைசேர் ஐம்பால் தகைப் பெற வாரி'**

**(நற்றிணை– 140)**

மழைப் பொழிவினால் சிறிய கிளைகளை உடைய விறலிச் சந்தனம் கொத்துக் கொத்தாய் மலர்ந்திருந்தது. சிறிய கிளைகளிலேயே பூக்களைக் கொண்டிருப்பதால் தான் தலைவி விறலிச் சந்தன மரத்தடியில் நின்று நடனமாடுகிறாள். மனம் சோர்வுறும் சூழலில் நல்ல நறுமணம் அம்மனநிலையை மாற்றும் தன்மையுடையது என்பதையும் சேர்த்துப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வளத்தின் அடையாளம்**

அகநானூற்றுப் பாடலொன்று, தலைமகன் தன் நிலத்தின் பெருமைகளைக் கூறும் பான்மையில் தனது மார்பில் எப்பொழுதும் சந்தனம் பூசியிருக்கிறான் என்று தலைவி கூற்றின் வழி புலப்படுத்துகின்றனர்.வளம் மிகுந்த இடத்தில் தான் சந்தனம் வளரும் எனவே தலைவன் தன் நாட்டின் பெருமையை உணர்த்தவே மார்பில் சாந்தம் அணிந்துள்ளான் என்று பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது.

**"சென்மதி சிறக்க நின் உள்ளம் – நின்மலை**
**ஆரம் நீவிய, அம்பகட்டு மார்பினை"**

**(அகநானூறு, 288)**

இப்பாடலில் சுட்டப்பெறும், ஆரம் என்ற சொல் சந்தனத்தைக் குறிக்கின்றது.சந்தனத்தை மார்பில்


**ISBN: 978-81-997928-9-0**

அணிவது குறித்து அகநானூற்றிலும் ஒரு பாடல் காணப்படுகிறது.

**"சாந்து ஆர் அகலமும் தகையும் மிக நயந்து**
**ஈங்கு நாம் உழக்கும் எவ்வம் உணரான்"**

**(அகநானூறு, 388)**

என்பதில் சந்தனம் பூசப்பெற்ற மார்பினை உடைய தலைவனை தலைவி நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணாமல் தாய் வேலன் வெறியாற்று நிகழ்த்துகிறாள் என்பதை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**மாமரம்**

மாமரம் மருதுத்துவப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப் பட்டதாக சில குறிப்புகள் இருந்தாலும் கூட அதிக அளவில் சுட்டப்பெறவில்லை.ஆயினும் வழிபாட்டு முறைகளில் மாவிலைக்கு மிகுந்து முக்கியத்துவம் உண்டு. அதன் கனியின் சுவை குறித்தும், மாவின் நிறம் குறித்தும் இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. மாமரம் மருத நிலத்திற்குரிய மரமாதலின் சோலைகள் சூழ் நிலங்களைக் குறிப்பிடும் இடத்தில் மாமரங்கள் சுட்டப்பெறுகின்றன. மாவின் நிறம் தலைவியின் மாமை நிறத்திற்கு ஒப்புமையாகக் கூறப்படுகிறது.

தலைவன் பொருள்வயிற் பிரிவு நேர்ந்த போது, தலைவி அவன் செல்லும் வழி எத்தன்மைத்தோ என்றெண்ணி வருந்திக் கொண்டிருப்பாள். அவளது மனவோட்டத்தினை உணர்ந்துகொண்ட தலைவன் அவளுக்கு ஆறுதல் கூற முயல்வதாய் அமைந்த நற்றிணைப்பாடல்,

**"நிழல் காண்தோறும் நெடிய வைகி,**
**மணல் காண்தோறும் வண்டல் தைஇ**

 **ISBN: 978-81-997928-9-0**

**வருந்தாது ஏகுமதி – வால் எயிற்றோயே!**
**மா நனை கொழுதி மகிழ் குயில் ஆலும்"**

**( நற்றிணை 9)**

என்ற அடிகளில் மாமரத்தின் இனிமையான அரும்பை கோதி மகிழ்கின்ற குயில், கூவி விளையாடும் நறுமணம் கமழும் குளிர்ந்தி சோலையை உடையன. தான் செல்லும் வழியின் அருமை பற்றித் தலைவன் கூறுமிடத்து மாமரம் குறித்த கருத்து இடம்பெற்றுள்ளது. அசுரனாகிய சூரபதுமன் மாமரமாக நின்றான். வேற்படையினை உடைய முருகன் அம்மரத்தினை வேருடன் வெட்டி வீழ்த்தினான் என்று பரிபாடல் கூறுகிறது.

**"கடுஞ்சூர் மா முதல் தடிந்து அறுத்த வேல்**
**அடம் போராள நின் குன்றின் மிசை**
**ஆடல் நவின்றோர் அவர் போர் செறுப்பவும்**

**(பரி-23)**

**"... போர் மலிந்து**
**சூர் மருங்கு அறுத்த சுடர்ப் படையோயே**

**(பரி – 25)**

போர்த் தொழிற்கண் சூரபத்மனாக நின்ற மாமரத்தின் கிளையோடு அறுத்த சுடர்விடும் வேற்படையை உடையவன் என்ற செய்தியினைப் புலப்படுத்த மாமரத்தைப் புலவர் பயன்படுத்தியுள்ளார். உலக உயிர்களுக்குத் தீமைசெய்வதில் ஒப்பற்றவனாக மாரத்தின் வடிவில் நின்ற சூரபத்மனை வேறோடு அழித்தான் முருகன் என்று பரிபாடலில் கூறப்பட்டுள்ளது.

**நெல்லி மரம்**

தலைவனும் தலைவியுத் உடன்போக்கு மேற்கொண்ட பின்பு செவிலி தலைவி சென்ற வழியின்

 **ISBN: 978-81-997928-9-0**

தன்மையை அறிந்து வருந்துகிறாள்.அவ்வாறு புலம்பும் மொழியாக,

**“செல் பெருங் காளை பொய்ம் மருண்டு,**
**சேய் நாட்டுச் வைக்காய் நெல்லிப் போக்கு**
**அரும் பொங்கர் வீழ்கடைத் திரள் காய்**
**ஒருங்குடன் தின்று” ( நற்றிணை – 271)**

தலைவனின் சொல்லை நம்பி உடன்போக்கினை மேற்கொண்ட தலைவி சென்ற பாலை நிலமானது நெல்லி மரங்கள் நிறைந்த கடத்தற்கரிய வழியாக இருக்கும் என்பதை உணர்த்தவே தலைவி நெல்லிக்கனி உண்பதாகப் பாடல் பதிவு செய்துள்ளது.சங்க இலக்கியப் பாடல்களில் நெல்லி மரம் பாலை நிலத்தில் நிறைந்திருக்கும் மரமாகவும் அது வழிப்போக்கர்கள் உண்டு நீர்வேட்கையைத் தணிப்பதற்காக உண்பதாகவும் பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நெல்லிக்கனியை விலங்குகளும் பறவைகளும் உண்ணும் என்ற செய்தியையும் பாடல்களில் காணமுடிகிறது.

தலைவன் கூற்றாக அமைந்த குறுந்தொகைப் பாடலில் நெல்லிக்கனி அறம் காக்கும் கனி என்று கூறுகிறிது. வழிப்போக்கர்களின் உயிரைக்காப்பதால் அவ்வாறு குறிக்கப்படுகிறார் பெருந்தேவனார். அவ்வரிகளாவன,

**“அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்**
**மறப்புலிக்குருளை கோளிடங் கறக்கும்”(குறு. 209)**

என்பதாகும், நெல்லிக்கனியை மான் என்னும் மரையினம் உண்ணும் தன்மை கொண்ட பாலைதிணைப் பாடல்,

**“கல்லுயிர் நண்ணி யதுவே, நெல்லி**
**மரையின மாரு முன்றிற்**
**புல்வேய் குரம்பை நல்லோளூரே” (குறு. 235)**

 ISBN: 978-81-997928-9-0

நெல்லி மரத்தின் சிறப்பினைக் கூற விழையும் நக்கண்ணையார் வெளவால் நெல்லிக்கனியை உண்பது போல கனவு காண்பதாகச் செய்யுள் பாடியுள்ளார்.

**“வெல்போர்ச் சோழர் அழிசி அம் பெருங்காட்டு**
**நெல்லி அம்புளிச் சுவை கனவியா அங்கு”**
**(நற்றிணை – 87)**

அழிசி என்ற மன்னனின் பெருங்காட்டில் இருக்கும் ‘நெல்லிக்கனி’ யை மாமரத்தில் உறங்கும் வெளவால் உண்பது போல் கனவு கண்டதாகப் பாடியுள்ளார்.

**புறநானூற்றில் நெல்லி மரம்**

அதியமானின் கொடைப்பெருமையைக் கூறும் புகழ்பெற்ற பாடலொன்றில், மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்கான ஆற்றல் கொண்ட அரிய தொன்மை வாய்ந்த மலைப்பிளவுகளில் கிடைக்கக்கூடிய நெல்லிக்கனியைப் பரிசாகப் பெற்றான் அதியமான் நெடுமான் அஞ்சி, அதனை தான் மட்டுமே தனித்துண்ணாமல் அதன் சிறப்பினை நின்னுள் அடக்கிக்கொண்டு என்களித்தாய் என்று வியந்து பாடுகிறார் ஔவை.

**“மன்னிகப் பெரும! நீயே, தொல்நிலைப்**
**பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட**
**சிறியிலை நெல்லி தீங்கனி குறியாது,**
**ஆதல் நின் அகத்து அடக்கி,**
**சாதல் நீங்க, எமக்கு ஈந்தனையே” (புறம். 91)**

**பனை மரம்**

எல்லா மரங்களும் மண்ணில் பாதுகாப்பட வேண்டிய மரங்களே, அதில் தமிழர்களின் வாழ்வியலுடன் மிக நெருங்கிய தொடர்புடைய மரம் பனை மரத்தினை காப்பது தலையாயக் கடன் என்றால் அது மிகையாகாது.

 **ISBN: 978-81-997928-9-0**

பனைமரம் குறித்த ஆய்வுகளும் விழிப்புணர்வு கருத்துக்கள் அளவிடற்கரியனவாக இருக்கின்றன. பனை மரம் மனித வாழ்க்கைக்கு உயிர்நாடியாகக் கருதப்படுகிறது. நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் பனை பெரும்பங்காற்றுகிறது. மேலும் இன்று நாம் பெருமையடைக் காரணமாக இருக்கும் எல்லா வகையாக இலக்கியங்களும் தொன்மைக் காலத்தில் பனையோலைகளிலேயே எழுதப்பட்டன. அவைகளை பின்னாளில் காகிதத்தாளில் அச்சேற்றினோம். இன்றளவும் பனையோலைச் சுவடிகளைப் பெட்டகமாகப் பாதுகாத்து வருகிறோம். கடலும் கடல் சார்ந்த நிலமாக இருக்கும் நெய்தல் நிலத்தின் கருப்பொருளான பனை மரம் சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பெறுகிறது.

கடற்கரைச் சோலையின் அழகினைச் சொல்லப் போந்த காஞ்சிப் புலவனார் பாடலில் 'பெண்ணை' என்ற சொல்லில் பனை மரத்தைக் குறிப்பிடுகின்றார்.அதுபோல பறவைகள் பனைமரத்தில் கட்டிய கூட்டில் சென்று தங்கும் என்பதையும் குறிப்பிடும் நெய்தல் நிலப்பாடலில் பனை மரத்தைச் சுட்டிச் செல்கின்றனர். வரைவு கைகூடாத நிலையில் தலைவன் தலைவியிடம் பனை மரத்தின் கருக்கினால் செய்யப்பெற்ற குதிரையில் ஏறி ஊர்வலம் வருவேன் என்று அச்சுறுத்துவான். பின் ஊரார் அலர் தூற்றுதலுக்கு அஞ்சி அவர்களுக்கு திருமணம் நடைபெறும்.இதனைச் சங்கப்பாடல்கள் மடலேறுதல் என்று பதிவு செய்கிறது. மடலேறுவாதக் கூறுவானேயன்றி மடலேறியதாகப் பதிவுகள் இல்லை.

நாரூ பனை மடலால் கூடு கட்டியுள்ளது என்ற செய்தியை சுட்டும் பாடல் நெய்தல் திணையில்

 ISBN: 978-81-997928-9-0

இடம்பெற்றுள்ளது.உயர்ந்த மணல் மேடுகள் சூழ்ந்த நீண்ட கரிய பனையின் வளர்ந்த மடலில் கூடு கட்டியுள்ளது. அக்கூட்டில் வாழும் வெண்ணிற நாரை தன் துணையைப் பிரிந்திருக்கும் நிலையில் நடு இரவில் ஓசை எழுப்பும் என்ற பொருண்மையில் நற்றிணைப் பாடல்,

**“வீங்கு மடல் குடம்பைப் பைதல் வெண் குருகு**
**நள்ளென் யாமத்து உயவுதோறு உருகி”**

**( நற்றிணை 199)**

பிறிதொறு நற்றிணைப்பாடலில் பருத்த அடியினை உடைய பனை மடலில் இருக்கும் அன்றில் பறவைகள் தன் துணையுடன் பேசும் இனிய ஓசையைக் கேட்டு வருந்தி நிற்பேன் போலும் என்று கூறுகின்ற பொருளில் அமைந்துள்ளது.

**பரியாரைப் பெண்ணை அன்றிற் குரலே?**

மற்றொமொரு நற்றிணைப் பாடல் பனைமரத்தில் அன்றில் கூடு கட்டும் என்ற செய்தியினைப் பதிவு செய்துள்ளது.

**“மன்றப் பெண்ணை வாங்கு மடற் குடம்பைத்**
**துணை புணர் அன்றில், உயவுக் குரல்”**

**( நற்றிணை 303)**

என்பதன் மூலம் புலப்படுகின்றது. பனைமரத்தில் இருக்கும் அன்றில் தன் துணையுடன் இருப்பதனைப் பார்த்த தலைவி வருந்துவதாகக் கூறும் பாடலை வெள்ளிவீதியார் நற்றிணையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

அகநானூற்றில் குன்றியனார் என்னும் புலவர் நெய்தல் திணைப் பாடலில் வயல்களில் நெல் அறுவடை செய்வோரின் பறையோசைக்கு அஞ்சி அச்ச ஒலியை எழுப்பிக் கொண்டு பனை மரத்தின் மடலிலே சென்று


ISBN: 978-81-997928-9-0

உறங்கும் என்ற செய்தியினை கீழக்கண்ட பாடல் விளக்குகின்றது.

**“செறி மடை வயிரின் பிளிற்றி,பெண்ணை**
**அகமடல் சேக்கும் துறைவன்” ( கலி., 83 )**

மனித வாழ்வியலை மையமிட்ட இலக்கியங்களில் இயற்கை சார்ந்த கூறுகள் இரண்டறக் கலந்துள்ளன என்பது மறுக்க இயலாத உண்மை. இயற்கைச் சூழ்நிலையை முழுமையாக உணர்ந்துகொண்ட மனிதன் மட்டுமே அதன் இயல்புகளையும் எதிர்ப்புகளையும் முழுமையாகப் புரிந்துகொண்டு வாழத் தழைபடுவான். அவ்வகையில் பனைமரம் இயற்கை சார்ந்த நிலவியல் கூறுகளோடு நெய்தல் நிலத்தின் மரமாக மனிதனுக்குப் பல முறைமைகளில் பயன்பட்டுள்ளது என்பதைக் கலித்தொகை பாடல் ஒன்றின் வழியே அறியலாம். பெண் பனையைப் பெண்ணை என்று கூறுவர் பெரிய மடல்களை உடைய தென்னம்பாலை போல் சிரிப்பும் வளைந்த வாய்கொண்ட கொடிபோன்ற மடற்பெண்ணை என்று மேற்கண்ட பாலில் பனைமரம் கூறப்பட்டுள்ளது.

நெய்தல் நில மரமான பனைமரம் பல்வேறுவகையான பறவைகளுக்கு இருப்பிடமாக இருந்துள்ளமையை சங்கி இலக்கியப்பாடல்களில் கண்கூடாகக் காணமுடிகிறது. பெண் பனையை பெண்ணை என்று கூறுவர் பெரிய மடல்களை உடைய தென்னம்பாலை போல் சிரிப்பும் வளைந்த வாய்கோண்ட கொடிபோன்ற மடற்பெண்ணை என்று இரும்பெண்ணை படரும் பனை அணிநிலை பெண்ணை, மன்றப்பனை போன்ற சொற்கள் பனை மரத்தினைக் குறித்தனவாக அமைந்துள்ளன.

**மூங்கில் மரம்**

 ISBN: 978-81-997928-9-0

மூங்கில் மரம் சங்க கால மக்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததென்பதை, எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சான்று பகர்கின்றன. மூங்கிலால் செய்யப்பெற்ற பொருள்களைப் பற்றிய செய்திகள் மட்டுமின்றி மூங்கில் பல்வேறு பாடல்களில் உவமையாகக் கையாளப்பட்டுள்ளது என்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

**மூங்கில் நெல்**

பாலைத் திணையில் காவிரிப்பூப்பட்டினத்து கார்க்கண்ணனார் என்னும் புலவர் மூங்கில் நெல்லசிரி பற்றிப் பாடியுள்ளார். பெரிய புலியானது ஆண் மானை அடித்துக் கொண்டு கருங்கற்களை உடைய அகன்ற பாறையில் கிடத்தி அதனை வயிறு நிறையும் அளவு தின்றுவிட்டுப் போன காய்ந்த இறைச்சியை வழி செல்லும் வம்பலர் கண்டு மகிழ்ந்தனர். அவ்வவிறைச்சியை அவ்விடத்தில் நன்கு தழைத்து வளர்ந்த மூங்கில் அரசியோடு ஆயர்ச்சேறி தயிரையிட்டு உண்டனர் என்று பாடியுள்ளார்.

**"இரும்புலி துறந்த ஏற்று மான் உணங்கல்**
**நெறி செல் வம்பலர் உவந்தனர் ஆங்கண்**
**ஒலிக்கழை நெல்லின் அரிசியொடு ஓராங்கு"**

**(அகம், 59)**

நீண்டு வளர்ந்துள்ள மூங்கிலின் நெல்லினை உண்பதற்கு ஆண் மான் தன் இணையை அழைத்ததாக குடவாயிற் கீரத்தனார் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**"அலங்கல் வான்கழை உதிர் நெல் நோக்கி**
**கலைப்பிணை விளிக்கும் கானத்து ஆங்கண்"**

**(அகம் 72)**

 **ISBN: 978-81-997928-9-0**

தலைவன் பிரிந்து சென்ற நிலமானது வெப்பம் மிகுந்தது என்பதை உணர்த்தும் பான்மையில் வெய்யிலின் மிகுதியால் நிலம் பிளவுற்றுக் காணப்படும் அதில் மூங்கிலின் நெல்மணிகள் விழும்போது அவை நெற்பொரிகளாகப் பொரிகின்ற ஓசை விரல்களை சொட்டுக்கு முறிப்பது போன்ற கேட்கும் என்று புறநானூற்றுப் பாடல் பதிவுசெய்துள்ளது.

**உவமைகளில் மூங்கில்**

மூங்கிலின் தோற்றம், வளரிடம் பசுமை மற்றும் திரட்சி போன்ற காரணங்களுக்காக அவை பல்வேறு இடங்களில் உவமைகளாகப் புலவர்களால் பயன்படுத்தப்பெற்றுள்ளன. ஓரேருழவனார் பாடியுள்ள பாடலில்

**"அடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்**
**பேரமர்க்கண்ணி யிருந்த ஊரே" (குறுந்., 31)**

தலைவனோடு தலைவி கொண்ட அன்பின் மேன்மையை சுட்ட வரும் புலவர் தலைவி கூற்றாக கூறும் வரிகளில்,

**"பூவொடு புரையும் கண்ணும் வேய் என**
**விறல் வனப்பு எய்திய தோளும் பிற என"**
**(குறுந்., 34)**

என்பதில் தலைவன் தலைவியைக் கூடுவதற்கு முன்பாக இருந்த அழகு நலனை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. என் தோள்களும் மூங்கில் எண்ணுமாறு எல்லோரையும் வெற்றி கொள்ளும் என்ற பொருண்மையில் பாடியுள்ளார்.

**"வேய் வனப்புற்ற தோளை நீயே,**
**என் உயவு அறிதியோ,நல் நடைக் கொடிச்சி"(நற் 6)**

இவ்வரிகள், தலைவியின் அழகினைக் கூற மூங்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

 ISBN: 978-81-997928-9-0





### மூங்கில் பொருட்கள்

குறுந்தொகையில் மூங்கில் வேலி அமைக்கப்பட்ட கருத்தைத் தெரிவிக்கும் பாடல், கபிலர் குறிஞ்சி திணையில்,

**“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**
**சாரல் நாட செவ்வியை” ( குறந் 28 )**

என்ற வரிகளில் மலைநாட்டினை உடைய தலைவன் அவன் வாழ்விடத்தில் சிறு தூங்கில்களாகிய வேலி உள்ள இடத்தில் வேரிலே பழங்குலைகளை உடைய பலாமரங்கள் செறிந்திருக்கின்றன என்பதாக பொருள் கூறப்பட்டுள்ளது.

### குறிப்புகள்

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் தெளிவுரை.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.
[2] ஔவை துரைசாமி நாட்டார். *புறநானூறு.* கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.
[3] ஔவை துரைசாமி நாட்டார். *அகநானூறு.* கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.
[4] *சிறுபாணாற்றுப்படை.* சாரதா பதிப்பகம், சென்னை, 2021.
[5] *பெரும்பாணாற்றுப்படை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2021.
[6] ஔவை சு .துரைசாமி. *ஐங்குறுநூறு.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.
[7] ஔவை சு .துரைசாமி. *நற்றிணை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.
[8] ஔவை சு .துரைசாமி. *குறுந்தொகை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

 **ISBN: 978-81-997928-9-0**

[9] புலியூர்கேசிகன். *திருக்குறள்) உரை(*. பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN: 978-81-997928-9-0**

# Flora in Sangam Literature

**Dr. A. Ranjani,** Assistant Professor of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0007-4650-3710**

## Abstract

*Sangam literature is a document that preserves the old. These literatures are the best proof that the ancient Tamils lived a very subtle life in harmony with nature without distorting its totality. The multidisciplinary knowledge of the Tamils, such as astronomy, botany, zoology, psychology, linguistics, etc., is a manifestation of the knowledge gained through centuries of experiencing and living in all the depths of nature - forest, mountain, sea, animal, bird, sky. Before we look at the scientific facts, plant management, the environment or the complete love for nature, we need to think a little about the life principle of the Tamils. Because life is so wonderful. The 19th century was the time when the western scholars recorded the bio-principle and plant-principle. But the Tamils have recorded various scientific nuances through literary grammatical texts more than five thousand years ago. In the Sangam literature alone, the names of 210 tree and plant vines are mentioned.*

**Keywords:** Fibre, Pus, Clothing, Medicine, War, Arts, Habitation.

## References


[1] Ilampuranar. *Tolkappiyam Thelivurai*. Manivasagar Pathippagam, Chennai, 1999.

[2] Avvai Duraisamy Nattar. *Purananooru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.

[3] Avvai Duraisamy Nattar. *Akananooru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.

[4] *Sirupanatrupadai*. Saradha Pathippagam, Chennai, 2021.

[5] *Perumpanatrupadai*. Gowra Pathippagam, Chennai, 2021.

[6] Avvai S. Duraisamy. *Ainkurunuru*. Gowra Pathippagam, Chennai, 2006.

[7] Avvai S. Duraisamy. *Natrinai*. Gowra Pathippagam, Chennai, 2006.

[8] Avvai S. Duraisamy. *Kurunthogai*. Gowra Pathippagam, Chennai, 2006.

[9] Avvai S. Duraisamy. *Malaipadukadam*. Gowra Pathippagam, Chennai, 2006.

[10] Puliyur Kesigan. *Thirukkural (Urai)*. Poompuhar Pathippagam, Chennai, 2009.


**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN: 978-81-997928-9-0

# சங்க இலக்கியத்தில் தாவர வளம்

**முனைவர் அ. ரஞ்சனி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-4650-3710**

## ஆய்வுச்சுருக்கம்

*சங்க இலக்கியங்கள் பழையனவற்றைப் பாதுகாக்கின்ற ஆவணங்களாக விளங்குகின்றன. பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து அதன் முழுமைத் தன்மையைச் சிதைத்து விடாமல் மிக நுணுக்கமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த இலக்கியங்கள் மிகச்சரியான சான்றுகளாக விளங்குகின்றன. தமிழர்களின் இந்த நுணுக்கம், வானியல், தாவரவியல், விலங்கியல், உளவியல், மொழியியல் போன்ற பல்துறைப் புலமை இவைகளெல்லாம் பல நூற்றாண்டுகள் காடு, மலை, கடல், விலங்கு, பறவை, வானம் என்ற இயற்கையின் எல்லா நிலைகளையும் அதன் ஆழ அகலங்களில் நுழைந்து அனுபவித்து வாழ்ந்ததன் மூலம் பெற்ற பட்டறிவின் வெளிப்பாடே என்று சொல்லலாம். தமிழிலக்கியத்தில் இருக்கக்கூடிய தாவார அறிவியல் உண்மைகள், தாவர மேலாண்மை, சுற்றுச்சூழல் அல்லது இயற்கை மீதான முழுமையான அன்பு இவைகளைப் பார்ப்பதற்கு முன்னால் தமிழர்களின் உயிர்க் கொள்கையைச் சற்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காரணம், அந்த உயிர்க் கொள்கையே மிக அற்புதமானது. மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் உயிர்க்கொள்கை, தாவரம் சார்ந்த கொள்கை இவைகளைப் பதிவுசெய்தது*

 **ISBN: 978-81-997928-9-0**

*19ஆம் நூற்றாண்டு. ஆனால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாக இலக்கிய இலக்கண நூல்களின் வாயிலாகப் பல்வேறு அறிவியல் நுணுக்கங்களைத் தமிழர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். சங்க இலக்கியங்களில் மட்டும் 210 மரம் செடி கொடிகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.*

**குறிப்புச்சொற்கள்:** தாழை, புன்னை, உடை, மருந்து, குடியிருப்பு, போர், கலைகள்.

**முன்னுரை**

தமிழர் பண்பாட்டிலும், அன்றாட வாழ்விலும் தாவரங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. உணவு, உடை, உறைவிடம், மருத்துவம் மற்றும் கலாச்சார சடங்குகள் என அனைத்திலும் தாவரங்களின் பயன்பாடு தமிழர்களுடன் இரண்டறக் கலந்துள்ளது. சங்க இலக்கியம் (கி.மு. 300 – கி.பி. 300) என்பது தமிழரின் அக, புற வாழ்வியலை ஆழமாகப் பதிவு செய்துள்ள ஒரு பொற்கால இலக்கியத் தொகுப்பாகும். இந்த இலக்கியக் களஞ்சியத்தில், தமிழரின் வாழ்க்கைக் கூறுகள், பண்பாட்டு நெறிகள் ஆகியவை விரிவாகப் பேசப்படுகின்றன. குறிப்பாக, அக்காலத் தமிழர்கள் இயற்கையோடு கொண்டிருந்த அசைக்க முடியாத பிணைப்பைச் சங்கப் பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன. மனிதன் தனது அடிப்படைத் தேவைகளுக்காகவும், உணர்வுப்பூர்வமான அனுபவத்திற் காகவும் தாவரங்களைச் சார்ந்து வாழ்ந்தான். சங்கப் பாடல்களில் ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட மரங்கள், செடிகள், கொடிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. உணவில் தொடங்கி உடை, மருந்து,

 **ISBN: 978-81-997928-9-0**

குடியிருப்பு, போர், கலைகள் என வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தாவரங்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாக இருந்ததை இந்தக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

**தமிழரின் தாவர அறிவியல் புலமை**

சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் குறிப்புகள், அன்றையத் தமிழர்கள் தாவரங்களை வெறுமனே அறிந்தவர்கள் அல்லர்; அவற்றின் நுண்ணிய அறிவியல் இயல்புகளைப் பற்றி ஆழமான புலமை கொண்டிருந்தனர் என்பதைத் தெளிவாக்குகின்றன. உதாரணமாக, தாமரை மலரானது குளிர்ந்த நீருக்குள் இருந்தாலும், அதன் உள்ளே மகரந்தச் சேர்க்கைக்காகத் தனக்குத் தேவையான வெப்பத்தை வைத்திருக்கும் நுட்பத்தை, "**பனி துறைப் பயந்த தாமரை**" போன்ற பாடல்கள் மூலம் அவர்கள் உணர்த்தியுள்ளனர். இது தமிழரின் தாவர வெப்பவியல் அறிவுக்குச் சான்றாகும். அதேபோல், ஆலமரத்தின் விழுதுகள் வெறும் வேர்கள் அல்லாமல், அவை வளர்ந்து மரத்துக்குத் தாங்கல்களாகவும், புதிய கிளைகளுக்கும் மரத்தின் நீட்டிப்புக்கும் பயன்படும் துணை வேர்களாகவும் செயல்படும் நுட்பத்தை அறிந்திருந்தனர். மேலும், தாவரங்களைப் பயன்படுத்தி நோய் நீக்கும் மருத்துவத்தில் அவர்கள் அறிவு கொண்டிருந்தனர்.

பாண்டிய மன்னனின் வீரர்களைப் புகழ்கின்றன. போர்க்களத்தில் மரணத்தை வெல்லும் மருந்தை விடவும், வீரமும் மானமுமே உயர்வானது என்று கருதிப் போரிட்டு இறந்த சங்கத் தமிழரின் உயர்ந்த வீர உணர்வையும், இலட்சியத்தையும் எடுத்துரைக்கிறது. இப்பாடல் வரிகள் அறிவியல் நெறியுடன் கூடியதாக இருந்தது. அதாவது, ஒரு மரத்தைக் கொல்லாமல், அதன் பகுதிகளிலிருந்து

 **ISBN: 978-81-997928-9-0**





மருந்து எடுக்க வேண்டும் என்ற கோட்பாடு, தமிழரின் அறிவியல் அறிவும், சூழலியல் பாதுகாப்பும் ஒன்றிணைந்திருந்ததை உறுதிப்படுத்துகிறது. இத்தகைய நுட்பமான பார்வைகள், தமிழரின் தாவர அறிவியல் புலமை, வெறும் அனுபவ அறிவுக்கு அப்பாற்பட்டதாக, விஞ்ஞானப் பூர்வமானதாக விளங்கியதைக் காட்டுகிறது. சங்கத் தமிழரின் இந்தப் பேணுதலான உறவு, வெறும் வாழ்வியல் தேவைக்கானதாக மட்டும் இல்லாமல், ஒரு உயர்ந்த பண்பாட்டு மரபாகவும் போற்றப்பட்டது.

**சங்க இலக்கியத்தில் வேளாண்மை தொழில்நுட்பம்**

சங்க இலக்கியத்தில் விதைத்தேர்வு, உழும் முறைகள், நிலம் தயாரித்தல், வேலி அமைத்தல், தானியங்களை சேமித்து வைத்தல் போன்ற நம் முன்னோர்களின் வேளாண் செயல்திறன்கள் எண்ணி வியக்க வைக்கின்றது. பயிர் செய்வதும் உணவு உண்பதும் என்று மேலோட்டமான வாழ்வை வாழாது ஒவ்வொரு செயலுக்கும் முக்கியத்துவம் அளித்து ஒவ்வொன்றையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து நுட்பமாக கண்டறிந்து தங்களுடைய வேளாண் அறிவை விருத்தி செய்திருப்பதை இலக்கியங்கள் மூலம் மிக எளிதாக நாம் உணரலாம். சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் நம் முன்னோர்கள் கண்டறிந்த வேளாண் பணிகளை இன்றளவும் ஏதோ ஒரு நிலையில் நாம் விடாது கடைபிடித்து வருகின்றோம். அத்தகைய வேளாண் பணிகளை சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை வழி அறியலாம். உழு தொழில் தலைசிறந்த தொழிலாகவும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழிலாகவும் கருதப்பட்டது. நன்கு உழக்கூடிய எருதுகளை முகத்தில் பூட்டி கலப்பையிலுள்ள

 ISBN: 978-81-997928-9-0

கொழும்பு முழுவதும் நன்றாக மண்ணில் அழுந்தும் படியாக செய்து பலசால் உழுது போடுவார் இதனை ,

**“நடைநவிழ் பெரும் பகடு புதவில் பூட்டி**
**பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்பு முக முழுக் கொழு ஊன்றி”**

**(பெரும்பாணாற்றுப்படை, பா. 198-200)**

உழவர்கள் எருதிணை பூட்டி ஏர்க்கலப்பையின் கொழுவை நிலத்தில் அழுத்தி உழுதனர். என்பதை பெரும்பாணாற்றுப்படை அறிவுறுத்தி இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் உழுது விதைக்கும் முறை போன்றே உலாமலே விதைக்கும் முறையும் காணப்பட்டது. பண்டைய காலத்தில் வேளாண் மக்கள் கால்நடைகளின் கழிவாகிய தொழு உரமும் இழைத்தலைகளாகிய தலைுறமும் பயன்படுத்துவதை மரபாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

**சங்க இலக்கியத்தில் நிலமும் தாவரமும்**

உலகம் ஒரு பல்லுயிர்க் களஞ்சியம். பழந்தமிழர் கொண்டிருந்த வாழ்க்கை முறை போற்றப்படக்கூடியது. தமிழர்கள் தங்கள் வாழிடத்தில் உள்ள தாவரங்களின் குறிப்புகளை இலக்கியத்தின் ஊடாக அறிமுகப் படுத்தியுள்ளனர். சங்கத் தமிழ் இலக்கியங்களில் 210 மரம், செடி, கொடிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. ஒரே மரத்திற்கு பல புலவர்கள் வேறு வேறு பெயர்கள் வழங்கியுள்ளார்கள். எனவே, அறிஞர்களின் ஆராய்ச்சிகளின் படி, இலக்கியங்கள் மூலமாக 150 தாவர வகைகள் அறியப்படுகின்றன. மேலும் புலவர்களின் இந்தக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு பின்னாட்களில் கண்டறியப்பட்ட தாவரங்களும் உண்டு.

 **ISBN: 978-81-997928-9-0**

ஒவ்வொரு வாழிடத்திலும் ஒவ்வொரு வகை தாவரம் செழித்து வளர்ந்ததை, தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. தமிழர் வாழ்வியலை வகுத்துரைக்கும் தொல்காப்பியத்தின் திணைக்கோட்பாடு, நிலத்தையும் அதற்கூரிய தாவரங்களையும் பிரித்துப் பார்க்க இயலாத ஒருமைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. இந்தத் திணைக்கோட்பாட்டின்படி, ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் (திணைக்கும்) உரிய முதற்பொருட்களில் ஒன்றாகத் தாவரங்கள் குறிக்கப்படுகின்றன.

**நிலப்பாகுபாடு மற்றும் மண்ணறிவியல்**

நிலப்பாகுபாடு மற்றும் மண்ண அறிவியல் வளர்ச்சியால் வேளாண்மை துறையில் வியக்கத்தக்க சாதனைகள் பல நிகழ்ந்துள்ளன. எனினும் அறிவியல் கோணத்தால் மக்களின் அணுகுமுறைகளும் செயல்முறைகளும் மட்டுமே வேறுபடுகின்றதே தவிர சங்க கால தமிழர்கள் பின்பற்றிய வேளாண்மை பற்றிய அடிப்படை கோட்பாடுகள் சிறிதும் மாற்றமின்றியே விளங்குகின்றன. இன்றைய இத்தனை வேளாண்மை விந்தைகளுக்கும் வேளாண் அறிவியல் முன்னேற்றங்களுக்கும் நம் முன்னோர்கள் அன்று கண்டறிந்த வேளாண்மை செயல்முறைகளும் கண்டறிந்த தொழில்நுட்பங்களுமே விதையாக விளங்கியது எனில் அது மிகையாகாது.

இன்றைய மண் அறிவியல் துறை சார்ந்த ஆய்வுகளுக்கும் சாதனைகளுக்கும் முதல் படியாக இருப்பது நம் முன்னோர்கள் ஆய்ந்த அறிந்த நிலப் பாகுபாடும் மண்ணின் தன்மைகள் குறித்த நுட்பங்களும் மண்ணுக்கேற்ற வகையில் பயிரினங்களை பயிர் செய்ததும் நிலத்தை சீர்திருத்தியதும் வளப்படுத்தியதுமே


**ISBN: 978-81-997928-9-0**

ஆகும். இலக்கியங்களை இவ்வுண்மைக்குச் சான்றாக விளங்கும் தொல்காப்பியர் நிலத்தை நான்காக பகுத்தமையே,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”**

**(தொல். பொருள்., நூ. 5)**

எனும் நூற்பாவில் நாம் அறியலாம். காடு நிறைந்த உலகிற்கு முல்லைப் பூ சிறந்தமையாலும், மலை சூழ்ந்த உலகிற்கு குறிஞ்சிப் பூ சிறந்தமையாலும், இந்நிலங்களுக்கு தொல்காப்பியர் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என பெயர் சூட்டினார் ஒவ்வொரு நிலத்திற்கும் சிறப்பாக உரிய தாவரத்தின் பெயரை அவ்வந்நிலங்களுக்கு பெயராயிற்று. நிலங்களின் வளத்தையும் இயல்பையும் நம் முன்னோர்கள் நுணுக்கி ஆராய்ந்ததன் விளைவை பாலை நிலப்பரப்பாகும். நிலத்துல் பாலை தனிநிலை பெறுதல் இல்லை முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தம் பருவம் தவறின் பாலை எனும் படிவம் பெறும் என்பதை சிலப்பதிகார அடிகள் கொண்டு அறியலாம்.

### குறிஞ்சி நில மக்கள்

**குறிஞ்சி** (மலை) நிலத்திற்குரிய முக்கியப் பூ **குறிஞ்சிப் பூ** ஆகும். இது காதலர்கள் கூடும் மகிழ்ச்சியான காலத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதுடன், வேங்கை, சந்தனம், அகில் போன்ற மரங்களும் இங்கு நிறைந்திருந்தன. குறிஞ்சி நிலத்தின் முதன்மையான

 **ISBN: 978-81-997928-9-0**

உணவுப் பயிர் தினை ஆகும். தலைவி தினைப் புனத்தைக் காக்கும் தொழிலைச் செய்வதாகப் பல பாடல்கள் கூறுகின்றன.

**"விளைந்த தினைக்கதிர் மேய்ந்து மகிழ**
**கிளிகள் வராததைக் கண்டு…"**

**(குறுந்தொகை, பா. 293)**

இந்தத் தினையே அவர்களின் பிரதான உணவு ஆதாரமாக இருந்தது. தினையைக் குத்திச் சமைத்த தினைச் சோறு மற்றும் தினை மாவு அவர்களின் அன்றாட உணவாகும்.

தேன் மற்றும் கிழங்குகள் குறிஞ்சி நில மக்களின் முக்கிய வணிகப் பொருளாகவும், உணவாகவும் இருந்தன.

**"மலைச் சுனை நீரினும் தேனினும்**
**இனியன குன்றத்துக் குறவர்**
**கொணர்ந்து தந்த தேனும் தினையும்**
**பாலும் பெறீஇத் தழையணி"**
**எருத்திற் தண்மலர் சூடி (ஐங்குறுநூறு, பா. 263)**

அன்றாட வாழ்வில் ஆடைக்குக் கூடக் குறிஞ்சி நிலப் பெண்கள் **தாவரங்களையே** சார்ந்திருந்தனர். **"தழையுடை மெலிந்த அல்குல்" (அகநானூறு, பா. 102)** ஆகவே, குறிஞ்சி நில மக்களின் வாழ்வாதாரம் என்பது, **தினைப் பயிர்**, காட்டு மரங்களில் இருந்து கிடைக்கும் **பழங்கள், கிழங்குகள், தேன்** மற்றும் **மூலிகைகள்** போன்ற தாவரப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது என்பதைச் சங்கப் பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

**முல்லை நில மக்கள்**

**முல்லை** (காடு) நிலத்திற்குரிய **முல்லைப்பூ** தலைவன் பிரிந்து சென்றபோது தலைவி பொறுமையுடன்

 ISBN: 978-81-997928-9-0

காத்திருக்கும் கற்பின் குறியீடாக அமைந்தது. இங்கே கொன்றை, காயா, குருந்தம் போன்ற மரங்கள் செழித்தன.

இப்பாடலில், முல்லை நிலத்தின் கார் காலம் தொடங்கும்போது, நிலத்தில் தாவரங்கள் பூப்பதும், அவற்றின் மகிழ்ச்சியை விலங்குகள் வெளிப்படுத்துவதும் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது.

**“உயர்ந்தோங்கு கொன்றை ஊழி ஊழியாகவும்**
**முல்லைச் செடியின் முறுவல் பூக்களும்**
**காயாஞ் செம்மல் கார்மலர் சூடவும்**
**கானமயில் அகவி காமர் புதல்வர்**
**ஆடுகளப் புல்வாய் ஆநிரை துளைப்ப”**

**(சிறுபாணாற்றுப்படை, பா. 88-92)**

முல்லை நிலத்து இடையர்கள் மாலையில் ஆநிரைகளைத் திரும்ப ஓட்டி வருவதையும், மாலைப் பொழுதில் முல்லைப் பூக்கள் பூப்பதையும் காட்டுகிறது.

**முல்லைப் பூக்கள்** (தாவரம்), **மாடுகள்** மற்றும் **கன்றுகள்** (விலங்கினம்), மற்றும் **ஆயர்கள்** (மக்கள்) ஆகிய மூன்றும் பிணைந்து வாழும் அன்றாடச் சூழலை மிகத் துல்லியமாகக் காட்டுகிறது. முல்லை நில மக்களின் வாழ்க்கை முழுவதுமே ஆநிரை மேய்த்தலையும், முல்லைச் செடிகள் பூக்கும் மாலையின் வரவையும் சார்ந்திருந்தது என்பதை அறியலாம்.

**மருதம் நில மக்கள்**

**மருதம்** (வயலும் வயலைச் சார்ந்த இடமும்) நிலத்தின் முக்கியத் தாவரங்களாக மருத மரம், தாமரை, குவளை மற்றும் நெல், கரும்பு போன்ற வேளாண் பயிர்களாக திகழ்ந்தன. இந்த நிலம் ஊடல் நிகழ்வதைக் குறிக்கும். செழிப்பைக் காட்டும் சங்கப் பாடல் வரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மருத நிலம் என்பது ஊடல்

 **ISBN: 978-81-997928-9-0**





(தலைவன் தலைவி சண்டை) என்ற உரிப்பொருள் நிகழ்ந்தாலும், அதன் பிரதான கருப்பொருள் மிகுந்த செல்வச் செழிப்பும் விவசாயமும் ஆகும். மருத நிலத்தின் தாவர வளத்தையும், அதன் மூலம் கிடைத்த பெரும் செல்வத்தையும், **"மருதத் தண்துறைத் தலைவன்" (அகநானூறு, பா. 6)** என்ற பாடல் வரிகளால் அறியலாம். நீரின் குளிர்ச்சியான துறைகளைக் கொண்ட **மருத மரங்கள்** சூழ்ந்த ஊரின் தலைவன். **மருத மரமே** அந்த நிலத்தின் பெயருக்கான அடிப்படையாக அமைந்தது. கரும்பு மற்றும் நெல்லின் விளைச்சலானது மருத நிலத்தின் செல்வச் செழிப்பைக் காட்டியதைக் கூறுகின்றன:

**“பூம்பொறி கரும்பில் காய்பயன்**
**கொள்ளாவிளை வயல் உழவர்**
**செஞ்சோற்றான் உண்டும் வெங்களிச்**
**செவ்வி காணும் நாடே” (புறநானூறு, பா. 397)**

மருத நிலத்தின் முக்கியப் பயிர்களான **நெல்** மற்றும் **கரும்பு** ஆகியவற்றின் மிகைப்பட்ட விளைச்சலே சங்கத் தமிழரின் வளமான வாழ்வுக்கு ஆதாரமாக இருந்தது என்பர்.

**நெய்தல் நில மக்கள்**

கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலம். மணல்மேடுகள் நிறைந்ததும் மணல் கலந்து மண்வாகுடைய நிலப்பகுதியாகவும் காணப்படுகின்றது. மழை பெய்கின்ற காலங்களில் நெல் விளைவித்தலையும் மழை பெய்யா காலங்களில் உப்பு விளைவித்தலையும் நெய்தல் நில மக்கள் தொழிலாக கொண்டிருந்தனர். நெய்தல் நிலப் பகுதிகளில் இளம் மணல் காணப்படும். அலை மோதுகின்ற கடற்கரை பகுதி அடைகரை


ISBN: 978-81-997928-9-0





என்பதனை நற்றினை வழி அறியலாம். உப்பினை விளைவிக்கும் உப்பு நீர் **"கழி"** என்று அழைக்கப்படும் என்பதை **"இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு"** என்னும் **மதுரைக்காஞ்சி** அடியிலிருந்து அறியலாம்.

நெய்தல் நிலத்தில் தாழம்பூ, நெய்தல் பூ, புன்னை, கண்டல், ஞாழல் போன்ற தாவரங்கள் மிகுந்து காணப்பட்டன. இது பிரிவால் இரங்கல் என்னும் துயரைக் குறித்தது. இறுதியாக, கடற்கரையில் உள்ள தாவரங்கள் (தாழை, புன்னை) பூத்து மணம் பரப்புவதையும், அங்குள்ள மக்கள் அவற்றைக் கண்டும் வருந்துவதையும் காட்டுகிறது.

**"வாள் நிற நெய்தல் ஆம்பல் மலர**
**பசும் பூ தாழையின் தண்மலர் சூடி**
**நுண்மணல் புன்னை நறுந்தாது உதிர்ப்ப**
**புள் அரும் கழன்று அளை அலவன் ஓட"**

**(நற்றிணை, பா. 314)**

இந்த வரிகளில் **கண்டல்** (மாங்குரோவ் தாவரங்கள்) மற்றும் **ஞாழல்** (புலிநகக் கொன்றை) ஆகியவை நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், நெய்தல் நிலத்தைக் குறிக்கும் பாடல்

**"கண்டல் வேலித் தண்கழிச் சேர்ப்பன்**
**ஞாழல் பூத்து நாற்றின் அடும்பு"**

**(ஐங்குறுநூறு, பா. 116)**

நெய்தல் நிலத்தின் தாவரங்கள் செழித்து வளர்ந்து, பூக்கள் மூலம் நறுமணத்தைப் பரப்பும் அழகிய சூழலைக் காட்டுகின்றன. இந்தத் தாவரங்களின் செழிப்பு அந்த நில மக்களின் மீன் பிடித்தல் மற்றும் உப்பு விளைவித்தல் போன்ற வாழ்வாதாரத்திற்குத் துணையாக இருந்தது என்பதை நாம் அறியலாம்.

 ISBN: 978-81-997928-9-0

## பாலை நில மக்கள்

**பாலை** (வறண்ட நிலம்), வறட்சியைக் குறிக்கும் தன்மையில் இலைகள் உதிர்ந்த எயிறு, ஓமை போன்ற தாவரங்களைக் கொண்டிருந்தது. இவ்வாறு, சங்கத் தமிழரின் அக வாழ்வு, அவர்கள் வாழும் நிலத்துத் தாவரங்களின் இயல்புகளை ஒட்டியே அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**"நிரை இதழ் அவிழ்ந்த நீர் இலாத் தளவின்**
**நுண்கோல் எயிற்று முள் இலை உதிர**
**பெருவளி சுழற்றும் வளை அமல் கானம்"**

**(அகநானூறு, பா. 149)**

தலைவன் பிரிந்து சென்ற பாலை வழியின் கொடுமையைத் தலைவி நினைத்துப் பார்க்கும் பாடல் இது. **ஓமை** மரங்கள் வறட்சியில் இலைகள் உதிர்ந்து, அதன் **வெள்ளை நிறக் கிளைகள்** மட்டும் தெரியும். இது பார்ப்பதற்கு எலும்புக் கூட்டைப் போலத் தோற்றமளித்து, பாலை நிலத்தின் கொடுமையைக் குறிக்கிறது. **இலவம் (எயிறு)** இதன் கிளைகளில் **பெரிய முட்கள்** இருக்கும். இது இலைகள் இல்லாமல் வெறும் முட்களுடன் காட்சி அளித்து, வழிப்போக்கர்களுக்கு அச்சமூட்டுவதாக இருக்கும். **பாலை** பாலை நிலத்தின் பெயரிலேயே உள்ள இந்த மரம், கடும் வறட்சியைத் தாங்கக்கூடியது. இவ்வாறாக மேற்சொன்னவாறு நானிலங்களாகப் பகுக்கப்பட்டு நிலங்களின் தன்மையை கூர்ந்து ஆராய்ந்து நடைமுறைச் செயல்பாட்டிற்குத் தகுந்தவாறு திருத்தி அமைத்து பயன்படுத்தி இருப்பது பண்டைய உழவர்களின் மண் அறிவியலுக்குச் சான்றாகும். மக்களுடைய வாழ்க்கைக்கும் அன்றாட இயக்கத்திற்கும் பயிர் விளைச்சலுக்கும் உரியவை இலக்கியங்கள் கூறும்


ISBN: 978-81-997928-9-0

வாழிட தாவரங்கள் ஆகும். தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பதை இன்றைய விஞ்ஞானம் அறிந்து கொள்வதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம், "ஒன்றறி வதுவே உற்றறி வதுவே" என்று இயம்புகிறது.

புல்லும் மரனும் ஓர் அறிவினவே பிறவும் உலிவே அக்கிளைப் பிறப்பே'' என்ற தொல்காப்பியத்தின் வரிகள், உடம்பால் மட்டும் அறிவன ஓர் அறிவு உயிர்கள். அவை புல், மரம், செடி, கொடி, தாவர இனங்கள் அனைத்தும் ஆகும் என்று விளக்குகிறது. தமிழிலக்கியத்தில் இருக்கக்கூடிய தாவர அறிவியல் உண்மைகள், தாவர மேலாண்மை, சுற்றுச்சூழல் அல்லது இயற்கை மீதான முழுமையான அன்பு ஆகியவை பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து அதன் முழுமைத்தன்மையைச் சிதைத்துவிடாமல் மிக நுணுக்கமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாகும்.

**திணைக்கோட்பாடு**

தமிழரின் வாழ்வியல் இலக்கணமான திணைக்கோட்பாடு, நிலத்தையும் வாழ்வையும் பிரிக்க முடியாத ஓர் உறவாகப் பார்க்கிறது. இயற்கையின் அமைப்பிற்கேற்ப மக்களின் வாழ்க்கை முறையும், உணர்வுகளும் வேறுபடும் என்பதைத் திணைக் கோட்பாடு விளக்குகிறது.

| திணை (நிலப் பிரிவு) | இயற்கை அம்சம் | வாழ்வின் அம்சம் | இயற்கையும் தமிழும் பிணைப்பு |
|---|---|---|---|
| **குறிஞ்சி (மலை)** | குறிஞ்சிப் பூ, வேங்கை, அருவி | புணர்ச்சி (காதலர் கூடல்) | மலையும் காதலும், வீரமும் ஒன்றாய்க் கருதப்பட்டன. |

 **ISBN: 978-81-997928-9-0**

| | | | |
|---|---|---|---|
| **முல்லை (காடு)** | முல்லைப் பூ, கொன்றை, மான் | இருத்தல் (பிரிவு பொறுத்தல்) | காடும் கற்பும், அமைதியும் இணைந்தன. |
| **மருதம் (வயல்)** | தாமரை, மருத மரம், நெல் | ஊடல் (சண்டை இடுதல்) | வேளாண்மையும், செழிப்பும், வாழ்வியல் முரண்பாடுகளும். |
| **நெய்தல் (கடல்)** | தாழம்பூ, புன்னை, மீன் | இரங்கல் (பிரிவால் வருந்துதல்) | கடலும், துன்பமும், மீன் பிடித் தொழிலும். |
| **பாலை (வறட்சி)** | எயிறு, ஓமை, வெப்பம் | பிரிதல் (பிரிந்து செல்லுதல்) | வறட்சியும், பயணமும், துயரமும். |

**தமிழர் வாழ்வியலில் தாவரங்களின் பயன்பாடு**

நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைப் பற்றிய ஆழமான அறிவு தமிழரிடம் இருந்தது. சங்கத் தமிழரின் அன்றாட வாழ்வும் பொருளாதாரமும் தாவரங்களைச் சார்ந்தே இருந்தது. மருத்துவத் தேவைக்காகத் தாவரங்களைச் சேகரிப்பதில் அவர்கள் ஒரு உயர்ந்த **அறநெறியைப்** பின்பற்றினர். மருத நிலம் என்பது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிலமாகும். இங்குள்ள மக்களின் அன்றாட வாழ்வாதாரமே நெல் மற்றும் பிற தாவரங்களைச் சார்ந்திருந்தது என்பதை

**"உழவர் உழாது ஊக்கம் பெறூஉம்**
**நாட்டைக் காக்கும் நல்லோர் குலமே"**

**(ஐங்குறுநூறு, பா. 62)**

அன்றாட வாழ்வின் அச்சாணியாக இருந்த நெல்லைப் பற்றிய குறிப்புகள் மூலம் பொருளாதாரச் சார்பை அறியலாம்

**"நெல்அரிசி ஆம்பல் வெண்சோறு**


ISBN: 978-81-997928-9-0

**அன்னார் இன்றி அமையா உலகம்"**

**(புறநானூறு, பா. 18)**

சங்க இலக்கியப் பாடல்கள், நிலத்தின் தாவர வளமே அன்றாட வாழ்வையும், அதன் மூலம் உருவான பொருளாதாரத்தையும் நிர்ணயம் செய்தது என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. உணவுப் பொருட்களில், மருத நிலத்தில் விளைந்த **நெல்** (செந்நெல், வெண்ணெல்) முக்கிய உணவாகப் கருதுகின்றனர்.

**கரும்பு, வாழை** போன்றன இனிப்புக்காகவும் பயன்பட்டன. குறிஞ்சி நில மக்கள் **வள்ளிக்கிழங்கு** போன்ற கிழங்கு வகைகளையும், **நாவல், நெல்லி, மாதுளை** போன்ற காட்டுப் பழங்களையும் உண்டு வாழ்ந்தனர். மருத்துவத் துறையில், தமிழர்கள் தாவர அறிவில் சிறந்து விளங்கினர். **வேம்பு** நோய்களை நீக்கும் மருந்தாகவும், **நெல்லி**க் கனி நீண்ட ஆயுளுக்கும் பயன்படுத்தப்பட்டன. மரங்களைக் கொல்லாமல், அவற்றிலிருந்து மருந்து மட்டுமே எடுக்க வேண்டும் என்பதை **"மரஞ்சா மருந்து கொள்ளார்"** என வரும் புறநானூற்றுச் செய்தி அவர்களின் இயற்கைப் பாதுகாப்பு நெறியை வெளிப்படுத்துகிறது.

உடை மற்றும் அலங்காரத்தில், **பருத்திச் செடி**யிலிருந்து நூல் நூற்றல் மூலம் ஆடை நெய்தலும், வாசனைக்காக **அகில், சந்தனம்** போன்றவற்றைப் பயன்படுத்துவதும் வழக்கிலிருந்தது. மேலும், ஆண்கள் போரின் நிலைக்கு ஏற்பவும், பெண்கள் மணத்திற்காகவும் பூக்களைச் சூடினர். உதாரணமாக, போரில் ஈடுபடும் வீரர்கள் **வெட்சி, கரந்தை, தும்பை** போன்ற வீரத்தைக் குறிக்கும் பூக்களை அணிந்தனர். கட்டிடக் கலை மற்றும் தொழில் நுட்பத்தில், **தென்னை, பனை** ஓலைகள்

 **ISBN: 978-81-997928-9-0**

கூரைகளாகவும், **தேக்கு, வேங்கை** போன்ற உறுதிமிக்க மரங்கள் கட்டுமானப் பணிகளுக்கும், படகுகள் உருவாக்கவும் பெரிதும் பயன்பட்டன.

மருந்து எடுப்பதற்காக ஒரு மரத்தை முழுமையாக அழிக்க மாட்டார்கள் என்பதைக் குறிக்கிறது. அதாவது, இயற்கையைப் பேணிக்காத்தவாறே அதிலிருந்து பலன் பெற வேண்டும் என்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வு மருத்துவத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கத் தாவரங்களின் **பிசின், இலைச் சாறுகள்** மற்றும் **கட்டிகள்** பயன்படுத்தப்பட்டமை குறித்த குறிப்புகளும் உள்ளன. இவ்வாறாக, தாவரங்களே தமிழரின் உடல்நலம், நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் மருத்துவப் பொருளாதாரத்தின் மூலாதாரமாக விளங்கின.

உடல்நலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி நேரடியாகப் பேசும் அதிகாரம் 'மருந்து' ஆகும். அந்த அதிகாரத்தில், நோய் இல்லாமல் இருப்பதே மிகப்பெரிய செல்வம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

**“உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.” (குறள் - 948)**

சங்கத் தமிழரின் மருத்துவ அறிவு தாவரங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நோயைத் தீர்க்கும் மூலிகைகளை அறிந்திருந்தனர்.

**“விசும்பின் உச்சிச் சில்லுணாக் குன்றம்**
**மருந்துடைக் கழங்கிற் சுரன் இறங்குவோரே”**
**(மலைபடுகடாம், பா. 373)**

உடல்நலம் குன்றும் போது அதனைச் சரிசெய்யும் ஆற்றல் இயற்கையான மூலிகைகளுக்கு உண்டு என்பதை அறிந்திருந்தனர். போர்வீரர்களின் மன வலிமையும் உடல் வலிமையின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. "**யாமெலிந்**

 ISBN: 978-81-997928-9-0

**தல்லேம்; உவகை மிகினே" (புறநானூறு, பா. 195)** ஆகியவையே தமிழர்களின் உடல்நலத்தையும், நோய் எதிர்ப்பாற்றலையும் உறுதிப்படுத்திய காரணிகள் என்பதை இந்த வரிகள் மூலம் அறியலாம்.

**இலக்கியங்களில் மூலிகை பயிர்கள்**

மூலிகை என்பதற்கு **"மரவூட்டுத்தண்டு இல்லாத செடி"** என அறிவியல் அகராதியும், **"மருந்துப் பூடு," "மருந்து செடி," "மருந்து வேர்,"** என தமிழ் அகராதிகளும் **"மருந்து செடி," "சிறு செடி வகை," "புதர்ச் செடி," "தூறு," "மரங்களின் வேர்,"** என ஆங்கில அகராதிகள் கூறும் மருத்துவத்திற்குப் பயன்படும் இயற்கை படைப்புகள் அனைத்தும் மூலிகைகளே என்பது மூலிகை ஆய்வாளர்கள் கண்ட முடிவாகும். **"மருந்தே உணவு உணவே மருந்து"** என்பது நம் முன்னோர்களின் மூத்த மொழியாகும். உணவுக்காகவும் இன்ன பிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தும் செடிகள், கொடிகள், கீரைகள், மரங்கள், காய்கள், கனிகள், விதைகள், வேர்கள், பட்டைகள் ஆகிய அனைத்தும் மூலிகைகளே என்பது இயற்கை மருத்துவர்களின் உன்னத கருத்தாகும்.

பதார்த்த குண சிந்தாமணி நூலில் பல் ஆரோக்கியம் குறித்தும், பல் தொடர்பான நோய்கள் தீர்க்கவும், முக அழகிற்கு ஆதாரமான பல் வசீகரத் தன்மை பெற நாயுருவி போன்ற மூலிகைகளை ஆராய்ந்து அதன் மருத்துவ குணம் அறிந்து பயன்படுத்தி வந்தமை குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. திருவள்ளுவ மாலையில் தாமோதரனார் தலைவலியைப் போக்கும் மருந்து ஒன்றைத் தருகின்றார். சீந்தில் மூலிகை கொடியின் சர்க்கரை, சுக்குப்பொடி, தேன் ஆகியவற்றின் கலவையை முகர்ந்து பார்த்த பின் தலைவலி

 ISBN: 978-81-997928-9-0





குணமாகிறது. ஐங்குறுநூறு எனும் இலக்கியமானது, கருவுற்ற பெண்களுக்கு நேரிடும் மசக்கை நோயினைப் பற்றி பேசுகின்றது. கருவுற்ற பெண்கள் புளிப்புச் சுவையை விரும்பி நெல்லி புளியங்காய் போன்றவற்றை உண்கின்றனர்.

வயிற்றுக் கடுப்பால் அவதியுறுவோர் இலந்தை அடை செய்து சாப்பிட நோய் அகலும் பேச்சு வராமல் இருக்கும் குழந்தைகளுக்கும் சரளமாக பேச இயலாத திக்கி பேசுபவருக்கும் கொட்டை கரந்தையின் இலைகளை சூரணமாக்கி கொடுக்க பேச்சுவண்மை பெற இயலும். உடலின் சூட்டை தணித்து வயோதிகத் தன்மை அடையா வண்ணம் இருந்திட ஓரிலைத் தாமரை உதவுகின்றது. இதனை காயகல்ப மூலிகை என கூறலாம். இவை போன்ற மூலிகை பயிர்கள் குறித்த பல செய்திகள் இலக்கியத்தில் காணப்படுகின்றன.

**உணவுப் பொருளாதாரத்தில் தாவரங்களின் பங்கு**

சங்க காலத்தில் தமிழரின் உணவுப் பொருளாதாரத்தில் **தாவரங்களின் பங்கு** மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தமிழரின் வாழ்வியல் திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருந்தாலும், உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ததில் **மருத நிலமே** முதன்மையான இடத்தைப் பெற்றது. மருத நிலத்தின் முக்கியப் பயிராக **நெல்** விளங்கியது. இதில் **செந்நெல், வெண்ணெல்** போன்ற பல வகைகள் பயிரிடப்பட்டன. இந்த நெல்லே பெரும்பான்மையான மக்களின் பிரதான உணவாகிய சோற்றுக்கு அடிப்படையாக இருந்தது. இதன் விளைச்சலைப் பெருக்க, ஆறுகள், ஏரிகள், குளங்கள் மூலம் நீர் மேலாண்மை சிறப்பாகச் செய்யப்பட்டது.


**ISBN: 978-81-997928-9-0**

நெல்லைத் தவிர, **கரும்பு** வணிகப் பயிராகவும் இனிப்புப் பொருளாகவும் பயிரிடப்பட்டது. **வாழை, பலா, மா** போன்ற முக்கனிகள் விளைவிக்கப்பட்டு, அன்றாட உணவில் இடம்பெற்றன. மலைப் பகுதிகளில் (குறிஞ்சி) வாழ்ந்த மக்கள், காட்டு வளங்களை நம்பி **வள்ளிக்கிழங்கு** போன்ற கிழங்கு வகைகளையும், **நாவல், நெல்லி, ஈச்சை** போன்ற காட்டுப் பழங்களையும் சேகரித்து உண்டனர். இந்தத் தாவர வளங்களே அவர்களின் அடிப்படை உணவுத் தேவையையும், பழங்குடிப் பொருளாதாரத்தையும் தீர்மானித்தன. மேலும், **நறுமணப் பொருள்கள்** உணவுப் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகித்தன. **மிளகு, இஞ்சி, மஞ்சள்** போன்றன பயிரிடப்பட்டு, உணவைச் சுவையாக்கப் பயன்பட்டதோடு, கடல் கடந்த **வணிகத்தில்** (எகிப்து, உரோம்) மிக உயர்ந்த மதிப்பில் விற்கப்பட்டன. உணவு உற்பத்தியின் செழிப்பைப் பற்றிய குறிப்புகள், மன்னர்களின் வளமான ஆட்சியைப் புகழும் புறநானூற்றுப் பாடல்களிலும் காணப்படுகின்றன. அவை,

**"திங்கட் செல்வன் கதிர்கான்று ஆய்மழை**
**தவிழ்ந்து நிலம் நனைஇ அயிருடன் கெடுத்து**
**மாஅந் தளிரின் வா…" (புறநானூறு, பா. 18)**

மன்னனின் நல்லாட்சியின் விளைவாக, நாடு தட்பவெப்ப நிலை சீராகவும், விளைச்சல் வளம் மிக்கதாகவும், மக்கள் அச்சமின்றி வாழும் நிலையிலும் இருந்தது என்று புகழ்கிறது. காவிரி ஆற்றின் வளத்தையும், அதன் மூலம் சோழ நாடு செழித்திருந்ததையும் போற்றும் இந்தப் பாடல், மன்னனின் ஆட்சியில் நாடு பெற்றிருந்த செழிப்பைக் காட்டுகிறது.

**"அலந்தலை உழவர் ஆற்றக் கூவிக்**

 **ISBN: 978-81-997928-9-0**

**காவிரிப் புதுநீர் அணைக்குங்**
**பூவிரி புறவிற் பொலஞ் செய் நாட்டு"**

**(புறநானூறு, பா. 378)**

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், உழவர்கள் மகிழ்ச்சியோடு அழைத்து, காவிரி ஆற்றின் புதுநீரை ஏரிகளுக்குத் திருப்பிவிடும் வளமிக்க பூக்கள் நிறைந்த வயல்களையுடைய **பொன்போன்ற வளமான நாடு** சோழ நாடு என்றும், மன்னனின் செங்கோலாட்சியின் கீழ் நாடு அடைந்திருந்த செல்வச் செழிப்பையும் காட்டுகிறது. இந்த வரிகள் மன்னர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்து, மக்களை வாழ வைத்ததால், நாடும் வளமும் பெற்றிருந்ததை உணர்த்துகின்றன.

மேலும், தலைவன் தலைவிக்கு அளிக்கும் பரிசில் பொருட்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறாக, சங்கத் தமிழரின் உணவு, உள்நாட்டுப் பயன்பாடு, மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் என அனைத்திலும் தாவரங்கள் மையப் பொருளாக இருந்தன.

- தமிழர்களின் பாரம்பரிய உணவில் அரிசி, பருப்பு, காய்கறிகள் மற்றும் கீரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றில் பல தாவரங்கள் மருந்துக் குணங்கள் கொண்டவை.
- மஞ்சள், இஞ்சி, மிளகு, பூண்டு போன்றன சமையலில் பயன்படுத்தப்படுவதுடன், அவை கிருமிநாசினியாகவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பனவாகவும் உள்ளன.
- வேம்பு, துளசி, கீழாநெல்லி, ஆவாரம்பூ போன்ற பல மூலிகைகள் சித்த மருத்துவத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. இன்றும்

 ISBN: 978-81-997928-9-0

கிராமப்புறங்களில் பல நோய்களுக்கு வீட்டு வைத்தியமாக இத்தாவரங்களின் பயன்பாடு உள்ளது.

## இயற்கையின் அறமும் வாழ்வியலும்

சங்கத் தமிழரைப் பொறுத்தவரை, இயற்கை என்பது வெறும் வாழ்விடமாகவோ, வளம் தரும் பொருளாகவோ கருதப்படவில்லை; அதுவே அவர்களின் அறம் மற்றும் வாழ்வியல் நெறிமுறைகளின் அடிப்படையாக விளங்கியது. இயற்கையைப் பேணுதல் என்பது தனி மனித ஒழுக்கமாகவும், சமூகத்தின் கடமையாகவும் போற்றப்பட்டது. மருந்துப் பொருளுக்காகக்கூட ஒரு மரத்தைக் கொன்றுவிட மாட்டார்கள். மரத்தை முழுவதுமாக அழிக்காமல், அதிலிருந்து தேவையான பகுதிகளை மட்டும் எடுத்துப் பயன்படுத்தும் இந்த நெறி, தமிழர்கள் இயற்கையோடு கொண்டிருந்த தக்கவைத்துக்கொள்ளும் மற்றும் உயிர்ப்புள்ள உறவை வெளிப்படுத்துகிறது. மேலும், நீர் மேலாண்மையிலும் தமிழரின் அறம் வெளிப்பட்டது. குளம், ஏரி, அணைக்கட்டு போன்ற நீர்நிலைகள் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டன. நீரின்றி அமையாது உலகு என்ற உண்மையை உணர்ந்தனர். நேரடியாக நீரைச் சேமிக்க வேண்டும் என்று கூறாமல், ஒரு நாட்டின் செழிப்புக்கு நீர்நிலைகளை அமைப்பது அரசனின் முக்கியக் கடமை என்று வள்ளுவர் கூறுகிறார்.

**“ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை”. (குறள் - 381)**

ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளை உருவாக்கி, நாட்டை வளம் பெறச் செய்வது அரசனின் கடமைகளுள் முதன்மையானது.

 **ISBN: 978-81-997928-9-0**

நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்து இருப்பதையும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதையும் தங்களின் கடமையாகக் கருதினர். குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழும் தலைவன், தலைவி இருவரும் காட்டில் உள்ள விலங்குகள், பறவைகள் மீது கொண்ட அன்பும், அவற்றுக்குத் தீங்கு செய்யாத பண்பும் அகப்பாடல்களில் பேசப்படுகின்றன. அவை,

**“பெயல்புறந்தந்த பூங்கொடி முல்லை அரும்பு**
**அவிழ் அலரி தூஉம் நறுமணம்”**

**(அகநானூறு, பா. 4)**

**“நறுவீ துதையு நாடன், வந்தெனத் துயரம்**
**நீங்கித் துளிமழை தலைஇக் கார்வந்**
**தன்றெனக் களிமயில் ஆலும் பருவம்**
**வந்தெனப் பையென…” (அகநானூறு, பா. 4)**

முல்லை நிலத்தின் அடையாளச் சின்னமாகக் கருதப்படும் **மான்** (புள்ளி மான்) மீதான காதலைக் காட்டும் ஒரு குறிப்பு.முல்லை நிலத்தில் இயற்கையுடன் இணைந்து வாழும் தலைவன் தலைவியின் மனநிலையையும், அங்குள்ள விலங்குகள், பறவைகள் ஆகியவை அவர்களின் காதல் உணர்வுக்கு எவ்வாறு சாட்சியாக அமைகின்றன என்பதையும் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்தப் பல்லுயிர் மீது கொண்ட அன்பு, மனிதன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையின் ஒரு பகுதி மட்டுமே என்ற ஆழமான சமநிலை உணர்வை தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே, சங்கத் தமிழரின் வாழ்வும், அறமும், இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் போற்றுதல் என்னும் அச்சாணியைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டிருந்தது எனலாம்.


ISBN: 978-81-997928-9-0

- பழந்தமிழர்கள் நிலத்தை ஐந்தாகப் பிரித்து (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தனித்துவமான தாவர வகையைக் குறிப்பிட்டனர். இது அவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்ததற்கு சான்றாகும்.
- வேளாண்மை தமிழர்களின் பிரதான தொழில்களில் ஒன்றாகும். நெற்பயிர், தென்னை, பனை, வாழை போன்ற பயிர்கள் அவர்களின் பொருளாதார வாழ்வின் ஆதாரமாக உள்ளன. பனை மரம், அதன் அனைத்து பாகங்களும் பயன்படுவதால், 'கற்பக விருட்சம்' என்று அழைக்கப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடு, மற்றும் வாழ்வியல் முறைகள் அனைத்தும் தாவரங்களை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. இன்றும், நவீன காலத்திலும், இயற்கையான வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

**தமிழர் பண்பாட்டிலும் கலைகளிலும் தாவரங்கள்**

சங்கப் பாடல்களில் தாவரங்கள் வெறும் இயற்கைக் காட்சிகளாக இல்லாமல், உணர்வுகளையும், பண்பாட்டுச் செய்திகளையும் வெளிப்படுத்தும் குறியீடுகளாகப் பயன்பட்டன. அக இலக்கியத்தில், குறிஞ்சிப் பூ மலரும் காலமே காதலர்கள் கூடும் காலம் என்ற நம்பிக்கை, தாவரத்தின் உணர்வினைக் காட்டுகிறது. அதேபோல, முல்லைப் பூ மலரும் மாலை வேளையைக் குறித்துப் பேசும்போது, அது பிரிந்த தலைவனுக்காகத் தலைவி பொறுமையுடன் காத்திருக்கும் 'கற்பு' என்ற அறத்தைக் குறித்தது. புறத்திணையில்,


**ISBN: 978-81-997928-9-0**

போர்க்களத்தில் வீரர்கள் சூடிய பூக்கள், அவர்கள் எந்த வகை போரில் ஈடுபட்டுள்ளனர் என்பதைத் தெளிவாகக் காட்டின. உதாரணமாக, தும்பைப் பூவை வீரர்கள் அணிவது, அவர்கள் வெற்றி, தோல்வி பற்றிக் கவலைப்படாமல் சமன் செய்து போராடும் போரின் உச்சகட்டத்தைக் குறித்தது. இந்தத் தாவரக் குறியீடுகள் மூலம் புலவர்கள், சுருக்கமான பாடல்களுக்குள் விரிவான வாழ்வியல் தத்துவங்களைப் பொதித்து வைத்தனர்.

கலைகள் மற்றும் வழிபாட்டில், ஆல மரம் மற்றும் அரச மரம் போன்றன புனிதத் தன்மையுடன் போற்றப்பட்டன. நாட்டார் தெய்வ வழிபாடுகளிலும், மரத்தடியில் அமர்ந்து நீதி கூறுவதிலும் இந்த மரங்கள் முக்கிய இடத்தைப் பிடித்தன. இத்தகைய பயன்பாடுகள், தமிழர் வாழ்வில் தாவரங்கள் வெறும் பொருளாக அல்லாமல், அவர்களின் நம்பிக்கை, வீரம் மற்றும் அறத்தின் அடையாளங்களாக விளங்கியதைக் காட்டுகின்றன. சங்கத் தமிழரின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் கூறுகளிலும், நிலத்தை அடையாளம் காண்பதிலும், பொருளாதார மேம்பாட்டிலும் தாவரங்களின் பயன்பாடு ஆழமாக வேரூன்றி இருந்தது.

தமிழர் ஆன்மீகமும், சடங்குகளும் தாவரங்களுடன் தொடர்புடையவை.

- தமிழர் வழிபாட்டில் தாவரங்களுக்கு முக்கிய இடம் உண்டு. தல விருட்சங்கள், தமிழகக் கோவில்களில் ஒவ்வொரு தலத்திற்கும் ஒரு மரம் புனித மரமாகப் (தல விருட்சம்) போற்றப்படுகிறது. இது தாவரங்களைப் பாதுகாக்கும் ஒரு சிறந்த சுற்றுச்சூழல்

 **ISBN: 978-81-997928-9-0**

சிந்தனையையும், ஆன்மீக நம்பிக்கையையும் இணைக்கிறது.

- சடங்குகள், திருமணச் சடங்குகளில் வாழை மரம் கட்டுதல், திருவிழாக்களில் மாவிலை தோரணம் கட்டுதல், பொங்கல் பண்டிகையில் கரும்பை வைத்து வழிபடுதல் போன்றவை தாவரங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தேங்காய், வெற்றிலை, பாக்கு, பூக்கள் போன்றவை அனைத்து சுப நிகழ்வுகளிலும், வழிபாடுகளிலும் அத்தியாவசியப் பொருட்களாக உள்ளன. பண்டிகைக் காலங்களில் வாழை இலை, மா இலை தோரணங்கள், பூக்களால் கோலம் இடுதல் போன்ற பழக்கவழக்கங்கள் தமிழர் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.

பண்பாட்டு அடையாளம் மற்றும் உடை மலர்கள் மற்றும் தழைகள் தாவரங்கள் வெறும் வாழ்வாதாரத்திற்கு மட்டுமல்லாமல், கலை, அழகு மற்றும் அடையாளத்தைக் குறிக்கவும் பயன்பட்டன.

சங்க இலக்கியத்தில் காணப்படும் தாவரக் குறிப்புகள், அன்றையத் தமிழரின் நுட்பமான தாவரவியல் அறிவையும், இயற்கையோடு இயைந்திருந்த அவர்களின் வாழ்வியல் நெறியையும் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு தாவரத்தின் தனி இயல்பு மற்றும் அதன் பயன்களைத் தமிழ் இலக்கியங்கள் வகுத்துக் கூறுகின்றன. தாவரங்களின் அறிவியல் இயல்புகள் குறித்தும், அவற்றைப் பேணிக் காப்பதன் அவசியம் குறித்தும் தமிழர்கள் தெளிவாக அறிந்திருந்தனர். தாமரை மலரின் உள்ளே இருக்கும் வெப்பம் பற்றிய நுட்பமான

 **ISBN: 978-81-997928-9-0**

குறிப்புகள், அவர்களின் அறிவியல் பார்வையை உறுதிப்படுத்துகின்றன. மொத்தத்தில், சங்க இலக்கியம் என்பது வெறும் கவிதைகளின் தொகுப்பாக மட்டும் இல்லாமல், தமிழர் வாழ்வியலின் அனைத்து அம்சங்களிலும் தாவரங்கள் எவ்வாறு ஒருங்கிணைந்து இருந்தன என்பதைக் காட்டும் ஒரு தாவரவியல் களஞ்சியம் ஆகும். இந்தக் களஞ்சியம், தாவரங்களை வெறும் வளங்களாகப் பார்க்காமல், அவற்றை வாழ்வின் அங்கம், பண்பாட்டின் குறியீடு, மருத்துவத்தின் ஊற்று, இறைமையின் வெளிப்பாடு எனப் பல பரிமாணங்களில் மதித்துப் போற்றிய ஒரு உயர்ந்த மரபை உலகுக்கு உணர்த்துகிறது. இன்றைய சூழலில், இந்தச் சங்கத் தமிழரின் தாவரப் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டு மரபினை மீட்டெடுப்பது, இயற்கையோடு இசைந்த நிலையான வாழ்வுக்கு வழிகாட்டுவதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்தப் பகுதியில் தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றி விட்ட தாவரங்களைப் பற்றிய விரிவான தகவல்களை அறிந்தோம்.

**தொகுப்புரை**

சங்க இலக்கியம் (கி.மு. 300 - கி.பி. 300) என்பது வெறும் அக, புற வாழ்வியல் தொகுப்பு மட்டுமல்ல; அது தமிழர் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் தாவரங்கள் எவ்வாறு மையப் புள்ளியாக விளங்கின என்பதைக் காட்டும் ஒரு விரிவான தாவரவியல் களஞ்சியமாகத் திகழ்கிறது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது. ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட தாவரக் குறிப்புகள் மூலம், அக்காலத் தமிழர்கள் இயற்கையுடன் கொண்டிருந்த அசைக்க முடியாத பிணைப்பு வெளிப்படுகிறது.


**ISBN: 978-81-997928-9-0**

- **அறிவியல் புலமை:** தாமரை மலரின் வெப்பவியல் நுட்பம் ("பனி துறைப் பயந்த தாமரை") மற்றும் ஆலமரத்தின் விழுதுகளின் துணை வேர்ச் செயல்பாடு ஆகியவை தமிழரின் தாவர அறிவியல் அறிவு வெறுமனே அனுபவ அறிவுக்கு அப்பாற்பட்டதாக, நுட்பமானதாக இருந்ததை உறுதிப்படுத்துகிறது.
- **பொருளாதார அடிப்படை:** திணைக் கோட்பாட்டின்படி, மருத நிலத்தின் **நெல்** மற்றும் குறிஞ்சி நிலத்தின் **தினை, தேன், கிழங்கு** ஆகியவை உணவுப் பாதுகாப்பையும், உள்நாட்டுப் பண்டமாற்றையும் உறுதி செய்தன. இவை தமிழர் பொருளாதாரத்தின் அச்சாணியாகத் திகழ்ந்தன.
- **பண்பாட்டு அடையாளம்:** முல்லைப் பூ **கற்புக்கும் பொறுமைக்கும்** (இருத்தல்), குறிஞ்சிப் பூ **காதலுக்கும்** (புணர்ச்சி), பூக்கள் போரின் **வெவ்வேறு நிலைகளுக்கும்** (வெட்சி, கரந்தை, தும்பை) குறியீடுகளாகப் பயன்பட்டன. தழையாடையும் மலர் சூடலும் அன்றாட வாழ்க்கையின் உடை மற்றும் அலங்காரமாக இருந்தன.
- **சூழலியல் அறம்: "மரஞ்சா மருந்தும் கொள்ளார்"** என்ற நெறி, தமிழர் மருத்துவத்திலும், வாழ்வியலிலும் இயற்கையைப் பேணுதல், அதாவது, ஒரு மரத்தைக் கொல்லாமல் அதிலிருந்து மட்டும் பலன் பெறும் **சூழலியல் பாதுகாப்பு உணர்வு** ஆழமாக வேரூன்றி இருந்ததை உணர்த்துகிறது. மேலும், நீர்நிலைகளைப்


**ISBN: 978-81-997928-9-0**

பராமரிப்பது **(குறள் 381)** அரசனின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது.

இன்றைய சூழலில், நிலையான வாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு தேவைப்படும் நிலையில், சங்கத் தமிழரின் தாவர அறிவியல் புலமை, வேளாண்மைத் தொழில்நுட்பம் மற்றும் இயற்கைப் பாதுகாப்பு நெறி ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்வது, மானுட வாழ்வுக்கு வழிகாட்டும் உன்னதமான மரபாக அமையும்.

## குறிப்புகள்

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் தெளிவுரை.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

[2] ஔவை துரைசாமி நாட்டார். *புறநானூறு.* கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

[3] ஔவை துரைசாமி நாட்டார். *அகநானூறு.* கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

[4] *சிறுபாணாற்றுப்படை.* சாரதா பதிப்பகம், சென்னை, 2021.

[5] *பெரும்பாணாற்றுப்படை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2021.

[6] ஔவை சு. துரைசாமி. *ஐங்குறுநூறு.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

[7] ஔவை சு. துரைசாமி. *நற்றிணை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

[8] ஔவை சு. துரைசாமி. *குறுந்தொகை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

[9] ஔவை சு. துரைசாமி. *மலைபடுகடாம்.* கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

 **ISBN: 978-81-997928-9-0**

[10] புலியூர்கேசிகன். *திருக்குறள்* (உரை). பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்[https://creativecommons.org/licenses/by/4.0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN: 978-81-997928-9-0**

# The Tamil Tradition of Protecting Flora

**Dr. D. Vijayarani,** Assistant Professor, Department of Tamil, Holy Cross College, Tiruchirappalli Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-2715-7019**

## Abstract

*Scholars estimate that the plant kingdom emerged on Earth approximately 400 to 450 million years ago. Plants manifest on this planet as the physical embodiment of vibrant, primordial cells—entities that incorporate and interact with water, soil, air, and heat. From single-celled organisms to the human race—the final species to emerge through the process of evolution—it is through plants that all living beings are able to sustain a physical form, deriving the water, air, heat, and energy necessary for their growth from the external environment. It is an undeniable truth that, were it not for plants, no other living organisms would exist on this Earth.There is no doubt that plants play a pivotal role—whether directly or indirectly—in fulfilling our daily necessities, such as food, shelter, and medicine. In short, even in this era of advanced scientific progress, every single product created by humans is ultimately derived from nature. Scientists maintain that regions characterized by dense plant cover receive higher levels of rainfall and possess superior water-retention capabilities. We are witnessing a transformation from a time when trees were confined to the wilderness, we are now moving toward an era where trees are being welcomed into our homes. Indeed, a global movement*

 **ISBN: 978-81-997928-9-0**

*has emerged today, raising its voice in advocacy for the conservation of natural resources.*

**Keywords:** Frankincense, Agarwood, Sandalwood, Kanthal, Coconut, Jackfruit, Bamboo.

**References**

[1] Ilampuranar. *Tolkappiyam Thelivurai*. Manivasagar Pathippagam, Chennai, 1999.
[2] Avvai Duraisamy Nattar. *Purananooru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.
[3] Avvai Duraisamy Nattar. *Agananooru*. Kazhaga Veliyidu, Tirunelveli, 2007.
[4] Manickam, A. U. *Kurunthogai*. Varthamanan Pathippagam, Chennai, 1999.
[5] *Porunaratrupadai*. Gowra Pathippagam, Chennai, 2021.
[6] Avvai S. Duraisamy. *Ainkurunooru*. Gowra Pathippagam, Chennai, 2006.
[7] Avvai S. Duraisamy. *Natrinai*. Gowra Pathippagam, Chennai, 2006.
[8] Avvai S. Duraisamy. *Kurunthogai*. Gowra Pathippagam, Chennai, 2006.
[9] Puliyur Kesigan. *Thirukkural (Urai)*. Poompuhar Pathippagam, Chennai, 2009.
[10] *Pingala Nigandu*. Ulaga Tamil Araichi Niruvanam, 1917.
[11] Kathirmurugu, Dr. *Malaipadukadam*. Gowra Pathippagam, 2001.
[12] *Sirupanatrupadai*. Saradha Pathippagam, Chennai, 2021.

 ISBN: 978-81-997928-9-0

[13] *Perumpanatrupadai*. Gowra Pathippagam, Chennai, 2021.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN: 978-81-997928-9-0

# தாவரங்களைப் பாதுகாக்கும் தமிழர் பண்பாடு

**முனைவர் து. விஜயராணி,** உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை,
புனித சிலுவைத் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி,
தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-2715-7019**

## ஆய்வுச்சுருக்கம்

*சுமார் 400 முதல் 450 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் தாவர இராச்சியம் தோன்றியதாக அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். தாவரங்கள், நீர், மண், காற்று மற்றும் வெப்பத்தை உள்வாங்கி அவற்றுடன் ஊடாடும் உயிரணுக்களான, துடிப்பான, ஆதி உயிரணுக்களின் பௌதீக வடிவமாக இக்கோளில் வெளிப்படுகின்றன. ஒரு செல் உயிரினங்கள் முதல் பரிணாம வளர்ச்சியின் மூலம் தோன்றிய இறுதி இனமான மனித இனம் வரை, அனைத்து உயிரினங்களும் தாவரங்கள் மூலமாகவே ஒரு பௌதீக வடிவத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடிகிறது; அவை தங்கள் வளர்ச்சிக்குத் தேவையான நீர், காற்று, வெப்பம் மற்றும் ஆற்றலை வெளிப்புறச் சூழலிலிருந்து பெறுகின்றன. தாவரங்கள் இல்லாவிட்டால், இந்தப் பூமியில் வேறு எந்த உயிரினங்களும் இருந்திருக்காது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். உணவு, இருப்பிடம் மற்றும் மருந்து போன்ற நமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில், தாவரங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. சுருக்கமாகச் சொன்னால்,*

 **ISBN: 978-81-997928-9-0**

*மேம்பட்ட அறிவியல் முன்னேற்றத்தின் இந்தக் காலகட்டத்திலும்கூட, மனிதர்களால் உருவாக்கப்படும் ஒவ்வொரு பொருளும் இறுதியில் இயற்கையிலிருந்தே பெறப்படுகிறது. அடர்ந்த தாவரப் போர்வை கொண்ட பகுதிகள் அதிக அளவு மழைப்பொழிவைப் பெறுவதோடு, சிறந்த நீர் தேக்கும் திறனையும் கொண்டுள்ளன என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நாம் தற்போது ஒரு மாற்றத்தைக் காண்கிறோம்: மரங்கள் காடுகளுக்குள் மட்டுமே முடங்கிக் கிடந்த ஒரு காலத்திலிருந்து, இப்போது மரங்கள் நம் வீடுகளுக்குள் வரவேற்கப்படும் ஒரு சகாப்தத்தை நோக்கி நாம் நகர்கிறோம். உண்மையில், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காகக் குரல் எழுப்பும் ஒரு உலகளாவிய இயக்கம் இன்று உருவாகியுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** வேங்கை, அகில், சந்தனம், காந்தள், தென்னை, பலா, மூங்கில்.

**முன்னுரை**

சங்க இலக்கியம், பழந்தமிழர்களின் வாழ்வியல், பண்பாடு, சமூகஅமைப்பு, காதல், வீரம் மற்றும் இயற்கை மீதான ஆழ்ந்த பார்வை ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு அரிய கருவூலமாக திகழ்கின்றது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இத்தமிழ் இலக்கியம், மனித வாழ்வை இயற்கையோடு பிரித்துப் பார்க்க முடியாத ஒரு பிணைப்பில் வைத்துப் போற்றுகிறது. சங்க இலக்கியத்தில் தாவரங்களின் பங்கை ஆய்வு செய்வது, பழந்தமிழரின் இயற்கை நேசிப்பையும், அதனை பாதுகாத்து வைத்த பாங்கினையும் வாழ்வியலின் நுட்பமான

அடுக்குகளையும் புரிந்து கொள்ள உதவும் வகையில் இவ்வாய்வுஅமைகிறது.

இலக்கியப் பரப்பில், தாவரங்கள் அவர்களின் வாழ்வில் வெறும் பின்னணி அம்சங்களாக மட்டும் அமையாமல், இலக்கியங்களில் இடம் பெறும் கதைமாந்தர்களின் உணர்வுகள், நிலத்தின் பண்புகள், சமூகச் சடங்குகள், பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் தத்துவார்த்தக் குறியீடுகள் எனப் பலநிலைகளில் ஆணிவேராக தாவரங்கள் இருந்தது. மேலும் பண்டைய தமிழர் தாவரவியல் பற்றிய புலமை பெற்றிருந்தனர்.

**“ஒன்றறிவதுவே உற்றறிவதுவே**
**இரண்டறிவதுவே அவற்றோடு நாவே**
**மூன்றறிவதுவேஅவற்றோடு மூக்கே**
**நான்கறிவதுவே அவற்றோடு கண்ணே**
**ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே**
**ஆறறிவதுவே அவற்றோடு மனனே”**

**(தொல். மர., 1526)**

என்று உயிர்களை அதன் அறிவின் தன்மைக்கேற்ப வகைப்படுத்துகிறார்.

ஓரறிவு முதலான உயிர்களைக் குறித்த செய்திகள் தொல்காப்பியம் தொடங்கி சங்ககாலம், சங்கம் மருவிய இலக்கியங்கள் ஆகியவற்றில் காணக்கிடக்கின்றன. அவை நேரடியாகவும் மறைமுகமாகவும் அடைமொழியாகவும், உவமைகள் வாயிலாகவும் தாவரங்கள் தமிழர் தம் வாழ்வியல் தொடர்பையும் உயிரினங்கள் பற்றிய வாழ்வியல் பதிவுகளையும் சங்க இலக்கியம் விரிவாக விளக்கிக் காட்டியுள்ளது.

**“தோடே மடலே ஓலை என்றா**
**ஏடே இதழே பாளை என்றா**

 **ISBN: 978-81-997928-9-0**

**ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்**
**புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்"**
**(தொல்., மர., 1586)**

என்று குறிப்பிடுகிறார். புல்லினத்தின் இலை தோடு மடல் ஓலை ஏடு இதழ் என்னும் பெயர்களால் வழங்கப்படுகிறது. அவற்றின் பூவுறுப்பு பாளை எனப்படுகிறது. பழம் கொத்தாகத் தோன்றுவதால் அவை குலை என்று பெயரிட்டுக் கூறப்படுகிறது. நீண்ட இலையின் மைய நரம்புகள் ஈர்க்கு என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு புல்லின் பகுதிகளைக் குறிப்பிடும் முறையினை எடுத்து இயம்புகின்றது. மேலும்

**"இலையே முறியே தளிரே தோடே**
**சினையே குழையே பூவே அரும்பே**
**நனையே உள்ளுறுத்த அனையவை எல்லாம்**
**மரனோடு வரூஉம் கிளவி" (தொல். மர., 1587)**

என்ற நூற்பாவின் மூலம் மரத்தின் உறுப்புகள் எவ்வாறு அழைக்கப் படுகின்றது என்பதனை விளக்குகின்றது. புல்லினம் மரம் இவ்விரண்டிற்கும் உள்ள பொதுவான பகுதிகளையும்; சுட்டிக்காட்டுகின்றது. புல்லினம் மரஇனம் என்ற இரண்டிற்கும் பொதுவான உறுப்புகளைச் சுட்டிக்காட்டுவதற்கு

**"காயே பழமே தோலே செதிளே**
**விழோடு என்றாங்கு அவையும் அன்ன"**
**(தொல். மர., 1588)**

என்கிறார். தென்னையும் கமுகு என்னும் பாக்கும் புல்வகையைச் சார்ந்தது. இதன் காய் தேங்காய் கமுகங்காய் என்று அழைக்கப்படுகின்றது. வேம்பு, மருதம் இவ்விரண்டும் மரவகையைச் சார்ந்தது. இதன் காய் வேப்பங்காய், மருதங்காய் எனப்படுகிறது. பழத்திற்கும்

 **ISBN: 978-81-997928-9-0**

இதையே கூறுவர். பனை புல்வகையைச் சார்ந்தது. வம்பு மரவகையைச் சார்ந்தது. இவ்விரண்டிற்கும் பனந்தோல் வேப்பதந்தோல் பனஞ்செதில் வேப்பஞ்செதில் என்பன பொதுவாகஉள்ளன.

**இலக்கியத்தின் நிலப்பகுப்பும் தாவரங்களும்**

சங்க இலக்கியத்தின் தனித்துவமான அம்சம், நிலப்பகுப்பு அடிப்படையிலான அகத்திணைப் பிரிவுகளாகும். ஒவ்வொரு நிலப்பகுதியிலும், அங்குள்ள மக்களின் வாழ்வியல், உணர்வுநிலைகள், தெய்வங்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவை தனித்தன்மையுடன் குறிப்பிடப்பட்டுள்ளது, தாவரங்களுக்கும் மக்களின் வாழ்வுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

**“மாயோன் மேயகாடுரைஉலகமும்**
**சேயோன் மேயமைவரைஉலகமும்**
**வேந்தன் மேயதீம்புனல் உலகமும்**
**வருணன் மேயபெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”**
**(தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ-5)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் ஒவ்வொரு திணைக்கும் நிலப்பாகுபாடுகளை வகுத்து அதன்படி மக்கள் வாழ்ந்தனர் என்பதை விளக்கியுள்ளார்.

**முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்)**

காடும் காடுசார்ந்த இடமும், இல்லறவாழ்க்கையும் முதன்மை பெறும் நிலமாகவும் கற்பொழுக்கத்தின் பிரிதல், காத்திருத்தலின் நிலமாகவும் முல்லை வரையறுக்கப் பட்டுள்ளது. முல்லைப் பூ, கார்காலத்தில் பூத்து, தலைவன் திரும்பி வரும் அறிகுறியாகவும், தலைவியின்

 **ISBN: 978-81-997928-9-0**

பொறுமையின் அடையாளமாகவும் விளங்குகிறது. காயா, கொன்றை, பிடவம், தளவம், செங்காந்தள், பூசணி, அவரை போன்றவை செழிப்பான நிலத்தில் வளரும் தாவரங்கள். இவை முல்லை நிலத்தில் வளர்வன.

**குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்)**

மலையும் மலைச்சாரலும் காதலின் களவாகிய புணர்தல் நிலமாக குறிஞ்சி என தொல்காப்பியர் வரையறைச் செய்துள்ளார். இங்கு குறிஞ்சிப் பூ முதன்மையான தாவரமாகும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூ, அரிய காதலைக் குறிக்கப் பயன்பட்டது. வேங்கை, அகில், சந்தனம், காந்தள், தென்னை, பலா, மூங்கில் போன்ற தாவரங்கள் குறிஞ்சி நிலத்தில் வளரும் தாவரங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக, வேங்கைமரம் களவொழுக்கம் வெளிப்படும் இடமாகவும், திருமணம் நடைபெறும் இடமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. காந்தள் மலர் காதலர்களின் மென்மையையும், அழகையும் சுட்டுகின்றது. இவ்வாறு இயற்கையோடு இயைந்த வாழ்வை பண்டைய மனிதன் வாழ்ந்தான் என்பதை இவற்றின் வழி அறியமுடிகின்றது

**மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்)**

வயலும் வயல் சார்ந்த இடமும் ஊடலாகிய புணர்ச்சி நிலமாக மருதம் வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு தாமரை, குவளை, ஆம்பல், மருது, செங்கழுநீர், மலர்கள் குளங்களையும், நீர்நிலைகளின் செழிப்பையும், அழகுணர்வையும் காட்டுகின்றன. நெல், கரும்பு, வாழை போன்றவை பழந்தமிழரின் பிரதான உணவுப் பொருளாகவும், பொருளாதாரச் செழிப்பினை உணர்த்துவதாகவும் உழவர்களின் வாழ்வை எடுத்துரைப்பதாகவும் அமைந்துள்ளது.


**ISBN: 978-81-997928-9-0**

### நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்)

கடலும் கடல் சார்ந்த இடமும், தலைவன் பிரிந்து சென்றதால் ஏற்படும் இரங்கல், வருத்தம் நிறைந்த நிலமாக நெய்தல் வரையறுக்கப்பட்டுள்ளது. தாழை, கண்டல், புன்னை, ஞாழல், அத்தியல், சங்கு, அலர் போன்றவை இங்கு காணப்படும் தாவரங்கள். புன்னைமரம், தலைவியின் வருத்தத்திற்கு சாட்சியாகவும், புன்னைமரங்கள் நிழல் தருவனவாகவும், கடற்கரை நிலத்தின் அழகை மெருகூட்டுபவனவாகவும் கடலோர வாழ்வின் அடையாளமாகவும் விளங்குகிறது.

### பாலை (மணலும் மணல் சார்ந்த இடமும்)

வறண்டு போன நிலம் பிரிதல் நிலமாக பாலை வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு பாலை, ஓமை,, இலுப்பை, கள்ளி, எருக்கலை, வெங்காயம் போன்ற வறண்ட நிலத்தாவரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்தத் தாவரங்கள் தலைவன் பிரிந்து சென்ற தலைவியின் துயரத்தையும், காட்டின் கடுமையையும், பயணத்தின் இடர்களையும் உணர்த்தப் பயன்படுகின்றன. இவ்வாறு தொல்காப்பியர் நிலங்களை அவற்றின் தன்மைக்கு ஏற்ப பாகுபாடு செய்து அவற்றின் தாவர வகைகளையும் கருப்பொருளாக வகைப்படுத்திய யை அறியமுகிறது.

### சங்கத்தமிழர் வாழ்வில் தாவரங்கள்

சங்க இலக்கியம் சித்தரிக்கும் தாவரங்கள், வெறும் இயற்கை அழகின் அங்கங்கள் மட்டுமல்லாமல், பழந்தமிழர்களின் அன்றாட வாழ்வின் இன்றியமையாத கூறுகளாகவும் இருந்துள்ளன.

### உணவுஆதாரங்கள்

நெல், வரகு, தினை, சாமை போன்ற தானியங்களும், கரும்பு, வாழை, மா, பலா போன்ற


ISBN: 978-81-997928-9-0

பழங்களும் சங்க இலக்கியத்தில் உணவுப் பொருட்களாகப் பரவலாகப் பேசப்படுகின்றன. காடுகளில் கிடைக்கும் கிழங்கு வகைகள், தேன், சிறுதானியங்கள் ஆகியவை குறிஞ்சி நிலமக்களின் உணவாக இருந்தன.

**மருத்துவம்**

மூலிகைகள், வேர்கள், பட்டை, இலைகள் ஆகியவற்றின் மருத்துவக் குணங்கள் பற்றிய நுண்மையான அறிவு சங்கத் தமிழர்களிடம் இருந்ததை இலக்கியக் குறிப்புகள் உணர்த்துகின்றன. குறிப்பிடப்படாத பல தாவரங்கள், நோய்களைக் குணப்படுத்த பயன்படுத்தப்பட்டு உள்ளன.

**வீட்டுப் பொருள்கள் மற்றும் கருவிகள்**

மூங்கில், பனை ஓலை, தென்னைநார், பல்வேறு மரவகைகளின் கட்டைகள் ஆகியவை வீடுகட்டுவதற்கும், கூரைகள் வேய்வதற்கும், படகுகள் செய்வதற்கும், அன்றாடப் புழங்குபொருட்களை உருவாக்குவதற்கும் (கூடைகள், பாய்கள்) பயன்படுத்தப்பட்டதை இலக்கியங்கள் காட்டுகின்றன.

**அழகு மற்றும் அலங்காரம்**

சங்க இலக்கியப் பாடல்களில், பெண்கள் மலர்களைச் சூடுவதும், மாலைகளாக அணிவதும், வீடுகளை மலர்களால் அலங்கரிப்பதும் பரவலாகக் காணப்படுகிறது. காதலர்கள் ஒருவருக்கொருவர் மலர்களைப் பரிமாறிக் கொண்டனர். பூத்தொடுத்தல் ஒருகலையாகப் போற்றப்பட்டது.

**சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள்**

தெய்வங்களுக்குப் படைத்தல், போருக்குச் செல்லும் வீரர்கள் குறிப்பிட்ட பூக்களைச் சூடுதல்,

 **ISBN: 978-81-997928-9-0**

வென்றி பெற்ற மன்னர்கள் வாகைமலர் சூடுதல், துணங்கைக் கூத்து, குன்றக் குரவை போன்ற சடங்குகளில் மலர்களும் இலைகளும் பயன்படுத்தப்பட்டன. சிலமரங்கள் புனிதமானவையாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டன. மலர்களை,

**"கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப் பூவொடு**
**புதல்பூ என்று இவை நால்வகைப் பூவே"**

**(பிங். நிகண்., 2781)**

என்று *பிங்கலநிகண்டு* வகைப்படுத்துகின்றது.

**பாசி**

அணிலின் வால், பால் கதிர் கொண்ட ஊகம்புல், மணமிக்க புல்லாகிய நரந்தம், பசும்புல், நுண்புல், முற்றா இளம்புல், முளிபுல், என்று ஊகம்புல்லும் நரந்தம்புல்லும் பொதுநிலையில் புல்லின் வளரி இயல்பும் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

**"விழுந்தோர் மாய்க்கும் குண்டுகயத்து அருகா**
**வழும்பு கண் புதைத்த நுண்ணீர்ப் பாசி**
**அடிநிலை தளர்க்கும் அருப்பம்"**

**(மலைபடு., 220-22)**

என்ற மலைபடுகடாம் வரிகள் பாசித்தாவரத்தின் வழுக்கும் இயல்பை வழும்பு என்ற சொல்லால் குறிக்கிறது.

**"கிடங்கில் அன்ன இட்டுக் கரைக் கான்யாற்று**
**கலங்கும் பாசிநீர் அலைக் கலாவ" (நற்., 65)**

என்று நீரின் அலையால் பிரிந்தும் சேர்ந்தும் பரவும் தன்மைக் கொண்ட பசிய நிறமுடைய பச்சைப்பாசியை குறிக்கிறது. இவை அன்றி இழைப்பாசி கொட்டைப்பாசி ஆகியனவும் காட்டப்படுகிறது. பசுங்கனிகங்கள் பொருந்தித் தம் உணவைத் தாமே தயாரித்துக் கொள்ளும்

 ISBN: 978-81-997928-9-0

இயல்பால் அமைந்த இதைத் தாவரமாக உணர்ந்து பாசி என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றனர் சங்கக் கவிஞர்கள்.

தம் உணவைத் தாமே தயாரிக்காமல் பிறவற்றைச் சார்ந்து வாழக்கூடியவை காளான்கள். இது பெசிடியோமைசீட் என்னும் வகையைச் சார்ந்தது. சங்க இலக்கியத்தில் காளான்கள் காளான் ஆம்பி என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளது.

**“ஆம்பிவான் முகை அன்ன கூம்புமுகிழ்**
**உறையமை தீந்தயிர் கலக்கி நிரைதெரிந்து”**
**(பெரு., 157-58)**

என்று பெருபாணாற்றுப்படையும்,

**“ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பின்**
**ஆம்பி பூத்த” (புறம். 164)**

புல்லென ;என்று புறநானூறும்,

**“அட்டில் காழ் சேர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த**
**பூழி படர்ந்த புழற்காளாம்பி” (சிறுபாண்., 132-34)**

என்று சிறுபாணாற்றுப்படையம் காளான் பற்றி குறிக்கப்படுகிறது. காளானின் தன்மை ஈரப்பசை பொருந்திய இருண்ட இடங்களில் குறிப்பாக புழுதியில் தோன்றுவன. அதையே பலநாள்கள் அடுதொழில் நடைபெறாத அடுப்பு சமையலறைச் சுவர்கள் ஆகியவற்றின் மீது முளைத்திருப்பதைக் காட்டியிருக்கிறது.

நார் என்பது மிக முக்கிய ஒன்றாகும். தாவரங்களின் சத்துக்களைக் கடத்துவதற்கு இந்த நார் பங்குவகிக்கிறது. முருங்கை மரத்தின் நார் தொடர்ச்சியற்றது. இதை,

**“சுரம் புல்லென்றஅற்றஅலங்குசினை**

 ISBN: 978-81-997928-9-0

**நாரில் முருங்கைநவிரல் வான்பூ" (அகம். 1)**

என்ற அகநானூற்றுப் பாடலின் முருங்கை மரத்தினை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இதன் மூலம் பண்டைய தமிழர்கள் தாவரங்களைப் பாதுகாத்தும் பயன்படுத்தியும் வந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. எளிதில் முறியும் இயல்பினாலே இது முருங்கை என்னும் பெயர் பெற்றதென்பர்.

வாழை தென்னை மரல் சணல் பாலை ஆம்பல் ஆகியவற்றில் நீர் கடத்தும் நார் பற்றிய உண்மை சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புலன் உணர்வு பெற்ற தாவரங்களாக நெருஞ்சி அனிச்சம் ஆகிய தாவரங்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன. தரைத்தாவரமான நெருஞ்சி மலர்ந்ததும் கதிரவனின் ஒளியை நோக்கி திரியும் தன்மையை,

**"சுடரொடுதிரிதரும் நெருஞ்சி" (அகம். 336)**

**"பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ**
**ஏர் தரு சுடரின் எதிர் கொண்டாஅங்கு"**
**(புறம்., 155)**

என்ற பாடல் வரிகளும்,

**"தூநீர் பயந்த துணையமை பிணையல்**
**மோயினள் உயிர்த்த காலை மாமலர்**
**மணியுரு இழந்தஅணி அழிதோற்றம்" (அகம்., 5)**

என்ற வரிகளும் தாவரங்களின் புலன்உணர்வை எடுத்துக்காட்டுகின்றது

**குறிஞ்சிப் பூ**

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இதன் தனித்தன்மை, களவுக் காதலின் அரியதன்மையை


**ISBN: 978-81-997928-9-0**





உணர்த்தியது. இது தலைவன், தலைவி இருவரும் ஒன்று சேர்ந்த மகத்தான தருணத்தைக் குறிப்பதாகஅமைந்தது.

**வேங்கைமரம்**

களவொழுக்கம் முதிர்ந்து, வெளிப்படும் நிலையை உணர்த்தும் குறியீடு. வேங்கைமரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடப்பதைப் பார்த்து, தலைவியின் மேனி பூத்திருக்கலாம் எனத் தாய்மார் ஐயுறும் நுட்பமான குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உண்டு. இது களவுக் காதலின் சமூக வெளிப்பாட்டைக் காட்டுகிறது.

**தாமரை மற்றும் குவளை**

நீர்நிலைகளில் காணப்படும் பூக்கள். தாமரை அழகு, தூய்மை, வளமை ஆகியவற்றைக் குறிக்க, குவளை மலர் தலைவியின் கண்களுக்கு உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆலம் (அரசும்), அரசு**

ஆலம் மற்றும் அரசு நிழல் தரும் பெரிய மரங்கள். இவை மக்கள் கூடும் இடமாகவும், பக்திக்குரிய மரங்களாகவும் கருதப்பட்டு மக்கள் இதனை வழிப்பட்டுவந்தனர்.

**சந்தனமரம்**

சந்தனம் அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கவும், மங்கள பொருளாகவும், இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பொருட்களில் இன்றிமையா பொருளாகவும் இருந்து வருகின்றது. மேலும் பண்டைய காலங்களில் வாசனைபொடி தயாரிக்கவும் பயன்படுத்தபட்டது. அம்மரங்களை இன்றைய காலம் வரைக்கும் போற்றி பாதுகாத்து வந்துள்ளனர். சந்தனத்தின் பெருமையையும் சந்தனம் பிறந்த இடத்திற்கு மட்டும் பயன்படாமல் மற்றவருக்கும டி;பயன்படுகிறது என்பதனை

 **ISBN: 978-81-997928-9-0**

**"பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம்**
**என்செய்யும்" (கலி., 9**

என்ற கலித்தொகை பாடல் சந்தனமரம் உயரமாக வளர்வது. குடமலை, பொதியில் மலைகளில் வளர்கிறது என்றும், மலையிடைப் பிறந்தும் இச்சந்தனம் மலைக்குப் பயன்படாது பிறருக்கே பயன்படுவது போல, மகளிரும் பருவத்தே பெற்றோருக்குப் பயன்படாது விரும்பினர்பாற் சென்று பயன்படுவர் என்று சந்தன மரத்தினை உவமையாக கூறியுள்ளமையை அறியமுடிகிறது.

**"இனவண்டு இமிர்புஊதும்**
**சாந்தமரத்தின் இயன்ற உலக்கையால்" (கலி., 43)**

சந்தன மரக்கட்டையில் மணமுள்ள சந்தன எண்ணெய் உண்டாகும். மரம் முதிர, முதிர எண்ணெய் மிகுந்துசுரக்கும். இதனால், சந்தனக் கட்டையினைத் தேய்த்து, அரைத்துச் சந்தனக் குழம்பாக்கி, உடம்பில் பூசிக் கொள்வர். மணத்துடன் சந்தனச் சாந்து உடலுக்குக் குளிர்ச்சியும் தரும். இதனைப் புலவர்கள் பாடியுள்ளனர்.

**"மலர் மார்பின் மறுப்பட்டசாந்தம்" (கலி., 73)**
**"வண்டுஊதுசாந்தம் வடுக்கொளநீவிய" (கலி., 93)**
**"ஆரம் காழ்வைகடியிரும் புன்னை" (குறிஞ்., 93)**

எனக் கபிலர், ஆரம் எனப்படும் சந்தன மலரையும் பிறமலர்களோடு குறிப்பிடுகின்றார். ஆயினும், ஆரத்தின் மலரில் நறுமணமில்லை. சந்தனம் பரப்பும் நறுமணம் அதன் மரத்தில் தான் உள்ளது. இம்மரம் சாந்தம், சந்தனம் என்றும் குறிப்பிடப் படுகின்றது.

**"சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப" (குறுந்., 376)**

பட்டினப்பாலைகடல்வவழிகந்தபொருட்களைபற்றிகுறிப் பிடம் பொழுது சந்தனத்தின் சிறப்பினையம்

 ISBN: 978-81-997928-9-0

எடுத்தரைக்கின்றார். சந்தனமரம், குடமலை, பொதிய மலை முதலான மலைகளில் வளரும் என்பதைப் புலவர்கள் கூறுவர்.

**“ஆரம் நாறும் மார்பினை” (குறுந்., 198)**

சந்தனமரம் உயரமாகவளரும். நீரில் கலந்த தேறலை, அறியாது உண்ட கடுவன் சந்தனமரத்தில் ஏறமுடியாமல் தவித்தது என்றும், சந்தனமரத்தில் மிளகுக் கொடி ஏறிப் படரும் என்றும், இம்மரத்தினால் செய்யப்பட்ட உலக்கையால், ஐவனநெல்லைப் பாறை உரலிட்டுக் குத்துவர் என்றும் புலவர்கள் கூறுவர். இத்தகைய இலக்கியச் சான்றுகள் சந்தனமரத்தின் சிறப்பினையும் சான்றோர்கள் இதனை பாதுகாத்து வளர்த்து பல பொருட்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தினர் என்பதையும், மக்களின் வாழ்வில் இன்றியமையா பங்கினை சந்தனமரம் பெற்றுள்ளதையும் அறிய முடிகின்றது.

**அத்திமரம்**

சங்க இலக்கியத்தில் ‘அதவம்’ என்றும், ‘அத்தி’ என்றும் கூறப்படும் இச்சிறுமரம் பூத்துக் காய்க்குமாயினும் மலர்கள் வெளிப்படையாகத் தெரியா. ‘அத்திபூத்தாற் போல’ என்னும் பழமொழியினாலேயே அத்திபூக்கும் என்பதை அறியமுடிகிறது. இருப்பினும் பிற்கால இலக்கியங்கள் கூறும் ‘பூவாதேகாய்க்கும் மரங்களும் உளவே’என்றதற்கு எடுத்துக்காட்டு‘அத்தி, ஆல்’ முதலியமரங்கள் ஆகும்.

அத்தியில் ஆண் மரமும் பெண் மரமும் தனித் தனியாகவளரும். இவற்றில் முறையே ஆண் பூக்களைக் கொண்ட‘கோளி’யும், பெண் பூக்களைக் கொண்ட‘கோளி’யும் உண்டாகும். ஆண் மலரில்

உண்டாகும் மகரந்தம், பெண் மலரில் உள்ளசூல் முடியில் வண்டினத்தால் கொண்டு சேர்க்கப் பெறும். மகரந்தச் சேர்க்கை பெற்ற பெண் மரத்திலுள்ள ‘கோளிகள்’ காயாகிப் பின்னர் பழமாகும். பழம் செந்திறமானது. இதன் செம்மை நிறம் மந்திமுகத்தின் செம்மைக்குஉவமையாகக் கூறப்பட்டது.

**“அதவத் தீங்கனிஅன்னசெம்முகத்**
**துய்த்தலை மந்திவன்பறழ் தூங்க” (நற்., 95)**

அத்திமரம் ஆற்றங்கரைகளில் வளரும் என்றும், இதன் கிளைகள் வெண்ணிறமானவை என்றும், இதன் கனிமிக மென்மையானது என்றும், நண்டு மிதித்த இதன் கனிகுழையும் என்பதை

**“ஆற்றயல் எழுந்தவெண்கோட் டதவத்து**
**எழுகுளிறு மிதித்த ஒருபழம் போல” (குறு., 24)**

என்ற குறுந்தொகைப் பாடல் விளக்குகின்றது. இதன்மூலம் அத்திமரத்தின் சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**குரவ மரம்**

‘குரவம்’ ஒரு சிறுமரம். இதனைக் குரா, குரவு, குருந்தம், குருந்து என்றெல்லாம் கூறுவர். நிகண்டுகள் இதற்குப் புன எலுமிச்சை, கோட்டம், குடிலம், கோபிதாரம் என்ற பெயர்களைக் கூட்டுகின்றன. இம்மரம் கோவலரின் கொல்லைக் குறும்புனத்தில் வளருமென்றும், இதன் அடிமரம் குட்டையானதென்றும், குவிந்த இணரையுடையதென்றும், வெள்ளிய பூக்களை உடையதென்றும் இளந்தச்சனார் கூறுவர்.

**“கொல்லைக் கோவலர் குறும்புனம் சேர்ந்த**
**குறுங்காற் குரவின் குவியிணர் வான்பூ” (நற்., 266)**

 **ISBN: 978-81-997928-9-0**

இருப்பினும் இதன் கிளைகள் ஓங்கி நீண்டுவளர்வதையம், இதன் நீழலில் தனது குட்டியுடன் பெண்மான் இரலையுடன் வந்து தங்குவதையும் இதன் கிளைகளில் வதியும் குயிலினம் அங்கிருந்து கூவுமென்பதையும் அறியமுடிகின்றது.

**"சிறுமறிதழீஇயநெறிநடைமடப் பிணை**
**வலந்திரிமருப்பின் அண்ணல் இரலையொடு**
**அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய"**
**(அகநா., 304: 8-10)**

என்ற பாடலின் மூலம் குரவமரத்தின் பண்பினை எடுத்துரைக்கின்றது.

இம்மரம் கோங்கு, மராஅம், மரவம், புன்கு முதலிய மரங்களுடன் புனத்திலும், சுரத்திலும், பொழில்களிலும் வளர்ந்து இளவேனிற் காலத்தில் அரவின் பற்களை ஒத்த அரும்பீன்று மலரும் என்பர்.

**"...குரவு மலர்ந்தது**
**அற்சிரம் நீங்கியஅரும்பதவேனில்" (அகநா., 97)**
**"அரவுஎயிற்றன்னஅரும்புமுதிர் குரவின்**
**தேன் இமிர் நறுஞ் சினைத் தென்றல் போழ**
**குயில் குரல் கற்றவேனிலும் துயில் துறந்து"**
**(அகநா., 237)**

**"குரவம் மலர மரவம் பூப்ப**
**சுரன் அணிகொண்டகானம்" (ஐங்:257 )**
**"பல்வீ படரிய பசுநனைக் குரவம்**
**பொரிப்பூம் புன்கொடு பொழில் அணிகொளாஅ"**
**(குறுந்., 341)**

குருந்தமரம் குவிந்த இணரை உடையது. இதனுடைய போது செழுமையானது. வெண்மை நிறமான இதன் மலரில் நறுமணம் வீசும். பூக்காம்பு குட்டையானது.

 **ISBN: 978-81-997928-9-0**

குறுமலர்கள் பல ஒருங்கே பூக்கும். இம்மலரைத் தெய்வமலராகத் திருவாசகமும் திருவாய் மொழியும் கூறுகின்றன. இடையர் மகன் சூடிய குறிப்பும் நற்றிணையில் காணப்படும். **“ஆடுடை இடைமகன் சூட” (நற்., 266)** குரவ மரத்தின் காய் சற்றுப் பருத்து நீண்டு சாம்பல் நிறமாகத் தொங்கும். இதனைப் பாவையாகக் கொண்டு மகளிர் தொட்டிலிலிட்டுத் தாலாட்டி விளையாடுவர். இதற்குக் ‘குரவம் பாவை’ என்றுபெயர். இதனைச் ‘செய்யாப் பாவை’ என்பதும் உண்டு. இளவேனிற் காலத்தில் இதன் காயைக் கொய்து விளையாடுவர் என்பர்.

**“அவரோவாரார் தான் வந்தன்றே**
**நறும்பூங் குரவம் பயந்த செய்யாப் பாவை**
**கொய்யும் பொழுதே” (ஐங்., இளவேனிற்., 344)**

இக்குருந்தமரத்தின் நிழலின் இறைவன் குருவடிவாக எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டான் என்பதை

**“செடிகொள் வான் பொழில் சூழ்**
**திருப்பெருந்துறையில்**
**செழுமலர்க் குருந்தம் மேவிய**
**அடிகளே அடியேன் ஆதரித்தழைத்தால்**
**அதெந்துவே என்றருளாயே.” (மாணிக்கவாசகர்)**

என்று மாணிக்கவாசகர் நெஞ்சுருகப் பாடுவார். இவ்வாறு குரவ மரத்தின் மலர் பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுகிறது. இவற்றைத் தாவர நூல், வெண்மையான பூக்களை உடையது. நறுமணம் உள்ள மலர், முன்பனிக்காலத்தில் கொழுந்துவிட்டு பின் பனிக்காலத்தில் மலரும் என குறிக்கத்தக்கது.

**புன்கமரம்**

பாலைநிலத்தில் இடம்பெறும் மற்றொருவகை

 **ISBN: 978-81-997928-9-0**





புன்கமரமாகும். இப்புன்கமரம் பற்றி தாவர நூல் வழி சில செய்திகளை அறியமுடிகிறது. இலையுதிர் மரம். இலைகள் சிற்றிலைகள், இரட்டைகளானவை மலர்கள் இளம் சிவப்பு தோய்ந்த வெண்மையானது. சமவெளிகள், கடற்கரையில் காணப்பெறும் மலைப்பகுதியில் வளரும். இவ்வாறு இடம்பெறும் புன்கமரம் பற்றி ஐங்குறுநூறு பாடல் வரி விளக்கம் தருகிறது.

**"எழில் தகை இளமுலைபொலியப்**
**பொருப் பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே"**

**(ஐங்., 347)**

எனும் மேற்கூறிய ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் தோழி, தலைவன் பொருள் தேடி திரும்பவராத நிலையினைக் குறிக்கும் இடத்தில் புன்கமரம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நெற்பொரியைப் போன்ற அழகிய பூக்களையும், அழகிய தளிர்களையும் உடைய புன்கமரம் இளவேனிற் காலத்தில் மலரும். இவ்விடத்தில் புன்கமரத்தின் மலர், தளிர் முதலிய உறுப்புகளைப் பாடல் அடி சுட்டுகிறது. இவற்றோடு சங்கமகளிர் தன் மார்பகத்தில் இதன் இலையை அரைத்துப் பூசிக்கொண்ட செய்தியை எண்ணும் போது, புன்கமரத்தின் இலையில் ஒருவகை குளிர்ச்சித் தன்மை காணப்பட்டிருக்க வேண்டும். புன்கமரத்தின் மலர் பொரி போன்று அளவில் சிறியதாகவும், உருண்டு வெண்மையாகவும் காணப்படுவதைப் பொரிப் பூம் என்றபாடல் அடி உணர்த்துகிறது.

இது போன்று குறுந்தொகைப் பாடல் அடியும் புன்கமரத்தின் மலரினைப் பொரிக்கு உவமைப்படுத்துகிறது. **"பொரிப்பூம் புன்கொடுபொழில் அணி" (குறுந். 341)** எனசுட்டப்பெறும் பாடல் அடி

 **ISBN: 978-81-997928-9-0**

இதனை வெளிப்படுத்துகிறது. மேலும் ஐங்குறுநூற்றுப் பாடல் புன்கமரத் தளிர் அழகுடன் காணப்படும் எனவிளக்குகிறது. இதனை, **“தளிர்ப் புன்கின் தாழ் காவின்” (பொருநர்., 196)** என இடம்பெறும் பொருநாராற்றுப்படைபாடல் அடியும் புன்கமரத்தின் தளிர் அழகுடன் காணப்படும் எனவும் இதன் இலைகளை ஆடையாக பயன்படுத்தினர் என்பதையும் வெளிக்காட்டுகிறது.

**கடம்புமரம்**

முருகக் கடவுளின் அடையாளமரமாக விளங்குகிறது. சங்கப் பாடல்களில் முருகனை “கடம்பமர் செல்வன்” எனக் குறிப்பிடுவதன் மூலம் கடம்புமரத்தின் சிறப்பினை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்தில் வெண்கடம்பமரம் பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்கள் சுட்டும் வெண்கடம்பரம் பற்றித் தாவர நூலில் குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை.

**“வலம் சுரி மராஅம் வேய்ந்து நம்**
**மணம் கமழ் தண் பொழில் மலரும்” (ஐங்., 348)**

பொருள் காரணமாகப் பிரிந்த தலைவன் வரவில்லை. இளவேனில் பருவம் தொடங்கிவிட்டது என்று கூறும் தோழி கூற்றுப் பாடலில் வெண்கடம்பமரம் எடுத்தாளப்பட்டுள்ளது. வலமாகச் சுழிந்த பூக்களைக் கொண்ட வெண்கடம்பமரம் நறுமணம் கமழும் மலர்களைத் தன்னகத்தே கொண்டது. இங்கு கடம்பமரத்தின் மலர் வலது பக்கமாக சுழிந்துக் காணப்படும் என்றுமலரின் வடிவத்தையும் நறுமணமிக்க மலர்களை கொண்டது எனவும்,பாடல் அடிகள் முலம் அறியமுடிகிறது. அகநானூறும், **“வலம் சுரி மராஅத்துச்**

 **ISBN: 978-81-997928-9-0**




**சுரம் கமழ் புதுவீ" (அகம்., 83)** கடம்பமரத்தின் மலரானது குதிரையின் தலையில் காணப்படும் மயிர் போன்று வலப்புறமாக சுற்றிச் சுருண்டு மலரும் என்று ஐங்குறுநூற்று பாடல் வரியோடு தொடர்புப்படுத்தி மலரின் வடிவம், மலரின் நறுமணம் போன்ற கூறுகளை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு காணப்படும் மலர்கள் இலைகள் இன்றி உதிர்ந்த நிலையில் காம்புகளில் காணப்படும். **"அரும்பு அற மலர்ந்தஆய்ப்பூ மரா அத்து" (மேலது. 257)** என இடம்பெறும் அகநானூற்றுப் பாடல் வென்கடம்பமரத்தில் இலைகள் இன்றி அதிகமான மலர்கள் காணப்படுகின்றது. இதனை மேலும் அரண் செய்யும் விதமாக, **"தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை" (குறுந்., 211)** என மேற்கூறிய குறுந்தொகைப் பாடல், கடம்பமரம் இலைகள் உதிர்ந்து, அக்காம்புகளில் மலர்ந்து காட்சியளிப்பதை விளக்குகிறது. இவ்வாறு ஐங்குறுநூற்றுப் பாடல் அடி மலரின் வடிவத்தைக் கூறுவதோடு கடம்பமரத்தின் அடிப்பகுதியின் அமைப்பையும் குறிப்பிடுகிறது.

குறுகிய கிளைகளும் (கொம்பு) உடையது என்று மரத்தின் அடிப்பகுதியையும், கொம்புகளையும் பற்றி விளக்குகிறது. இவ்வாறு இடம் பெறும் அடிப்பகுதி சிவப்பு நிறமாக காணப்படும் என்று நற்றிணைப்பாடல் அடி கூறுகிறது. **"செங்கால் மராஅத்துஅம்புடைப் பொருந்தி' (நற். 148)** என மேற்சுட்டிய பாடலடி வெண்கடம்ப மரத்தின் அடிப்பகுதி சிவந்து காணப்படும் என்பதை செங்கால் என்று புலப்படுகிறது.

**பாதிரி**

பாலை நிலத்தில் இடம்பெறும் மற்றொருமரம் பாதிரிஎனும் இனமாகும். பாதிரிமரம் பற்றி, **"அம் சினைப்**

 **ISBN: 978-81-997928-9-0**

**பாதிரிஅலர்ந்தென / செங்கண் இருங்குயில் அறையும்" (ஐங்., 45)** என இடம் பெறும் ஐங்குறுநூறு பாடல், தலைவன் பொருள்தேடி திரும்பவராத நிலையில், பாதிரிமலர்ந்து இளவேனில் பருவம் தொடங்கிய நிலையை சுட்டுகின்ற இடத்தில் இம்மரம் இடம் பெறுகிறது. அழகிய கிளைகளை உடைய பாதிரி மலர்ந்து விட்டது என்பதை குயில் உலகிற்கு அறிவிக்கும். இவ்விடத்தில் பாதிரிமரத்தின் கிளைகள், மலர் முதலிய உறுப்புகளை ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது.சங்ககால மக்கள் இம்மலரினை மல்லிகையுடன் சேர்த்து தமது கூந்தலில் சூடிமகிழ்ந்த செய்தியினை,

**"மாக்கொடிஅதிரற் பூவொடுபாதிரித்**
**தூத் தகட்டுஎதிர் மலர் வேந்தகூந்தல" (நற்., 52)**

என்ற நற்றிணைப் பாடல் அடி உணர்த்துகிறது. இதன் மூலம் பாதிரி மலர் மணமுடையது என்பது வெளிப்படுகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் தாவரங்கள் வெறும் வர்ணனைப் பொருள்களாக அமையாமல், பழந்தமிழரின் வாழ்வியல், பண்பாடு, பொருளாதாரம், போர் நெறிமுறைகள், காதல், வீரம், நம்பிக்கை, சடங்குகள், சுற்றுச்சூழல் பார்வை என அனைத்திலும் ஆழமாகப் பிணைந்துள்ளன. ஒவ்வொரு திணைக்கும் உரிய தாவரங்கள், அக மற்றும் புறஉணர்வுகளின் குறியீடுகள், அன்றாட வாழ்வில் அவற்றின் பயன்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மீதான அக்கறை எனப் பலநிலைகளில் தாவரங்களின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. சங்க இலக்கியம், இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்க்கைக்குத் தாவரங்கள் எவ்வாறு அடிப்படையாக


**ISBN: 978-81-997928-9-0**

அமைந்தன என்பதைப் பறை சாற்றும் அரிய வரலாற்று மற்றும் இலக்கியச் சான்றாக இன்றும் கம்பீரமாக நிற்கிறது. சங்க இலக்கியத்தில் தாவரங்கள் மீதானஆய்வு,பழந்தமிழரின் இயற்கை அறிவையும், அதைப் போற்றிய அவர்களின் சீரிய வாழ்வையும் நமக்கு உணர்த்துகிறது.

## குறிப்புகள்


[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

[2] ஔவை துரைசாமி நாட்டார். *புறநானூறு*. கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

[3] ஔவை துரைசாமி நாட்டார். *அகநானூறு*. கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

[4] மாணிக்கம், அ. உ. *குறுந்தொகை*. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999.

[5] *பொருநராற்றுப்படை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2021.

[6] ஔவை சு. துரைசாமி. *ஐங்குறுநூறு*. கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

[7] ஔவை சு. துரைசாமி. *நற்றிணை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

[8] ஔவை சு. துரைசாமி. *குறுந்தொகை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2006.

[9] புலியூர்கேசிகன். *திருக்குறள்* (உரை). பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2009.

[10] *பிங்கல நிகண்டு*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1917.

[11] கதிர்முருகு, டாக்டர். *மலைபடுகடாம்*. கௌரா பதிப்பகம், 2001.


 **ISBN: 978-81-997928-9-0**

[12] *சிறுபாணாற்றுப்படை*. சாரதா பதிப்பகம், சென்னை, 2021.

[13] *பெரும்பாணாற்றுப்படை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN: 978-81-997928-9-0**